பக்கங்கள்: 20

விலை: 30.00

# தீம்புனல்

THEEMPUNAL

வாராந்தப் பத்திரிகை

தீ : 01 புனல்:23 02.10.2021 சனிக்கிழமை வள்ளுவர் ஆண்டு 2052



நாடக ஆசிரியரை தேடும் பாத்திரங்கள்

பக்கம் 16



அரிசி அரசியல்: அரசாங்கத்துக்குச் சாதகமானதா? பாதகமானதா?

பக்கம் 18



தாமிரன்

## புலம்பெயர் அமைப்புக்களை பேச அழைப்பது தமிழர்களுக்கு தீர்வு தருவதற்காகவா?





ஜனாதிபதியின் ஐ.நா. உரை நாட்டில் பல்வேறு கருத்து நிலைப் பரிமாற்றங்களை ஏற்படுத்தியிருக்கின்றது. இன்றைய ஜனாதிபதி "நான் முற்றிலும் சிங்கள பௌத்த வாக்குகளால் தெரிவு செய்யப்பட்டவன். ஆதலால் எனது கரிசனை சிங்கள பௌத்த மக்கள் மீதே இருக்கும்" என வெளிப்படையாகத் தெரிவித்து வந்தவர் என்பது குறிப்பிடத்தக்கது. அந்த வகையில் தன் கூற்றுக்கு நேர்மையாகத்தான் அவர் இருந்து வருகின்றார். ஆனால் நிலைமை கொரோனாவுக்குப் பிந்திய பொருளாதார நெருக்கடிகள் அவர் பற்றிய எண்ணப்பாட்டை சிங்கள பௌத்த மக்களிடம் எதிர்மறையாக்கி வருகின்றது. பொருளாதார நெருக்கடிகளைச் சமாளிப்பதற்கான வழிமுறைகளைக் கையாள முடியாத அரசாக

▶19

## மக்கள் என்ன சொல்கிறார்கள் தலைவர்கள் என்ன செய்கிறார்கள்

சிக்மலிங்கம் றெஜினோல்ட்





நாட்டிலே என்ன நடந்து கொண்டிருக்கிறது என்று யாருக்குமே புரியவில்லை. ஆனால் ஏதோவெல்லாம் நடந்து கொண்டிருக்கின்றன. ஏதோவெல்லாம் என்றால், சிறைச்சாலைக்குள் புகுந்து அங்கிருந்த கைதிகளின் காதில் துப்பாக்கியை வைத்து மிரட்டுகிறார் அமைச்சர் ஒருவர்.

"இந்த வாரம் 7.87 பில்லியன் ரூபாய்கள் பெறுமதியான பணத்தை அச்சிடப் போகும் சிறிலங்கா அரசானது இந்த வருடத்தில் இது வரைக்கும் 217.1 பில்லியன் ரூபாய்கள் பெறுமதியான பணத்தை அச்சிட்டு சந்தையில் விட்டுள்ளதாக சொல்லப்படுகிறது. குறிப்பாகக் கொரோனாவின் தாக்கம் உச்சத்தைத் தொட்ட மார்ச் மாதத்திலிருந்து இதுவரைக்கும் அண்ணளவாக 213 பில்லியன் ரூபாய் பெறுமதியான பணத்தை அச்சிட்டு சந்தைக்குள் விட்டிருக்கிறது சிறிலங்கா அரசு.

ஏற்கனவே கொரோனாவின் தாக்கத்தால் உற்பத்தித்துறை படுமோசமாகப் பாதிக்கப்பட்டு உலகம் முழுவதும் பொருட்கள் தேங்கிக்கிடப்பது மட்டுமல்லாது ஏற்கனவே உற்பத்தி செய்யப்பட்ட பல பொருட்கள் விற்பனையின்றிக் காலாவதியாகி வீசப்படும் நிலையை எட்டியிருக்கிறது. சிறிலங்காவைப் பொறுத்தவரை, அந்நிய செலாவணியை ஈட்டக் கூடிய துறைகள் பெரும்பாலானவை இழுத்து

▶19

சீனாவுக்கு எதிரான இந்தோ – பசுபிக்கை மையப்படுத்திய

# அமெரிக்காவின் வியூகம் நெருக்கடியை எதிர்நோக்குகின்றதா?

ஐ.வி.மகாசேனன்

அரசியல் அதிகாரத்துக்கான போட்டி ஆகும். சர்வதேச அரசியல் தொடர்ச்சியாக வல்லாதிக்க அரசுகளின் அதிகாரப் போட்டிக்கான களமாகவே காணப்படுகிறது. வல்லரசு சக்திகள் அணிகளைத் திரட்டி அதிகாரத்துக்கான போட்டியை தொடர்கின்றன. குறிப்பாக, பனிப்போர் காலம் உலகை இருதுருவமாக்கியது. பனிப்போருக்குப் பின்னரான ஒற்றை மைய அரசியல் காலப்பகுதியிலும் அமெரிக்கா தனது அதிகாரத்தை நிலைநாட்டக் கூட்டணிகளையே தொடர்ந்து பேணி வந்தது. இந்நிலையில் தற்போது அதிகரித்துள்ள சீனாவுடனான அதிகாரப் போட்டியில் கூட்டணிகளூடாக சீனாவை எதிர்கொள்வதில் அமெரிக்கா கடுமையான நெருக்கடிகளை எதிர்கொண்டு வருகிறது. இக்கட்டுரையும் சீனாவிற்கு எதிரான கூட்டணிகளை உருவாக்குவதில் அமெரிக்கா முனைப்புப் செலுத்தினாலும் அதற்குள் குழப்பங்கள் அதிகரித்து வருகின்றது என்பதனைத் தேடுவதாக அமைக்கப்பட்டுள்ளது.

இரண்டாம் உலகப்போருக்குப் பின்னர் கடந்த 70ஆண்டுகளில் அமெரிக்கக் கூட்டணி வலையமைப்பு, அமெரிக்க வெளியுறவுக் கொள்கையின் மிக வெற்றிகரமான மற்றும் நீடித்த அம்சங்களில் ஒன்றாகும். இந்தக் கூட்டணிகள், முதலில் பனிப் போர் காலத்தில் சோவிய ஒன்றியத்தின் சோசலிச விரிவாக்கத்திற்கு எதிராக வடிவமைக்கப்பட்டது. தொடர்ந்து பனிப் போருக்குப் பிந்தைய காலத்தில் அமெரிக்கா தனது தேசிய நலனை முன்னிறுத்தி இஸ்லாமியர்களுக்கெதிரான வெள்ளை இனத்தவர்களின் ஆதிக்கத்திற்குக் கூட்டணியை பயன்படுத்தியது. அமெரிக்காவும் அதன் ஜனநாயக கூட்டாளிகளும் எந்தவொரு சாத்தியமான போட்டியாளர்களையும் விடப் பெரும் பொருளாதார மற்றும் இராணுவ நன்மைகளைக் கொண்டுள்ளனர். இவ்வலுவான கூட்டணியைக் கொண்டு சோவிய ஒன்றியத்திற்கு எதிரான போட்டியிலும், இஸ்லாமிய எழுச்சியைக் கட்டுப்படுத்துவதிலும் அமெரிக்கா தன் இலக்குகளையும் அடைந்தே உள்ளது.

ஆனால் அமெரிக்கா இப்போது புதிய வலிமையான சவாலை எதிர்கொள்கின்றது. சீனாவின் வளர்ந்து வரும் பொருளாதார, இராணுவ மற்றும் தொழில்நுட்ப செல்வாக்கிற்கு கூட்டாகப் பதிலளிப்பதில் கடும் நெருக்கடியை எதிர்கொள்கிறது. அமெரிக்க ஜனாதிபதி ஜோ பைடன் ஐ.நா பொதுச் சபையின் 76 ஆவது கூட்டத்தொடரில், சீனாவை நேரடியாகக் குறிப்பிடாமல், “நாங்கள் ஒரு புதிய பனிப்போர் அல்லது கடுமையான பிளவுகளாகப் பிரிக்கப்பட்ட உலகத்தை நாடவில்லை,” என்று கூறினார். எனினும் அமெரிக்காவின் இராஜதந்திர நகர்வுகள் யாவும் சீனாவுடனான அமெரிக்காவின் பனிப்போருக்கான உத்திகளையே உறுதி செய்கின்றது. குறிப்பாக, அமெரிக்க செனட் வெளிநாட்டு உறவுக் குழு பைடனின் நிர்வாகத்தின் கீழ் (2021) சீனாவுடன் ஒரு புதிய பனிப்போரின் மெய்நிகர் அறிவிப்பை உருவாக்கும் மூலோபாய போட்டிச் சட்டகத்தை (Strategic Competition Act - SCA) அங்கீகரித்தது. அமெரிக்கா மற்றும் அதன் நட்பு நாடுகளுக்கு சீனா மிகவும் தீவிரமான மற்றும் வெளிநாட்டு அச்சுறுத்தலாக மூலோபாய போட்டிச் சட்டகம் சித்தரிக்கிறது. உலகெங்கிலும் உள்ள ஜனநாயகத்தை சீர்குலைக்க தீர்மானிக்கப்பட்ட இரக்கமற்ற ஆக்கிரமிப்பாளர் என்று சீனா விவரிக்கப்பட்டுள்ளது. சீனாவுடன் நல்ல உறவு களைப் பேணுவதன் முக்கியத்துவத் தைப் பற்றி மூலோபாய போட்டிச் சட்டகத்தில் ஒரு குறிப்புக் கூட காணப்படவில்லை. சீனா, “எதிர்கால சமாதானம், செழிப்பு மற்றும் சர்வதேச சமூகத்தின் சுதந்திரத்தை ஆபத்தில் ஆழ்த்தும்” என்று அச்சட்டகம் சந்தேகத்திற்கு இடமின்றிக் கூறுகிறது. இதனை முன்னிறுத்தியே சீனாவிற்கு எதிரான கூட் டணியை உருவாக்குவதில் அமெரிக்கா தீவிரமாகச் செயற்பட்டு வருகிறது. ஐரோப்பா மற்றும் இந்தோ-பசிபிக் ஆகிய இரு பிராந்தியங்களிலும் உள்ள நட்பு நாடுகளை அரவணைத்து சீனா முன்வைக்கும் சவால்களை மிகவும் தீவிரமாகப் பரிசீலிக்கத் தொடங்கியுள்ளன. வழமையான ஜி-07, நேட்டோ என்பதைத் தாண்டி இந்தோ-பசுபிக் பிராந்தியத்தை மையப்படுத்தி புதிய கூட்டுக்களையும் உருவாக்கி வருகிறது.

> **அமெரிக்காவின் பிரதான பாதுகாப்பு கூட்டான நேட்டோவை சீனாவிற்கு எதிராகக் கட்டமைப்பதில் அமெரிக்கா மும்மரமாக இறங்கியுள்ளது. இருதுருவ அரசியல் ஒழுங்கில் ரஷ்யாவிற்கு எதிரான பனிப் போர்க் காலத்திலிருந்து அமெரிக்காவின் அதிகாரத்தைத் தக்க வைப்பதற்கான பாதுகாப்புக் கூட்டாக நேட்டோ செயற்படுகிறது.**

ஒன்று, அமெரிக்காவின் பிரதான பாதுகாப்புக் கூட்டான நேட்டோவை சீனாவிற்கு எதிராகக் கட்டமைப்பதில் அமெரிக்கா மும்மரமாக இறங்கியுள்ளது. இருதுருவ அரசியல் ஒழுங்கில் ரஷ்யாவிற்கு எதிரான பனிப்போர் காலத்திலிருந்து அமெரிக்காவின் அதிகாரத்தை தக்க வைப்பதற்கான பாதுகாப்புக் கூட்டாக நேட்டோ செயற்படுகிறது. இந்நிலையில் தற்போது அதிகரித்துவரும் சீனாவுடனான நெருக்கடியைச் சீர்செய்யவும் நேட்டேவைப் பயன்படுத்த அமெரிக்கா தீர்மானித்துள்ளது. பிரஸ்ஸல்ஸில் ஜூன் (2021) மாதத்தில் நடைபெற்ற நேட்டோ மாநாட்டில் நேட்டோ சீர்திருத்தம் மற்றும் மீள்வோர் பனிப்போர் நகர்வுக்கான நேட்டோ தயார்படுத்தல் தொடர்பில் விவாதிக்கப்பட்டது. குறிப்பாகச் சீனாவிற்கு எதிரான அமெரிக்காவின் அதிகாரப் போட்டியில் நேட்டோவின் பயன்பாடு தொடர்பிலேயே அதிகமாக உரையாடப்பட்டது. மேலும், அமெரிக்க வெளியுறவுச்செயலாளர் பிளிங்கன் கடந்த மார்ச் (2021) மாதம் மேற்கொண்ட தனது முதல் ஐரோப்பிய பயணத்தின் போது பிரஸ்ஸல்ஸில் தனது ஐரோப்பிய சகாக்களைச் சந்தித்து உரையாடினர். அவர் தனது உரையில், மின்சாரக் கார்கள் முதல் பயோமெடிசின் வரையிலான பகுதிகளில் மேலாதிக்கத்திற்காக அமெரிக்காவும் சீனாவும் போட்டியிடுகையில், இரண்டாம் உலகப் போருக்குப் பிறகு அமெரிக்காவும் அதன் நட்பு நாடுகளும் கட்டிய சர்வதேச வர்த்தக ஒழுங்கை பெய்ஜிங் குறைமதிப்பிற்கு உட்படுத்தியதாகவும் குற்றம் சாட்டினார். மேலும், நேட்டோ தலைமையகத்தில் நின்று, “சர்வதேச ஒழுங்குக்கான நமது நேர்மறையான பார்வையை உருவாக்க நாங்கள் ஒன்றாக வேலை செய்தால், எந்த விளையாட்டு மைதானத்திலும் சீனாவை வெல்ல முடியும் என்று நாங்கள் நம்புகிறோம்.” என்று சீனாவுடனான அமெரிக்காவின் அதிகாரப் போட்டியில் நேட்டோ கூட்டணியின் ஈடுபாட்டை பிளிங்கன் வலியுறுத்தி இருந்தார்.



இரண்டு, அமெரிக்கா தனது மற்றொரு வர்த்தக பங்காளிகளான ஜி-7 கூட்டையும் சீனாவிற்கு எதிரான அமெரிக்கப் போட்டியில் களமிறக்குவதற்கான முன்முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. ஜூன் (2021) மாதம் லண்டனில் நடைபெற்ற ஜி-7 தலைவர்கள் மாநாட்டில் அமெரிக்கா சீனாவுக்கு எதிரான தனது திட்டத்தை முன்மொழிந்தது. அதாவது சீனாவின் ‘பி.ஆர்.ஐ’ (Belt and Road Initative) திட்டத்துக்கு மாற்றாக ‘பி3.டபிள்யு’ (Build Back Better World) திட்டம் முன்மொழியப்பட்டது. இந்தத் திட்டமும் பாதைகளாலும் சாலைகளாலும் கட்டமைக்கப்படும், 40 டிரில்லியன் டாலர் மதிப்பில் உருவாகும், ஏழை நாடுகளிலும் நடுத்தர வருமானமுள்ள நாடுகளிலும் உள்கட்டமைப்பு மேம்படுத்தப்படும், ஜி-7 நாடுகள் பங்கேற்கும், சீன ஏகாதிபத்தியம் முறியடிக்கப்படும் என்பனவற்றிற்கு அப்பால் இப்போதைக்கு பி3.டபிள்யு திட்டம் மற்றும் செயற்பாடுகள் தொடர்பில் மேலதிக விவரங்கள் எவையுமில்லை.

மூன்று, இந்தோ-பசுபிக் மூலோபாயத்திட்டம். அமெரிக்காவின் சீனாவிற்கெதிரான அதிகாரப்போட்டியில் கட்டமைக்கப்பட்ட பிரத்தியோகமாகத் திட்டமாக இது காணப்படுகிறது. இந்தோ-பசுபிக் என்பது சீனா மற்றும் இந்தியா ஆகிய இரு நாடுகளின் வளர்ச்சியின் பிரதிபலிப்பாகும். இந்தோ பசுபிக் மூலோபாயத் திட்டம் நிறுவனமயப்படுத்தப்பட்டதொரு கட்டமைப்பாக நிறுவப்படாத போதிலும் அமெரிக்க முன்னாள் ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் காலத்தில் அமெரிக்காவின் வெளியுறவுக்கொள்கையில் பிரதான தாக்கத்தை செலுத்தியிருந்தது. இந்தோ-பசுபிக் முதலில் இந்தியப் பெருங்கடல் மற்றும் பசிபிக் பெருங்கடல் ஆகிய இரண்டு பெருங்கடல் பகுதிகளை உள்ளடக்கிய ஒரு சமுத்திர அரசியல் (Oceanic Politics) கருத்து ஆகும். இது ஒரு புதிய கருத்து அல்ல. 10 ஆண்டுகளுக்கு முன்பு, முதன்முறையாக, கடல்சார் மூலோ பாய நிபுணர் மற்றும் புதுடில்லி தேசிய கடல்சார் அறக்கட்டளையின் நிர்வாக இயக்குநர் குர்பிரீத் எஸ். குரானா இந்தோ-பசிபிக் வியூகம் என்ற வார்த் தையைப் பயன்படுத்தினார். ஆசிய பிராந்தியத்தில் சீனாவின் விரிவாக்க நடவடிக்கை தீவிரமாக நடைபெற்று வரும் நிலை யில் இந்தோ-பசுபிக் திட்டம் முக்கியத்துவம் பெறுவதாக அமெரிக்காவின் தேசிய பாதுகாப்பு ஆலோசகர் ராபர்ட் ஓ பிரையன் வலியுறுத்தியுள்ளார். ட்ரம்ப் பயன்படுத்திய இந்தோ-பசுபிக் என்ற கருத்து, வளர்ந்து வரும் மற்றொரு பனிப்போரில் சீனாவைத் தடுப்பதற்காக இந்தியா, அமெ ரிக்கா, அவுஸ்ரேலியா, ஜப்பான் ஆகியோரின் இணைப்பா கும். இதனை நேட்டோ-2 (NATO-2) என்ற பார்வையும் சர்வதேச அரசியல் ஆய்வாளர்களால் குறிப்பிடப்படுகிறது.

நான்கு, குவாட் அமைப்பு. அமெரிக்காவின் இந்தோ-பசுபிக் மூலோபாயத்திட்டத்தின் நிறுவனமயப்படுத்தப்பட்ட முதல் முயற்சியாக உருவாக்கப்பட்டதே குவாட் அமைப்பாகும். அமெரிக்கா, இந்தியா, ஜப்பான், ஆஸ்திரேலியா ஆகிய நான்கு நாடுகள் இணைந்து குவாட் என்ற கூட்டணியை உருவாக்கியுள்ளன. இந்தியப் பெருங்கடல் மற்றும் பசிபிக் பெருங்கடல் என இரண்டு கடல்களைக் கொண்ட, அகன்ற வெளியின் நான்கு புறமும் இருக்கும் அமெரிக்கா, ஜப்பான், இந்தியா, அவுஸ்ரேலியா ஆகிய நான்கு நாடுகளின் இணைவை குறிக்கும் வகையில், குவாட் என்ற வார்த்தைக்கு ‘நான்கு புறமும் கட்டமைப்புகள் கொண்ட வெளி” என அர்த்தம் கூறப்படுகிறது. ஆனால், சீனா இந்தக் கூட்டணியைக் கடுமையாக எதிர்க்கிறது. காரணம், சீனாவுக்கு நான்கு மூலைகளிலும் இந்த நாடுகள் இருக்கிறது. குவாட் தலைவர்களின் முதல் நேரடிக் கூட்டம் அமெரிக்காவில் செப்டெம்பர்-24(2021) அன்று நடைபெற்றது. “இந்தோ-பசிபிக் மற்றும் அதற்கு அப்பாலும் பாதுகாப்பு மற்றும் செழிப்பை வலுப்படுத்த, சர்வதேச சட்டத்தில் வேரூன்றிய மற்றும் கட்டாயப்படுத்தப்படாமல், இலவச, திறந்த, விதிகள் அடிப்படையிலான ஒழுங்கை ஊக்குவிக்க நாங்கள் ஒன்றாக ஒப்புக்கொள்கிறோம்.” எனக் கூட்டறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது. சீனாவின் பெயர் குறிப்பிடாத போதிலும், சீனா அதன் தசைகளை வளைக்க முயற்சிக்கும் பிராந்தியத்தில் விதிகள் அடிப்படையிலான நடத்தைக்கு தலைவர்களின் வலியுறுத்தலை நான்கு தலைவர்களின் பொதுக் குறிப்புகளில் அல்லது நீண்ட கூட்டறிக்கையில் அடிக்கடி குறிப்பிடுகிறது.

ஐந்து, ஆக்காஸ் பாதுகாப்பு ஒப்பந்தம். அமெரிக்கா, பிரிட்டன், அவுஸ்ரேலியா கூட்டிணைந்து கடந்த செப்டெம்பர்-15(2021) ஆக்கஸ் பாதுகாப்பு ஒப்பந்தத்தில் உடன்பட்டுள்ளார்கள். இப்பாதுகாப்பு ஒப்பந்தத்தினூடாக பல்வேறு வகையான தொழில்நுட்பங்களை அவுஸ்ரேலியாவுக்கு அமெரிக்காவும், பிரிட்டனும் வழங்க இருக்கின்றன. உளவுத் தகவல்களைப் பகிர்ந்து கொள்வது, குவாண்டம் தொழில்நுட்பம், க்ரூஸ் ரக ஏவுகணைகளை வழங்குவது என பல்வேறு அம்சங்கள் இந்த உடன்பாட்டில் கூறப்பட்டிருக்கின்றன. ஆனால் அவற்றுக்கெல்லாம் மேலாக அணுசக்தியில் இயங்கும் நீர்மூழ்க்கிக் கப்பல்கள்தான் முக்கியமானவை. அவை தெற்கு அவுஸ்ரேலியாவில் அடிலெய்டில் கட்டப்பட உள்ளன. அவற்றைக் கட்டுவதற்கான தொழில்நுட்பம் மற்றும் ஆலோசனையை அமெரிக்காவும் பிரிட்டனும் அவுஸ்ரேலியாவிற்கு வழங்க இருக்கின்றன. இதனை சீனாவிற்கு எதிரான அமெரிக்காவின் மற்றொரு கூட்டுக்கான முயற்சியாகவே சர்வதேச அரசியல் விவாதிக்கிறது. எனினும் அமெரிக்கா தரப்பால் உடனடியாகவே மறுக்கப்பட்டிருந்தது. எனினும் ஆக்கஸ் பாதுகாப்பு ஒப்பந்தத்தின் எளிமையான புவிசார் விளக்கம் அமெரிக்காவின் இந்தோ-பசுபிக் தந்திரோபாயக் கூறு என்பதை விளங்கிக் கொள்ளலாம்.

இவ்வாறாக அமெரிக்க அரசாங்கம் பல்வேறு கூட்டணி உருவாக்கங்களை உருவாக்கும் முயற்சியே சீனாவினை எதிர்கொள்வதற்கான கூட்டணி உருவாக்கத்தில் அமெரிக்கா கடுமையான நெருக்கடிகளை எதிர்கொள்வதை விளங்கிக் கொள்ள ஏதுவாக உள்ளது. மேலதிகமாக சீனாவிற்கெதிராக உருவாக்கப்படும் கூட்டணி முயற்சிகளில் அமெரிக்கா எதிர்கொண்டுள்ள இடர்பாடுகளையும் அறிதல் அவசியமாகும்.

முதலாவது, கூட்டணி வலையமைப்புக்குள் உள்நாட்டு மற்றும் சர்வதேச பிளவுகளைச் சுரண்ட சீனா தனது பொருளாதாரத் திறனை மேம்படுத்துகிறது. சீனாவுடனான உறவுகளைப் பற்றி அமெரிக்க நட்பு நாடுகள் ஒரே மனநிலையில் இல்லை. அல்லது பல சமயங்களில் அவர்கள் சீனாவின் நடத்தையை நிர்வகிப்பதற்கான சிறந்த வழி பற்றி வாஷிங்டனுடன் ஒன்றிணைகின்றனர். எனினும் மறுமுனையில் பெய்ஜிங் உடனான வர்த்தகத் தொடர்புகளால் பின்வாங்க முயலுகின்றனர். சீனா அதிகமாகப் பொருளாதார முதலீடுகளூடாக அமெரிக்க நட்பு நாடுகளுடன் பிணைந்துள்ளது. இதனால் அமெரிக்க நட்பு நாடுகள் சீனாவினை பகைப்பதைத் தவிர்க்க முற்படுகின்றன.

இரண்டாவது, அமெரிக்காவின் நீண்ட நாள் வர்த்தக பங்காளிகளான ஜி-7 நாடுகளிடையிலே சீனாவின் அபிமானிகளின் செல்வாக்குக் காணப்படுகிறது. குறிப்பாக, அண்மைய ஜி-7 மாநாட்டில் பி.ஆர்.ஐக்கு எதிராக பி3.டபிள்யு திட்டம் முன்மொழியப்பட்டது. எனினும். ஜி-7 நாடுகளில் ஒன்றாகிய இத்தாலி 2019-லேயே ‘பி.ஆர்.ஐ’யில் இணைந்து விட்டது. ஜேர்மனியும் ‘பி.ஆர்.ஐ’க்கு சாதகமாக இருப்பதாகச் சொல்லப்படுகிறது. ஆகவே, அமெரிக்காவின் பி3.டபிள்யு திட்டத்தின் முன்னேற்றம் கேள்விக்குறியாகவே உள்ளது.

மூன்றாவது, நேட்டோவில் ஆதிக்கம் செலுத்தும் ஐரோப்பியக் கூட்டும் சீனாவுடனான அமெரிக்காவின் பனிப்போரில் இணைந்து செல்லத் தயாரில்லை. ஆக்கஸ் ஒப்பந்தத்திற்கு முன்னரே சீனாவுடனான அமெரிக்காவின் பனிப்போரில் ஐரோப்பிய ஒன்றிய ஈடுபாட்டைப் பிரான்ஸ் மற்றும் ஜேர்மனி விரும்பி இருக்கவில்லை. பிரெஞ்சு ஜனாதிபதி இம்மானுவேல் மக்ரோன் பெப்ரவரியில்(2021), சீனாவுக்கு எதிராக அணி சேர்வது “எதிர் விளைவை ஏற்படுத்தும், ஆசியாவில் சீனாவின் கட்டுப்பாட்டாளராக அமெரிக்காவுடன் இணைந்திருக்க மாட்டேன்” என்று எச்சரிக்கை செய்துள்ளார். மேலும் ஜூலை(2021) மாதத்தில் ஜேர்மன் அதிபர் ஏஞ்சலா மெர்கலையை அமெரிக்க ஜனாதிபதி பைடன் சந்தித்தபோது, சுதந்திரமான மற்றும் திறந்த சமூகங்களை குறைமதிப்பிற்கு உட்படுத்த, சீனா செயல்படுவதாகக் கூறினார். ஆனால் சீனாவைப் பற்றிய மெர்கலையின் முதல் குறிப்பு, “ஒத்துழைப்பு மற்றும் போட்டியின்” அவசியத்தை வலியுறுத்துவதாகும். அமெரிக்காவின் ஐரோப்பிய கூட்டாளிகளான பிரான்ஸ் மற்றும் ஜேர்மனி ஆகியன பெய்ஜிங் மற்றும் வாஷிங்டனுடனான உறவுகளில் ஒரு மூலோபாய சமநிலையை நாடுகின்றன. இது ஐரோப்பிய ஒன்றியம் உலகின் இரண்டு பெரிய வல்லரசுகளினை சமதூரத்தில் பேண விரும்புகிறது.

நான்கு, இந்தோ-பசுபிக் மூலோபாயத்தை அமெரிக்கா நிலையான கட்டமைப்பாக நிறுவ முயலுகின்றது. எனினும் அது பூரணத்துவம் பெறமுடியவில்லை. குவாட் இந்தோ-பசுபிக் மூலோபாயத்திற்கான முன்முயற்சியாக அமைகின்ற போதும், குவாட்-இன் நிலைத்திருப்பும் வெளித்தோற்றத்தில் கேள்விக்குறியாகவே தோன்றுகின்றது. 2007 ஆம் ஆண்டு எடுக்கப்பட்ட குவாட் வலையமைப்பு முயற்சியில் 2021 ஆம் ஆண்டே தலைவர்கள் நேரடியாக கலந்து கொண்டு மாநாட்டை நடாத்தி உள்ளார்கள். மேலும், குவாட் நாடுகளின் ஒரு பிரிவிடையே மேற்கொள்ளப்பட்ட ஆக்காஸ் உடன்பாடும் குவாட் நீடிப்புக்கான நம்பகத்தன்மையை கேள்விக்குறியாக்கி உள்ளது.

எனவே, பனிப்போர்க்காலத்தில் ரஷ்யாவையும், பனிப்போருக்கு பின்னான காலத்தில் இஸ்லாமிய எதிர்ப்புவாதத்தையும் கூட்டணி வலையமைப்புக்களை நிறுவி வெற்றி கொண்ட அமெரிக்காவிற்கு சீன பெரும் சவாலான நடாகவே காணப்படுகிறது. சீனாவிற்கு எதிரான கூட்டணி உருவாக்கத்தில் ஏற்படும் குழப்பங்கள் அமெரிக்காவிற்குப் பெரும் நெருக்கடியாக உள்ளது. அமெரிக்காவின் தாராண்மை பொருளாதாரத்துடன் அமெரிக்க புலமையாளர்களால் முன் மொழியப்பட்ட மென்அதிகார அரசியலையும் இணைத்து அமெரிக்காவினை ஒடுக்கும் வியூகத்தை, சீனா உறுதிப்படுத்தியுள்ளது என்பதையே சர்வதேச அரசியல் களநிலவரங்களும் உறுதி செய்கின்றன. அனால் இவை எல்வாவற்றையும் உலக வரலாற்றின் இயங்கியல் போக்கு சுமூகப்படுத்திவிடும் என மேற்கு நாட்டின் ஆய்வாளர்கள் கருதுகின்றார்கள். அதாவது அமெரிக்கா ■

“அகலாது அணுகாது தீக்காய்வார் போல்க
இகல்வேந்தர்ச் சேர்ந்தொழுகு வார்”

கனகசபை கட்டடத் தொகுதி,
பருத்தித்துறை வீதி, நெல்லியடி.
தொ.பே.: 021 226 2564
www.theempunal.lk
news@theempunal.com

THEEMPUNAL தீம்புனல்

# நெருக்கடிகள் சூழும் காலத்தில் அரசு கால் பதிக்கின்றதா?

நாட்டில் கொரோனாத் தொற்று சற்றுக் குறைவடைந்துள்ளதனைக் கருத்தில் கொண்டு மீண்டும் நாடு வழமைக்குத் திருப்பப்பட்டுள்ளது. நாடு முடக்கத்தில் இருந்த காலப்பகுதியிலே கூட நாடு முடக்கப்பட்டுள்ளமைக்குரிய அறிகுறிகளைக் காணமுடிந்திருக்கவில்லை. மக்கள் என்றைக்கும் போலவே இயல்பாகவும் சுதந்திரமாகவும் வீதிகளிலும் கடைகளிலும் உலாவி வந்திருந்ததனைக் காணக் கூடியதாக இருந்தது. இந்நிலையில் நாடு முற்றாகத் திறந்து விடப்பட்ட நிலையில் மக்களின் செயற்பாடுகள் எப்படி அமையும் என்று சொல்லித் தெரியவேண்டியதில்லை. ஆனால் கொரோனா சற்றுக் கட்டுக்குள் வந்துள்ளதே தவிர முற்றாக இல்லாமல் போகவில்லை என்பதனை மக்களும் அரசும் புரிந்து செயற்படவேண்டும். அரசைப் பொறுத்தவரையில் நாட்டினைத் திறந்து எல்லாம் இயல்பு நிலைக்குத் திரும்பிவிட்டது என்பதனை வெளியுலகத்திற்குக் காட்டவேண்டிய இக்கட்டான சூழலுக்குள்ளேயே இருக்கின்றது. பொருளாதாரத்தில் மிகவும் நலிவடைந்துள்ள நிலையில் அதனைத் திரும்பக் கட்டமைக்கவேண்டிய பாரிய நெருக்கடிக்குள் உள்ளாகியிருக்கிறது. அரசு வருவாயினைப் பெற்றுக் கொள்ளக்கூடிய அனைத்துக் கட்டமைப்புக்களையும் மீண்டும் மேற்கொள்ள வேண்டிய தேவை அரசுக்கு எழுந்துள்ளது. இந்நிலையில் தொடர்ந்தும் நாட்டினை முடக்கி வைத்திருக்க முடியாது என்ற யதார்த்த நிலையினை அடிப்படையாகக் கொண்டு மட்டுமே நாட்டினைத் திறந்துவிடுவதற்கான பிரயத்தனத்தினை மேற்கொண்டிருந்தது என்பதனை யாவரும் இலகுவில் அறிந்து கொண்டிருக்க முடியும். ஆனாலும் இதன் பின்னர் அரசு எதிர்கொள்ள இருக்கின்ற சவால்களோ மிகவும் பெரியவை.

நாடு முழுவதும் பொருட்களின் தட்டுப்பாடும் பொருட்களின் விலையேற்றமும் மிகவும் பூதாகரமான விடயங்களாக மாறியிருக்கின்ற நிலையில் மக்களின் இயல்பு வாழ்வு பெரிதும் பாதிப்புக்குள்ளாகியிருக்கின்றது. அத்தகைய பாதிப்புக்களில் இருந்து மக்களை மீட்டு எடுப்பதற்குரிய சரியான நிகழ்ச்சித்திட்டங்களை அரசு முன்னெடுக்கவேண்டிய இக்கட்டான சூழல் அரசினைச் சூழ்ந்து கொண்டிருக்கின்றது. சரியானவகையில் சிந்தித்து அரசு செயற்படவில்லை என்றால் மக்கள் வீதியில் இறங்கி போராட்டங்களை முன்னெடுப்பதற்கு முனைப்புக் கொள்வார்கள். இதனை வலுப்படுத்துவதற்கு எதிர்க்கட்சியினர் எப்போதும் தயாராகவே உள்ளனர். எப்போது நாடு திறக்கும்? எப்போது வீதியில் இறங்கிப் போராட்டத்தினை முன்னெடுக்கக் கூடிய சூழல் அமையும்? என்று நீண்ட நாட்களாகவே அவர்கள் காத்துக் கொண்டிருக்கின்றனர். இதேவேளை தேசிய வளங்களை விற்பனை செய்வதற்கு ஒரு போதும் இடமளிக்க மாட்டோம். கொரோனா வைரஸ் கட்டுக்குள் வந்ததும் கோத்தபாய அரசுக்கெதிராக வீதியில் இறங்கிப் போராடுவோம் என்று அபயராம விகாரையின் விகாராதிபதி முத்தொட்டுவ அனந்த தேரர் பெரவலப்பிட்டிய மின் உற்பத்தி நிலையத்தின் பங்குகள் வெளிநாட்டு நிறுவனம் ஒன்றிற்கு விற்பனை செய்வது தொடர்பில் கருத்துத் தெரிவிக்கும் போது இவ்வாறு எச்சரிக்கை விடுத்துள்ளார். இது எதிர்வரும் நாட்களில் அரசு எதிர்கொள்ளவிருக்கும் நெருக்கடியை தெளிவுபடுத்துவதாக அமைகின்றது.

இந்நிலையில் எதிர்வரும் 15 ஆம் திகதியளவில் பாடசாலைகளை திறப்பதற்குரிய ஏற்பாடுகளை அரசு முன்னெடுத்து வருவதாகவும் தெரிகின்றது. ஆரம்பத்தில் 200 மாணவர்களுக்குக் குறைந்த பாடசாலைகளை ஆரம்பித்து பின்னர் கட்டம் கட்டமாக ஏனைய பாடசாலைகளை ஆரம்பிப்பது தொடர்பில் அரசு கவனம் செலுத்தி வருகின்றது. கடந்த நாட்களில் அதிபர்களுடனான கலந்துரையாடல்களை மேற்கொண்ட வலயக்கல்விப் பணிப்பாளர்கள் பாடசாலைகளை ஆரம்பிப்பதற்குரிய ஆயத்தங்களைச் செய்யும்படி அதிபர்களுக்கு அறிவுறுத்தல் விடுக்கப்பட்டதாகவும் அறிய முடிகின்றது. அப்படி என்றால் அரசு அதற்குரிய நடவடிக்கைகளை முன்னெடுக்கத் தொடங்கிவிட்டது என்பது வெளிப்படையாகின்றது. ஆனால் நாடு திறக்கப்பட்டவுடன் உடனடியாக எதிர்ப்பு ஆர்ப்பாட்டங்களை நாடு முழுவதும் முன்னெடுப்பதற்கு ஆசிரியர், அதிபர்கள் தொழிற்சங்கக் கூட்டணி முடிவு செய்துள்ளதாகவும் அறிய முடிகின்றது. ஆசிரியர்களுக்கான சம்பள முரண்பாடுகளை அரசு இதுவரை தீர்ப்பதற்குரிய எந்த நடவடிக்கைகளையும் மேற்கொள்ளாத நிலையிலேயே ஆசிரியர், அதிபர்களின் போராட்டங்கள் தொடர்ந்தும் முன்னெடுக்கப்பட்டு வருகின்றது. ஆனால் பாடசாலைகள் இதுவரை திறக்கப்படாத இக்காலத்தில் அப்போராட்டங்கள் பொதுவெளியில் பெரிய தாக்கத்தினை ஏற்படுத்தாமல் இருந்ததோடு அரசுக்கும் அழுத்தங்களை ஏற்படுத்தவில்லை. ஆனால் பாடசாலை திறக்கப்பட்டதும் இப்போராட்டம் பாரிய தலையிடியாகவும் அரசைத் திணறடிக்கும் ஒன்றாகவும் மாற்றமடையும் நிலையுண்டு. ஆசிரியர்கள் பணிப்புறக்கணிப்பில் ஈடுபட்டுக் கொண்டிருக்கும் நிலையில் அவர்கள் கற்றல் செயற்பாடுகளை முற்று முழுதாக நிறுத்தி வைத்திருக்கும் நிலையில் எந்த நம்பிக்கையில் அரசாங்கம் பாடசாலைகளைத் திறப்பதற்கு ஆயத்தம் செய்து கொண்டிக்கின்றது? என்பது முக்கியமான கேள்வியாகவே எழுகின்றது. பாடசாலையைத் திறப்பதற்கு முன்னர் குறித்த பிரதிநிதிகளுடன் சமூகமான பேச்சுவார்த்தையில் ஈடுபட்டு பொருத்தமான தீர்வினை எட்டுவது அவசியமானது. கொரோனா இடர்காலத்தில் பாடசாலைகள் மூடப்பட்டிருந்த போதிலும் பெரும்பாலான ஆசிரியர்கள் மாணவர்களின் நலன்கருதி மனிதாபிமானச் செயற்பாடாக நிகழ்நிலைக் கற்பித்தல் செயற்பாட்டில் ஈடுபட்டு வந்திருந்தனைக் கவனத்தில் கொண்டு பாடசாலை திறந்ததும் ஆசிரியர் அதே மனநிலையில் பாடசாலைக்கு வருவார்கள் என்ற எண்ணத்தினை அரசு வைத்திருக்கக் கூடாது. இது அதிபர், ஆசிரியர்களின் உரிமைக்கான போராட்டம். தமக்கான உரிமை கிட்டும்வரை போராட்டத்தினை முன்னெடுப்பது என்ற தீர்மானத்திலேயே அதிபர்கள், ஆசிரியர்கள் உள்ளனர். இதனைக் கவனத்தில் கொண்டு அரசு செயற்படுவது அவசியம்.

என்னதான் இருந்தாலும் நாடு திறக்கப்பட்ட நிலையில் அரசு தனக்கு எதிரான பல போராட்டங்களை எதிர் கொள்ளத்தான் வேண்டும். நாட்டில் பல்வேறுபட்ட பிரச்சினைகளை பல்வேறு தரப்பினருக்கு அரசு உருவாக்கிவிட்டிருக்கிறது. அத்தனை பிரச்சினைகளுக்கும் அரசு உடனடியான தீர்வினை எட்டிவிடக் கூடிய வல்லமையில் இல்லை என்பது தெளிவு. சவால்களைச் சந்திப்பதற்கும் அதனை கையாள்வதற்கும் அரசுக்கு வல்லமை இருக்கின்றதா? என்பதனைப் பொறுத்திருந்துதான் பார்க்க வேண்டும். தினை விதைத்தவன் தினையினை அறுக்கத்தானே வேண்டும். ■

## தொழிற்சங்கப் போராட்டத்தை வலுவிழக்கச் செய்வார்களா?

# ஐயாயிரம் ரூபா பெறுநர்கள்

தந்திரன்

பாடசாலைகளை ஆரம்பிப்பதற்கான சகல நடவடிக்கைகளையும் மேற்கொள்ளுமாறு ஆளுனர் அலுவலகம் தெரிவித்துள்ளது. கட்டம் கட்டமாக பாடசாலைகளைத் திறப்பதற்கு நடவடிக்கைகளை முன்னெடுப்பதற்குத் தீர்மானித்துள்ள நிலையில் பாடசாலையில் மாணவர்கள் பாதுகாப்பாகக் கற்றலை மேற்கொள்வதற்கு ஆசிரியர்களை அழைக்கும்படி வலயக் கல்விப் பணிப்பாளர் ஊடாக அதிபர்களுக்கு அரசாங்கம் அறவித்தலை விடுத்துள்ளது.

இந்த நிலையில் அதிபர்-ஆசிரியர்களின் தொழிற்சங்கப் போராட்டங்கள் இடைவிடாது தொடர்ச்சியாக நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. அதிபர் - ஆசிரியர்கள் தொழிற்சங்கப் போராட்டத்தில் ஈடுபடுகின்ற பொழுது மேற்குறித்தவாறு அழைப்பு விடுக்கப்படுமாயின் அதிபர் - ஆசிரியர்கள் எவ்வித அச்சமும் கொள்ளத் தேவையில்லை என ஆசிரியர் சேவைச் சங்கம் அறிவித்துள்ளது.




எனவே இத் தொழிற்சங்கப் போராட்டத்திற்கான நியாயமான தீர்வு கிடைக்கும் வரை தொடர்ந்து போராட்டம் முன்னெடுக்கப்படும். இலங்கையின் பல்வேறு தொழிற்சங்கங்களும் ஒன்றிணைந்து கடந்த சில மாதங்களாக, 24 ஆண்டுகளாகத் தீர்க்கப்படாத ‘அதிபர்- ஆசிரியர் சம்பள முரண்பாட்டினைத் தீர்த்தல், கொத்தலாவல சட்டத்தை வாபஸ் பெறல், நிகழ் நிலைக்கல்விக்குத் தேவையான வசதி வாய்ப்புக்களை மாணவர்களுக்கும் ஆசிரியர்களுக்கும் ஏற்படுத்திக் கொடுத்தல் வேண்டும்’ போன்ற முக்கிய கோரிக்கைகளை முன்வைத்து நாடளாவிய ரீதியில் பல ஆர்ப்பாட்டப் பேரணிகளையும், போராட்டங்களையும் முன்னெடுத்து வருகின்றது. இச்சம்பள முரண்பாடு தொடர்பில் பிரதமர் தலைமையில் இடம்பெற்ற பேச்சுவார்த்தையில் இணக்கப்பாடு எதுவும் எட்டப்படவில்லை.

அண்மையிலும் கல்வி அமைச்சருடன் இடம்பெற்ற பேச்சுவார்த்தையில் அடுத்த வரவு செலவுத் திட்டத்தில் தீர்வினைப் பெற்றுத் தருவதாகக் கூறப்பட்டது. ஆனால் அதிபர்-ஆசிரியர் தொழிற்சங்கங்கள் பிரச்சினைக்கான தீர்வு உடனடியாக வழங்கப்பட வேண்டும் எனக்கூறி அதனை மறுத்து விட்டன. இது அதிபர் - ஆசிரியர்கள் தொழிற்சங்கப் போராட்டத்தினை மழுங்கடிப்பதுடன் கால நீடிப்புச் செய்யும் ஒரு செயற்பாடாகவே தொழிற்சங்கங்களால் பார்க்கப்படுகின்றன.

இந்த நிலையில்தான் கல்வி அமைச்சினால் வெளியிடப்பட்ட சுற்றுநிருபத்தின்படி (ED/09/12/06/01/02/2021) ஆசிரியர்கள் பாடசாலைக்குச் சமுகமளிப்பது தொடர்பில் குறிப்பிடப்பட்டிருந்தது. பாடசாலை ஆரம்பிக்கப்படும் திகதி இன்னமும் தீர்மானிக்கப்படாத நிலையிலும், பாடசாலையில் மேற்கொள்ளப்பட வேண்டிய சுகாதார முன்னெடுப்புக்கள் தொடர்பில் கூறப்படாத நிலையிலும் ஆசிரியர்களை பாடசாலைக்கு அழைப்பது முற்றிலும் தவறான ஒரு செயற்பாடாகும்.

தொழிற்சங்கங்கப் போராட்டம் முன்னெடுக்கப்படும் இவ்வேளையில் அதிபர்களையும் ஆசிரியர்களையும் பாடசாலைக்கு வரும்படி கட்டாயப்படுத்த முடியாது. இவ்வாறு கட்டாயப்படுத்துவது அரசியல் யாப்பிலுள்ள 3 ஆம் மற்றும் 14 (1ஈ) அத்தியாயங்களை மீறும் செயலாகும். எனவே ஆசிரியர்கள் இது தொடர்பில் எவ்வித அச்சமும் கொள்ளத் தேவையில்லை.

என்னதான் அதிபர் ஆசிரியர்கள் தொழிற்சங்கப் போராட்டத்தில் ஈடுபடுகின்ற பொழுதும் சில அதிபர் - ஆசிரியர்கள் இப்போராட்டத்திற்கு முரணாக செயற்படுவதாக அறிய முடிகிறது. தென்னிலங்கை அரசியல்வாதிகள், வடக்கில் கல்வி பாதிக்கப்படவில்லை என்றும் ஆசிரியர்கள் கற்பித்தலில் ஈடுபடுகின்றார்கள் எனவும் இதன் அடிப்படையிலே கூறுகின்றனர்.

ஏனெனில் நிகழ்நிலை கற்றலில் ஈடுபடுகின்ற அதிபர் - ஆசிரியர்கள் சிலர் தொழிற்சங்கங்கள் போராட்டத்தினை மதிக்காது ரூபாய் ஐயாயிரத்தினை பெறுவதில் ஆர்வம் காட்டுவதனை அவதானிக்க முடிகிறது. வடமாகாணத்து அதிபர் - ஆசிரியர்கள் சிலர் இக்கொடுப்பனவினை பெறுவதற்கு தமது பெயர் விபரத்தினை வலயக்கல்வி பணிமனைக்கு வழங்கியிருக்கிறார்கள் என்பதும் அறியக்கிடைக்கிறது.

இது தொடர்பில் தொழிற்சங்கப் போராட்டத்தில் ஈடுபடுகின்ற தொழிற்சங்கங்கள் இத்தகையோருக்கு எத்தகைய நடவடிக்கையினை மேற்கொள்ளப்போகின்றன? அரசின் கைக்கூலிகளாகச் செயற்படுகின்ற ஒரு சிலரின் இத்தகைய செயற்பாடுகள் ஒட்டு மொத்த கல்வி சமூகத்தையும் தாக்கத்திற்கு உள்ளாக்கும் என்பதனையும் குறித்த அதிபர் - ஆசிரியர்கள் உணர வேண்டும். ■



செல்வின்

# கிராமமா? சமூகமா?...

மக்கள் தாங்கள் கூட்டாக வாழ்வதற்கான சாத்தியங்களைக் கண்டறிந்த போது அது அவர்களை ஆபத்துக்களிலிருந்தும் அழிவுகளிலிருந்தும் பாதுகாத்தது. இது எல்லாவித உயிரினங்களுக்கும் பொருந்தும். தனியொரு உயிரியாக வாழாமல் இணைந்து வாழ்வதன் ஊடாகவே இனப்பெருக்கமும் வளர்ச்சியும் சாத்தியமாகும் என்கின்ற இயற்கையின் நியதியில் கூட்டுவாழ்க்கை முன்நிபந்தனையாகியது. அவ்வாறு கூட்டாக ஏனையவர்களுடன் இணைந்து வாழவேண்டுமாயின் தாங்கள் எல்லோரும் தங்களுடைய தனித்துவமான விடயங்களில் சில விட்டுக்கொடுப்புக்களை செய்து ஒரு பொது உடன்பாட்டிற்கு வருதல் வேண்டும். இங்குதான் ஜீன் பால் சார்த்தர் என்ற சிந்தனையாளர் கூறிய "மனிதன் சுதந்திரமாக இருக்க விதிக்கப்பட்டவன்" என்ற விடயம் கவனத்திற்குரியதாகின்றது. ஒவ்வொரு மனிதனும் பிறக்கும்போது தன்னுடைய ஆளுமையினையும் இயலுமையினையும் தான் விரும்புகின்ற வகையில் விருத்தி செய்வதற்கு உரிமைகொண்டவனாகவே இருக்கின்றான். இதனையே "சுதந்திரம் எமது பிறப்புரிமை" என்கின்றோம். பிறப்பிலேயே எம்மீது இறைந்துள்ள உரிமை "இறைமை"யாகின்றது. இறைமை என்பது ஒவ்வொரு மனிதனுக்கும் உரியது. ஏனையோரின் இறைமையினை -சுதந்திரத்தை அத்துமீறாமல் தன்னுடைய இறைமையினை பிரயோகிக்க வேண்டும்.

மற்றவர்களுடன் இணைந்து கூட்டாக வாழவேண்டும் என தன்னியல்பாக உணர்ந்து இணையும்போதும் தாம் ஒவ்வொருவரும் கொண்டுள்ள இறைமையின் சில விடயங்களைப் பொதுமைப்படுத்தி உடன்பாட்டுக்கு வரும்போதும் அங்கு பொதுமைப்படுத்தபட்ட விடயங்கள் கூட்டு இறைமையாக கட்டமைக்கப்படுகின்றன.

இறைமை என்பது மனிதர்களுக்கு மக்களுக்குரியது. மக்களின் தன்னியல்பான விருப்பின் பெயராலேயே தங்களை நெறிப்படுத்தும் பொருட்டு தங்களுக்கு விரும்பியவர்களிடம் நிபந்தனைகளின் அடிப்படையில் கையளிக்கப்படுகின்றது.

இவ்வாறு கூட்டு இறைமையினைக் கட்டியெழுப்பும் போது அதனைப் பிரயோகிப்பதற்கு ஒரு நிறுவனமாகச் சமூகஅமைப்பு உருவாகின்றது. அது பின்பு படிப்படியாக விரிவடைந்து அரசு என்ற பெரும் உருவாக மாறுகின்றது. சமுக நிறுவனங்கள் தங்களது அங்கத்தவர்களினால் தங்களுக்குக் குறித்த நோக்கம் கருதி கையளிக்கப்பட்ட கூட்டு இறைமையினைப் பிரயோகிக்கும் போது அங்கு கடப்பாடு- பொறுப்பு உருவாகின்றது.

மனிதன், தான் மற்றவர்களுடன் இணைந்து வாழ்வதற்காக தான் கொண்டிருந்த இறைமையின் -சுதந்திரத்தின் சில விடயங்களை மற்றவர்களுடன் பகிர்ந்து கொள்வதற்கான உடன்பாட்டினைச் செய்யும்போது தன்னையும் தனது செயற்பாடுகளையும் நெறிப்படுத்துவதற்கான கடப்பாட்டினை - கூட்டுப்பொறுப்பினை சமூகத்திற்கு வழங்குகின்றான். இந்தக் கூட்டுப்பொறுப்புத்தான் அதிகாரமாக மாற்றமடைகின்றது.

சமூகம் தங்களைத் தாங்களே ஒருங்கிணைத்து நெறிப்படுத்துவதற்காகப் பொதுமைப்படுத்திய இறைமை என்கின்ற சுதந்திரத்தை ஒரு புள்ளிக்குக் கையளிக்கும் போது அங்கு கட்டுப்படுதல் - கட்டுப்படுத்துதல் என்ற பரஸ்பர நிலைமை தோன்றுகின்றது. அத்தகைய சூழ்நிலையில் கட்டுப்படமறுத்தல் என்ற நிலைமையினைக் கையாளுவதற்கு அதிகாரம் மற்றும் தண்டனை ஆகிய விடயங்கள் அறிமுகமாகின்றன. கட்டுப்படுத்துதல் என்பது நிர்ப்பந்தமாக உருவாகும்போது அதிகாரம் என்கின்ற விடயம் மேலெழுகின்றது.

அதிகாரம் என்பது அதனைப் பிரயோகிப்பவரின் நோக்கத்தைப்பொறுத்து ஒருவகையான வன்கருவியாக மாற்றமடைகின்றது. அவ்வாறு கட்டுப்பாடு அதிகாரமாக மாறி, பின்பு வன்கருவியாகப் பிரயோகிக்கப்படும் போது அந்த அதிகாரத்திற்கு -வன்பலத்திற்கு- உடன்படாதவர்களை அடிபணியவைப்பதற்காகத் தண்டனை என்ற விடயம் அறிமுகமாகின்றது. தண்டனை என்பதுவே ஒருவனையோ பலரையோ அவர்களது இயல்பான நிலைமையில் இயங்கவிடாது மற்றுமொருவர் அல்லது மற்றுமொரு தொகுதியினர் அவர்களை நிர்ப்பந்தித்துக் கட்டுப்படுத்துவது அல்லது செயலிழக்க வைக்கச்செய்வதாகும். இத்தகைய நிர்ப்பந்தம் என்பது பயம்-அச்சம் -அச்சுறுத்தப்படல் என்ற உணர்வுக்கு ஊடாக உருவாக்கப்படுகின்றது.

எனவே ஒருவருடைய அதிகாரத்திற்கு உடன்படமறுத்தால் நிர்ப்பந்தங்களுக்கு -நெருக்கடிகளுக்கு-தண்டனைக்கு உள்ளாவோம் என்கின்ற மக்களின் பய உணர்வுதான் அதிகாரத்தினை தம்வசப்படுத்தி வைத்திருக்கும் தனிநபர்களினதும் குழுக்களினதும் பலமாக மாறுகின்றது. எனவே அதிகாரங்கொண்டவர்களின் பலம் என்பது அதன் பிரயோகப்பரப்பிற்குள் உள்ளவர்கள் கொண்டிருக்கக் கூடிய பயத்தின் பிரதிபிம்பமாகவே அமைந்துள்ளது.

அதிகாரத்திலுள்ளவர்கள் தங்களால் கையகப்படுத்தப்பட்டுள்ள தனி மனிதர்களது பொதுமைப்படுத்தப்பட்ட கூட்டு இறைமை -சுதந்திரத்தின் மீதான தத்துவம் தம்மிடமிருந்து பறிபோய்விடக்கூடாது என்பதில் மிகவும் கவனமாக இருப்பார்கள்.

சமூகத்தின் அங்கத்தவர்கள் தமக்குள் ஒன்றுசேர்ந்து தங்களது இறைமையினைப் பிரயோகிக்கும் பொறுப்பினை மீளப்பெற்றுக்கொள்ளாமலோ அல்லது வலுவிழக்க வைக்காமலோ இருப்பதற்கான சகல எத்தனங்களையும் அதிகாரத்தின் சுவையினைப் புரிந்துகொண்டோர் முன்னெடுப்பார்கள். சமூகம் தனக்குள் மீள் ஒருங்கிணைவதனையும் கூட்டு இருப்புக்கான அடையாளங்களை உருவாக்குதலையும் கூட்டாக தமது இறைமைகளைப் பிரயோகிக்க எடுக்கும் முயற்சிகளையும் தடுப்பதிலும் தகர்ப்பதிலும் குறியாக இருப்பார்கள்.

இத்தகைய சக்திகள் தங்களது நோக்கங்களை அடைவதற்காகச் சமூகத்தினை பயம் என்கின்ற சூழ்நிலையின் கைதிகளாகவும் தனிமனிதர்கள், குடும்பம் என்ற உதிரிகளாகவும் வைத்திருப்பதன் மூலமே தாங்கள் வெல்லப்படாத பலங்கொண்டவர்கள் என்ற பொய்த்தோற்றத்தைத் தொடர்ச்சியாகப் பேணமுயற்சிப்பார்கள். இதற்காகத் தாங்கள் முன்னெடுக்கும் செயற்பாடுகளுக்குச் சட்டமுறையான வலுக்கொடுத்து நியாயப்படுத்தும் அதேவேளை சட்டமுறையற்ற வழிமுறைகள் மற்றும் சமூகவிரோத சக்திகளின் வன்முறைகள் ஆகியவற்றுக்கான வாய்ப்புக்களையும் ஊக்குவிப்பார்கள்.

அடக்குமுறையாளர்களின் அதிகாரம் - பலம் என்பது சமுகத்தின் மீது திணிக்கப்பட்டுள்ள பய உணர்வு என்கின்ற காற்றுக்குமிழின் மறுபக்கமாகவே இருக்கின்றது என்பது நிதர்சனமாகும். இந்தப் பயம் என்ற காற்றுக் குமிழ் உடைந்து காணாமல் போகும்போது

**"மனிதன், தான் மற்றவர்களுடன் இணைந்து வாழ்வதற்காக தான் கொண்டிருந்த இறைமையின் -சுதந்திரத்தின் சில விடயங்களை மற்றவர்களுடன் பகிர்ந்து கொள்வதற்கான உடன்பாட்டினைச் செய்யும்போது தன்னையும் தனது செயற்பாடுகளையும் நெறிப்படுத்துவதற்கான கடப்பாட்டினை - கூட்டுப்பொறுப்பினை சமூகத்திற்கு வழங்குகின்றான். இந்தக் கூட்டுப்பொறுப்புத்தான் அதிகாரமாக மாற்றமடைகின்றது."**

அடக்குமுறையாளனின் அல்லது ஒடுக்குமுறைச் சக்திகளின் பலம் என்கின்ற அதிகாரக்கட்டமைப்பும் தகர்ந்து போகின்றது.

இந்தச் சிந்தனைகளின் அடிப்படையிலேயே நாம் சமூகத்தின் மீள் எழுச்சியையும் சமூக நிறுவனங்களின் மீளுருவாக்கத்தையும் அணுகவேண்டியுள்ளது. மூன்று அல்லது நான்கு தசாப்தங்களுக்கு மேலாக எமது சமூகத்தின் மேல் நிகழ்த்தப்பட்டுவரும் அடக்குமுறை என்பது எமது கூட்டு உணர்வின் மீதும் கூட்டு அடையாளத்தின் மீதும் வீசப்பட்டுள்ள பயம் என்கின்ற வேடனின் வலையாகப் பரந்துள்ளது. ஒவ்வொருவரும் அதிகாரத்தின் பேரால் தண்டிக்கப்படுவோம் அல்லது நெருக்கடிக்குள் தள்ளப்படுவோம் என்ற அச்ச உணர்வு காரணமாகத் தனித்தனியாக உதிரிகளாகவும் ஏதிலிகளாகவும் ஆற்றலற்றவர்களாகவும் உறைந்த மூளைகொண்டவர்களா கவும் மலடாக்கப்பட்டவர்களா கவும் மாற்றப்பட்டுள்ளோம். வேட னின் வலைக்குள் உணவும் நீரும் நிழலும் காலம் தவறாமல் கிடைக் கின்றது என்று திருப்தியடைதல் தான் வாழ்வின் பொருள் என்று நமக்குள் நாமே சுயசமரசம் கொண்டு நிறைவுகொள்வதனை அவர்கள் தங்கள் வெற்றிச்சாதனைகளாகப் பிரகடனம் செய்கின்றார்கள்.

இங்கு சமூகங்களையும் சமூக நிறுவனங்களையும் கிராமங்களையும் மீளக்கட்டியெழுப்புதல் என்பது வெறுமனே ஒரு நிர்வாகக் கடமையாகவோ சட்டரீதியான தேவையாகவோ அல்லது தற்பெருமைகளையும் பாரம்பரியப்பெருமைகளையும் தக்கவைத்து, தங்களைத் தகவமைத்துக்கொள்ளும் முயற்சியாகவோ நாம் எண்ணிவிடக்கூடாது.

இறைமைகொண்ட மனிதர்களினால் அவர்களது குடும்பங்கள் உறவுகள் சுற்றங்கள் ஆகியவற்றை ஒருங்கிணைத்துக் கூட்டு அடையாளங்களாலும் பண்பாட்டு பாரம்பரியங்களினாலும் பகிர்ந்தும் கூட்டாகவும் ஆளுகை செய்யப்படும் பொருண்மியத்தினாலும் செழுமைப்படுத்தப்பட்டதும் நிலைபேறாகத் தலைமுறைகடந்தும் முன்னோக்கி நகரக்கூடியதும் உயிர்த்துடிப்பும் அதிர்வாற்றல்களும் கொண்ட ஒரு இயங்கு சக்தியாகவே சமூகத்தை நாம் உருவகிக்கவேண்டும்.

இயக்கம் மிகு சமூகம் என்பது ஆற்றலும் பருப்பொருளும் இணைந்த பிரபஞ்சத்தின் தோற்றத்தை ஒத்ததே. ஆற்றல் என்பது ஒவ்வொரு சமூகத்தினுள்ளும் இருக்கக் கூடிய புத்திசாலித்தனம் (intellect). அது எவ்வாறு சமூகத்துக்குரியதாக மாற்றப்பட்டு பிரயோகப்படுத்தப்படுகின்றது என்பதிலேயே சமூகத்தின் வெற்றி தங்கியுள்ளது. இத்தாலிய அரசியல் சிந்தனையாளரான அந்தனியோ கிராம்சி இதுபற்றிக் குறிப்பிடும்போது இரண்டுவிதமான புத்திசாலித்தனங்களைக் குறிப்பிடுவார். ஒன்று பாரம்பரியமான புத்திசாலித்தனம் (Traditional intellect) மற்றையது உயிரியல் தன்மையான புத்திசாலித்தனம் (Organic Intellect).

பாரம்பரியமான புத்திசாலித்தனம் என்பது கல்வித் தகுதிகள் மற்றும் துறைசார் திறமைகள் தொழிற்தகைமைகள் போன்றவற்றால் உருவாகும் புத்திசாலித்தனமாகும். இத்தகைய புத்திசாலித்தனம் தன்னைத் தகுதிப்படுத்தக்கூடியதும் விலைகொடுத்து வாங்கக்கூடியதுமான நிலைகளில் தன்னை வெளிப்படுத்தி அவைகளுடன் தங்களை ஐக்கியப்படுத்திக்கொள்ளும்.

உயிரியல் தன்மையான புத்திசாலித்தனம் என்பது தானாகவே தான் வாழும் சூழ்நிலைகளுக்கு ஊடாக வேர்விட்டு முகிழ்த்தெழுந்து சமூகத்தின் தேவைகளுக்கும் இயல்புக்கும் ஏற்றவகையில் வினையாற்றல் புரியும் தன்மை கொண்டதாகும்.

தற்காலத்தில் வர்த்தக மற்றும் தொழிற்துறை நோக்கங்களால் ஆக்கிரமிக்கப்பட்டுள்ள கல்வி முறைக்கு ஊடாக உற்பத்திசெய்யப்படும் புத்திசாலித்தனம் - பாரம்பரிய புத்திசாலித்தனம் ஆகும். அது சான்றுப்படுத்தப்பட்ட தனது பெருமைகளுக்கு ஊடாகத் தன்னை முதன்மைப்படுத்தி தனது புத்திசாலித்தனத்தை விற்பனைக்குரிய சந்தைப் பண்டமாக மாற்றியுள்ளது. அது பெருமளவில் தன்னையும் தனது பெருமையினையும் தக்கவைப்பதற்காகத் தன்னைக் கொள்வனவு செய்கின்ற ஆண்டானுக்கே கொத்தடிமையாகச் செயற்படும். இங்கு விசுவாசம் (Loyalty) சந்தைப் பெறுமதிகளினாலேயே தீர்மானிக்கப்படுகின்றது.

இத்தகைய மரபுசார்ந்த புத்திசாலித்தனம் என்பது தன்னை வேலைக்கமர்த்தியுள்ள எசமானன் தனக்குள் கையகப்படுத்திக்கொண்ட

(18 ஆம் பக்கம் பார்க்க....)



> ஒரு காலகட்டத்தில் பல்கலைக்கழக பிரவேசத்திற்கு வந்த தரப்படுத்தலினால் பெரிதும் பாதிக்கப்பட்டவர்கள் ஈழத்தமிழ் சமூகத்தினர். அதனால் விரக்தியடைந்த மாணவர்கள் விடுதலை வேட்கை உணர்வுடன், ஆயுதம் ஏந்திய இயக்கங்களில் இணைந்து போர்க்களம் புகுந்தனர். மடிந்தனர்.

# ஆங்கோர் ஏழைக்கு எழுத்தறிவிப்போம்!



அவதானி

சமகாலம் மகாகவி பாரதி நினைவு நூற்றாண்டு. இந்த அவதானியின் தொடர்ச்சியான பதிவுகள் பாரதியின் தீர்க்கதரிசனம் மிக்க வார்த்தைகளிலிருந்தே வெளிவருவதும் தவிர்க்க முடியாதது.

பாரதி அன்றே சொன்னார்:

அன்ன சத்திரம் ஆயிரம் வைத்தல்,<br>
ஆலயம் பதினாயிரம் நாட்டல்,<br>
பின்னருள்ள தருமங்கள் யாவும்,<br>
பெயர் விளங்கி ஒளிர நிறுத்தல்,<br>
அன்னயாவினும் புண்ணியம் கோடி<br>
ஆங்கோர் ஏழைக்கு எழுத்தறிவித்தல்.

இலங்கையில் அண்மையில் க. பொ. த. சாதாரண தரப்பரீட்சைக்குத் தோற்றிய மாணவர்களின் பெறுபேறுகள் வெளிவந்துள்ளன.

கொரோனா பெருந்தொற்றுக்கு மத்தியில், பொருளாதாரம் மாத்திரம் நலிவடையவில்லை. கல்வித்துறையும் பெரும் பாதிப்பினைக் கண்டுள்ளது.

மேலைத்தேய நாடுகளும் விதிவிலக்கல்ல. ஆனால், அந்த வளர்ச்சியடைந்த வல்லரசு நாடுகளுடன் ஒப்பிடும்போது, வளர்முக நாடாக இன்றும் விளங்கும் இலங்கையில் காலை ஆகாரம் உண்ணவும் வழியற்று பட்டினியோடு பாடசாலைக்குச் செல்லும் மாணவர்களின் எண்ணிக்கை வீதம் இன்றளவும் குறையவில்லை.

அரசாங்கம் இலவச பாட நூல்கள், பாடசாலைச் சீருடைகள் வழங்கினாலும் கல்வி இலவசமாக்கப்பட்டிருந்தாலும் பல பாடசாலைகள், கல்லூரிகளில் மாணவர்களின் பெற்றோரிடம் நன்கொடை என்ற பெயரில் பணம் அறவிடும் கலாசாரம் கட்டுப்படவில்லை.

வசதியுள்ள பெற்றோர், தமது பிள்ளைகளைத் தனியார் சர்வதேச கல்லூரிகளுக்கு அனுப்பிப் படிக்கவைக்கின்றனர். ஆனால், வறுமைக்கோட்டின் கீழே வாழும் ஏழைப்பெற்றோரின் பிள்ளைகள் கல்வி சார்ந்த அடிப்படைத் தேவைகளையும் பெறமுடியாமல் தமது கல்வியை இடைநிறுத்திவிடுகின்றனர்.

பாடசாலை சென்று படிக்கவேண்டிய பருவத்திலிருக்கும் பிள்ளைகள் வெளிப்பிரதேச செல்வந்தர் வீடுகளில் வேலையாட்களாகி விடுகின்றனர். அல்லது சிற்றூழிய பணிகளுக்குச் சென்று விடுகின்றனர்.

இந்தப்பின்னணி ஒரு புறம் இருக்கட்டும். இலங்கை முப்பது ஆண்டு காலப்போரைச் சந்தித்தது, 2009 ஆம் ஆண்டு மே மாதம் இறுதி யுத்தம் நடந்த காலப்பகுதியில் பிறந்த குழந்தைகள் தற்போது 12 வயதை அடைந்திருப்பார்கள். இவர்களில் பெரும்பாலான பிள்ளைகளின் தந்தைமார் போர்க் காலத்தில் கொல்லப்பட்டிருப்பார்கள். அல்லது காணாமலாக்கப்பட்டிருப்பார்கள்.

இவ்வாறு குடும்பத்தின் மூல உழைப்பாளிகளை இழந்த குடும்பங்கள் வடக்கு - கிழக்கில் ஏராளம்.

இந்தக் குடும்பங்களின் தலைமைத்துவம் பெரும்பாலும் தாய்மாரிடத்தில்தான் தங்கியிருக்கிறது. வெளிநாடுகளிலிருந்து இயங்கிவரும் பல தன்னார்வத்தொண்டு நிறுவனங்கள் மற்றும் பழைய மாணவர் சங்கங்கள் ஆகியனவற்றிடமிருந்து கல்விக்கான ஆதரவு ஓரளவு கிடைத்து வந்தாலும், அனைத்து ஏழை மாணவர்களுக்கும் அந்த உதவிகள் கிடைக்கிறது என்று சொல்வதற்கில்லை.

ஒரு காலகட்டத்தில் பல்கலைக்கழக பிரவேசத்திற்கு வந்த தரப்படுத்தலினால் பெரிதும் பாதிக்கப்பட்டவர்கள் ஈழத்தமிழ் சமூகத்தினர். அதனால் விரக்தியடைந்த மாணவர்கள் விடுதலை வேட்கை உணர்வுடன், ஆயுதம் ஏந்திய இயக்கங்களில் இணைந்து போர்க்களம் புகுந்தனர். மடிந்தனர்.

குறிப்பிட்ட போர்க்காலத்தில், பொருளாதாரத் தடைகள் வந்தமையால், மாணவர்கள் வீட்டிலிருந்து கற்றவேளையில் இரவுப்பொழுதில் மண்ணெண்ணை விளக்குகளை நம்பியிருந்தனர். பாடசாலைகளும் சீராக இயங்கவில்லை. பாதிக்கப்பட்ட அகதிகளின் சரணாலயமாகவும் பல பாடசாலைகள் மாறியிருந்தன.

பக்கமும் இடி என்பது போன்று மாணவர்கள் இந்த கோவிட் நெருக்கடி காலத்தில் இரண்டு பக்கத்தாலும் பாதிக்கப்பட்டனர்.

நடந்து முடிந்த சாதாரண தரப்பரீட்சையில் இரண்டு தமிழ் மாணவர்கள் கொழும்பு மகஸின் சிறையிலிருந்து தோற்றியிருக்கும் செய்தியுடன், அவர்கள் இருவரும் உயர்தர வகுப்பிற்குச் செல்லத்தக்க சிறந்த புள்ளிகளை பெற்றிருக்கும் தகவலும் வெளியாகியிருக்கிறது.

குறிப்பிட்ட இரண்டு மாணவர்களையும் புலிகள் இயக்கத்தொடர்பு இருந்ததாக சந்தேகத்தின் பேரில் கைதுசெய்யப்பட்டவர்கள் எனவும் தெரியவருகிறது. புலிகள் இயக்கம் 2009 மே மாதம் மௌனிக்கப்பட்டு விட்டது எனச்சொல்லப்பட்டாலும், குறிப்பிட்ட இரண்டு மாணவர்களும் அக்காலப்பகுதியில் என்ன வயதிலிருந்திருப்பார்கள்...? எந்த வகுப்பில் படித்திருப்பார்கள் ..? முதலான கேள்விகளும் எழுகின்றன.

போர் விமானங்களின் தாக்குதலுக்குப்பயந்து மக்கள் பங்கர்களுக்குள் பதுங்கவேண்டியிருந்தது. இவ்வளவு நெருக்கடிகளும் கண்ணுக்குத் தெரிந்த எதிரியினால் உருவானவை.

ஆனால், கடந்த இருபது மாதங்களுக்கும் மேலாக கண்ணுக்குத் தெரியாத எதிரியான பெருந்தொற்றை ஏற்படுத்தும் வைரஸுடன் மக்கள் போராடிக்கொண்டிருக்கின்றனர். அந்த வைரஸும் தனது அண்ணன், தம்பிகளையும் அழைத்துக்கொண்டு திரிபடைந்த வைரஸ்களாகப் படையெடுத்து இரண்டாவது - மூன்றாவது அலை என வந்துகொண்டிருக்கின்றன.

இலங்கையில் இந்தப் பெருந்தொற்றினால், இறந்தவர்களின் எண்ணிக்கை பத்தாயிரத்தையும் தாண்டிவிட்டது.

அவ்வாறு இறந்தவர்களைத் தகனம் செய்வதற்கு மின்மயானம் தேடி அலையவேண்டிய நிர்க்கதி மருத்துவமனைகளுக்கு வந்துள்ளது.

இத்தனை சிக்கல்களுக்குள்ளும்தான் நாம் எமது மாணவர்களின் எதிர்காலத்தைப் பற்றி சிந்திக்க வேண்டியுள்ளது.

இந்த ஆண்டு நடைபெற்ற க. பொ. த. (சாதாரணதர ) பரீட்சைக்கு 06 இலட்சத்து, 22 ஆயிரத்து 352 மாணவர்கள் தோற்றியிருந்தனர். எனினும், 06 இலட்சத்து 36 ஆயிரத்து 53 மாணவர்களே உயர்தர வகுப்பிற்குச் செல்லும் தகுதியைப் பெற்றுள்ளனர்.

அவ்வாறாயின் சுமார் நான்கு இலட்சம் மாணவர்கள், அடுத்த ஆண்டு க. பொ. த. உயர்தர வகுப்பிற்குச் செல்ல மாட்டார்கள். அவர்களில் பெரும்பாலானோர் மீண்டும் அடுத்த ஆண்டு நடக்கவிருக்கும் க. பொ. த. சாதாரண தரப் பரீட்சைக்கு மீண்டும் தோற்றவேண்டும்.

இந்த நிலைமைக்குக் கடந்த இருபது வருடகாலத்தில், பாடசாலைகள் சீராக இயங்காதமையும் முக்கிய காரணம். மெய்நிகரில் படிக்கக்கூடிய வாய்ப்பும் வசதியும் இலங்கையில் எத்தனை சதவீதமான மாணவர்களுக்குக் கிடைக்கிறது.

இத்தனை பிரச்சினைகளுக்கும் மத்தியில் ஆசிரியர்களின் தொழிற்சங்கம் தங்களுக்குச் சம்பள உயர்வுகோரி வேலை நிறுத்தப் போராட்டத்தை தொடர்ந்தன.

உரலுக்கு ஒரு பக்கம் இடி. மத்தளத்திற்கு இரண்டு

நீதி அமைச்சர் மாண்புமிகு அலி சப்ரி அவர்கள், குறிப்பிட்ட இரண்டு மாணவர்களின் எதிர்காலம் குறித்துக் கரிசனை காண்பிக்க வேண்டும்.

மனிதாபிமான அடிப்படையில் அம்மாணவர்களை விடுவித்துச் சமூகத்தில் அவர்களையும் சிறந்த பிரஜைகளாக்குவதற்கான முன்னெடுப்புகளை அரசு மேற்கொள்ளவேண்டும். இதுகுறித்து நாடாளுமன்றத்திலிருந்துகொண்டு தமிழ்த்தேசியம் பேசும் எமது தமிழ் எம். பி. மார் என்ன செய்யப் போகிறார்கள்..? என்பதையும் நாம் பொறுத்திருந்து பார்ப்போம்.

இவ்வேளையில் கடந்த இருபது வருடங்களுக்கும் மேலாக அடங்காமல் தொடரும் பெருந்தொற்றுக்கு மத்தியில் நடக்கும் வேடிக்கைகளும் சிரிப்பையும் சிந்தனையையும் தோற்றுவிக்கின்றன.

பாரதப் பிரதமர் விளக்கேற்றச்சொன்னார். இலங்கையில் ஒரு பெண் சுகாதார அமைச்சர் மந்திரித்த தண்ணீருள்ள மண்குடத்தை நதியில் விட்டார். இறுதியில் தனது பதவியையும் இழந்தார். தமிழ்நாட்டில் ஒரு பிரதேசத்தில் கொரோனா தேவிக்குச் சிலையும் செய்து வழிபடத் தொடங்கினார்கள்.

நடிகை குஷ்புவுக்கே கோயில் கட்டிய பரம்பரை அல்லவா..?

அண்மையில் ஒரு பெரிய தமிழ் நிறுவனம் திருக்கேதீஸ்வரம் புனித தலத்தில் இந்தப் பெருந்தொற்றை அழித்துவிடவேண்டும் என்று பணம் செலவு செய்து யாகம் வளர்த்துள்ளது. அதற்காக மூத்த தமிழ் இலக்கண அறிஞர் தொல்காப்பியரின் உபதேசத்தையும் துணைக்கு அழைத்துள்ளது.

அதனால்தான் நாம் இங்கே மகாகவி பாரதியின் தீர்க்கதரிசனமான கூற்றை இந்தப்பதிவின் தொடக்கத்தில் குறிப்பிட்டோம்.

இரக்கமுள்ள அன்பர்களே, உங்களால் முடிந்த வரையில் ஏழை மாணவர்களுக்கு உதவுவதற்கு முன்வாருங்கள்.

அவ்வாறு செய்தால், ஊரார் பிள்ளையை ஊட்டி வளர்த்தால், தன் பிள்ளை தானே வளரும் என்பதையும் மறந்துவிடாதீர்கள்.



கற்றல் இடமாற்றம் என்றால் என்ன? என்பதற்கு பல்வேறு அறிஞர்கள் பல்வேறு வரைவிலக்கணங்களைச் சொல்லியிருந்தாலும், அவர்கள் சொல்ல வருகின்ற விடயம் ஒன்றுதான். அந்த வகையில் கீழே சொல்லப்படுகின்ற நான்கு வரைவிலக்கணங்களையும் கற்றல் இடமாற்றம் என்றால் என்ன? என்பதற்கான வரைவிலக்கணங்களாக முன்மொழிகின்றேன்.

ஓரிடத்தில் கற்றுப்பெற்ற விடயங்களை வேறோரிடத்தில் கற்பதற்குப் பயன்படுதல், கற்றல் இடமாற்றம் எனப்படும். ஒரு சந்தர்ப்பத்தில் கற்ற பயிற்சியை வேறொரு சந்தர்ப்பத்தில் பயன்படுத்துதல், கற்றல் இடமாற்றம் எனப்படும்.

ஒரு சந்தர்ப்பத்தில் பெறப்பட்ட அறிவு, திறன், மனப்பாங்கு என்பவை பிறிதொரு சந்தர்ப்பத்தில் செயற்படுத்தப்படும் அறிவு, திறன், மனப்பாங்கு ஆகியவற்றின் அளவில் செல்வாக்குச் செலுத்தும் முறைமை கற்றல் இடமாற்றம் எனப்படும்.

ஒருவன் ஒரு சூழ்நிலையில் கற்ற விடயத்தினை வேறொரு சூழ்நிலையில் பயன்படுத்துவது கற்றல் இடமாற்றம் எனப்படும். இவை சிந்தனை வடிவமாகவோ; உணர்ச்சிக் கோலமாகவோ; அறிவுத்திரளாகவோ; பலவித தேர்ச்சிகளாகவோ; திறன்களாகவோ அமைந்து காணப்படலாம்.

ஒவ்வொரு பாடத்தின் மூலமும் மாணவர் பெறுகின்ற



சி.உதயகுமார்

# கற்றல் இடமாற்றம்

அறிவு, திறன், மனப்பாங்கு போன்றவை எதிர்காலப் பிரச்சினைக்குப் பயன்படும் என்ற நோக்கிலேயே கலைத்திட்டம் தயாரிக்கப்படுகிறது. இதன் மூலமாகவே கலைத்திட்டம் தயாரிப்போர் பாட உள்ளடக்கங்களைத் திட்டமிடுகின்றனர்.

கற்றல் இடமாற்றம் மூன்று வகைப்படும்.

**நேரான கற்றல் இடமாற்றம்:**

முன்னர் கற்ற விடயமொன்று பிறகொரு சந்தர்ப்பத்தில் எவ்வாறு பயனுள்ளதாகப் பிரயோகிக்கப்படுகிறது என்பது நேரான கற்றல் இடமாற்றம் எனப்படும். இதுவே பயனுள்ள கற்றல் இடமாற்றம் என உளவியலாளர்கள் கருதுகின்றனர். ஒரு செயலின் மூலம் பெற்ற அனுபவம் அல்லது பயிற்சி அவன் செய்கின்ற இன்னொரு செயலை எளிதாக்குகிறது என்றும் சொல்லலாம். மொழிப்பாடத்தில் பெற்ற ஒருமை, பன்மை; எழுவாய், பயனிலை, செயப்படுபொருள், ஆண்பால், பெண்பால், உயர்திணை, அஃறிணை ஆகிய வேறுபாடுகளை இன்னொரு பாடத்தில் பயன்படுத்திக் கொள்ளுகின்ற ஒரு முறைமை ஆகும்.

**உதாரணம் (1):** இமயமலையின் உயரம் 8848 மீற்றர் ஆகும். இதனை, இமயமலைகளின் உயரம் 8848 மீற்றர் என சொல்லுதல் அல்லது எழுதுதல் தவறாகும்.

**உதாரணம் (2):** ஒரு மாணவன் ஒரு தொகைப் பணம் வைத்திருந்தான் என்றுதான் சொல்ல முடியும், எழுத முடியும். மாறாக, ஒரு மாணவன் ஒரு தொகைப்பணம் வைத்திருந்தாள் என்றோ அல்லது வைத்திருக்கிறார்கள் என்றோ சொல்ல முடியாது, எழுத முடியாது. **உதாரணம் (3):** சேவல்கள் கூவி ஊரை எழுப்பின. இதனை, சேவல்கள் கூவி ஊரை எழுப்பினார்கள் என்று சொல்ல முடியாது, எழுத முடியாது.

(ii) கணித பாடத்தில் கற்ற, பிரதியிடல், கூட்டல், கழித்தல், பெருக்கல், பிரித்தல், எளிய சமன்பாடுகளைச் சுருக்குதல் போன்ற கணக்குச் சுருக்கச் செயல்முறைகளை விஞ்ஞான பாடத்தில் வேறுவிதமான பாட அலகுகளில் பயன்படுத்தப்படுகிறது

**உதாரணம் (4):** ஆரம்ப வேகம் பூச்சியமாகவுள்ள ஒரு மோட்டார் கார் $2ms^{-2}$ எனும் சீரான ஆர்முடுகலுடன் சென்று $40ms^{-1}$ எனும் வேகத்தைப் பெறுகின்றது. இவ் வேகத்தைப்பெற மோட்டார் கார் எடுத்த காலத்தையும், சென்ற தூரத்தையும் காண்க.

| | |
|---|---|
| $v = u + ft$ | $s = ut + ft2$ |
| $40 = 0 + 2xt$ | $s = 0 + 2x20^2m$ |
| $2t = 40$ | $s = 400m$ |
| $t =$ 20 செக்கன்கள். | $s = 400m$ |

இந்த இரண்டு செய்கை முறைகளிலும், பிரதியிடல் முறைமை இடம்பெற்றுள்ளது, கூட்டல் முறைமை இடம்பெற்றுள்ளது, பெருக்கல் முறைமை இடம்பெற்றுள்ளது, வகுத்தல் முறைமை இடம்பெற்றுள்ளது.

**உதாரணம் (5):** இணைந்த கணித பாடத்தில் தூய கணிதம், பிரயோககணிதம் எனும் இரு கூறுகள் உள்ளன. தூயகணிதத்தில் பெறுகின்ற அட்சரகணித, திருகோண கணித சூத்திரங்களை பிரயோககணிதம், இயற்பியல் (பௌதிகவியல்) ஆகிய பாடங்களில் பிரயோகிக்கின்றோம்.

தூயகணித அறிவு இல்லை எனில், பிரயோககணிதம், பௌதிகவியல் பாடங்களைக் கற்பது மிகமிகக் கடினமாகும், அல்லது கற்க முடியாது என்றுகூடச் சொல்லலாம்.

மேலும் நேரான கற்றல் இடமாற்றமானது,

**கிடையான கற்றல் இடமாற்றம்.**

கீழிலிருந்து மேலான கற்றல் இடமாற்றம் என வகை செய்து நோக்கலாம். கிடையான கற்றல் இடமாற்றம் என்பது, ஒரு நிலையில் கற்ற விடயத்தினை அதேநிலையில் இன்னொரு கற்றல் செயற்பாட்டினைக் கற்கப் பயன்படுத்துவதாகும்.

**உதாரணம்:** 9 ஆம் தர மாணவன் ஒருவன் கணித பாடத்தில் தான் கற்ற எளிய சமன்பாட்டு சுருக்க முறைகளை, அதே வகுப்பு விஞ்ஞான பாடத்தில் வேலை, வலு, சக்தி, தூரமாற்ற வீதம் இடப்பெயற்சி மாற்ற வீதம், வேக மாற்ற வீதம், ஆகியவற்றைக் கணிப்பதற்கு பயன்படுத்திக் கொள்வான். கீழிருந்து மேலான இடமாற்றம் என்பது, ஒரு நிலையில் கற்ற விடயத்தினை அதன் அடுத்தடுத்த நிலையில் இன்னொரு கற்றலினை மேற்கொள்வதற்குப் பயன்படுத்துவதாகும்.

**உதாரணம்:** 9 ஆம் தர மாணவன் ஒருவன் கணித பாடத்தில் தான் கற்ற எளிய சமன்பாட்டு சுருக்க முறைகளை, 10 ஆம் தர, 11 ஆம் தர வகுப்பிலே ஒருங்கமை சமன்பாடுகளையும், இருபடிச் சமன்பாடுகளையும் சுருக்குவதற்குப் பயன்படுத்திக் கொள்வான்.

**எதிரான கற்றல் இடமாற்றம்:**

ஒரு சந்தர்ப்பத்தில் பெறுகின்ற பயிற்சி வேறொரு சந்தர்ப்பத்தில் கற்பதற்குத் தடையாக அல்லது இடையூறாகக் காணப்படும்.

**உதாரணம் (6):** இளமை, வளமை, இளம்புலி, இளந்தென்றல், களமாடுதல் என்று எழுதியும் வாசித்தும் பழக்கப்பட்ட ஒரு மாணவன் திரௌபதி, ஔவை, கௌரவம், கௌரி, கௌதமன் போன்ற சொற்களை வாசிக்கும் போது சிரமப்படுகிறான். (இங்கே ள எனும் எழுத்தின் பருமன் ஒரேயளவாக உள்ளதை அவதானிக்கலாம்.)

குறிப்பு: 'ள' என்ற எழுத்தும், ஔ, ஊ ஆகிய எழுத்துகளிலுள்ள 'ள' என்ற எழுத்தும் வேறுவேறானவை என ஆசிரியர்கள் பலர் மாணவர்களுக்குச் சொல்லித்தருவதில்லை. (பெரும்பாலானவர்கள்)

'ள' என்பது ளகரம் எனவும், ஔ, ஊ என்பவற்றில் வருகின்ற 'ள' என்பது வெள்ளிக்கால் என்றும் சொல்லித் தரவேண்டும். (இங்கே ளகரமும் வெள்ளிக்காலும் பருமனில் வேறுபடுவதை அவதானிக்கலாம்).

ஆகவேதான், 'ள' என்பதைவிட ஔ, ஊ இல் வருகின்ற 'ள' என சின்னதாக இருக்கும் என்பதையும் மாணவர்களுக்கு ஆசிரியர்கள் சொல்லித் தரவேண்டும்.

அப்படியென்றால் திரௌபதி என்பதும், திரௌபதி என்பதும் வேறுவேறான உச்சரிப்புள்ள சொற்கள் என மாணவன் உணர்ந்துகொள்வான். (இங்கே, 'ள' வின் பருமன் வேறுபட்டிருப்பதைக் காணலாம்.)

**பூச்சிய இடமாற்றம்:**

ஒரு சந்தர்ப்பத்தில் பெறுகின்ற பயிற்சி இன்னொரு பயிற்சியின்போது எவ்வித பாதிப்பையும் ஏற்படுத்தாது எனில், அது பூச்சிய இடமாற்றம் எனப்படும்.

**உதாரணம் (7):** சங்கீத பாடத்தில் கற்றுக்கொண்ட ஏழு ஸ்வரங்களால் உருவான 16 ராகங்களையும் வரலாற்றுப் பாடத்தில் எங்கேயும் பயன்படுத்த முடியாது.

**உதாரணம் (8):** கணிதபாடத்தில் கற்ற சமன்பாடுகளையும் சூத்திரங்களையும் சைவசமய பாடத்தில் எங்குமே பயன்படுத்த முடியாது.

இவ்வாறாக கற்றல் இடமாற்றத்தின் தன்மையும், வகைமையும் அமைவதைக் காண்கிறோம். இங்கே, கற்றல் இடமாற்ற வகைகளுக்குச் சொல்லப்பட்டிருக்கிற உதாரணங்கள், எந்தவொரு மாணவருக்கும் இலகுவில் விளங்கும் வகையில் சொல்லப்பட்டிருக்கிறது எனும் நம்பிக்கயுடன் இக்கட்டுரையினை நிறைவு செய்கிறேன். ■

# ஆன்மீகமும் கிரியா யோகமும்

ஆன்மீக வாழ்வு என்பது சன்னியாசமன்று. உலக, குடும்ப வாழ்வில் இருந்து கொண்டே ஆன்ம ஈடேற்றத்திற்கான தேடல்களைச் செய்ய முடியும். மனிதப் பிறப்பு என்பது சிந்திப்பதற்கும் அதனைச் சிறப்பாகப் பயன்படுத்துவதற்கும் படைக்கப்பட்டது. உடலில் உயிர் இருக்கும் வரை சிவமாகவும், உயிர் பிரிந்தபின் சவமாகவும் மாறுகிறது. உயிர் ஆன்மா என்று சைவசித்தாந்தத்தில் கூறப்படுகிறது. பரம்பொருளில் இருந்து வந்த ஆன்மா பரமாத்மாவையே சென்றடைய வேண்டும். தற்போதைய காலகட்டத்தில் கோவிட் - 19 மனித இனத்தை ஆட்டிப்படைத்து வருகிறது. வயது வித்தியாசமின்றி நோய்த்தொற்று, மரணபயம், தனிமை, மனஅழுத்தம், விரக்தி மனப்பான்மை, நிலையற்ற வாழ்வு என இன, மத, மொழி வேறுபாடின்றி ஆட்டிப்படைக்கும் இக்கொடிய



நோய்க்கு மன உறுதியும் செயற்பாடுகளும் தேவை.

தொல்லைகளை நீக்கும் திறவுகோலாக கிரியா பாபாஜியின் கிரியா யோகம் அமைகிறது. 3000 வருடங்கள் தொன்மை வாய்ந்த கிரியா யோகம் கலிகாலத்திற்கு ஏற்ற விதமாக 1952 ஆம் ஆண்டு யோகி இராமையாவிற்கும், திரு. நீலகண்டனுக்கும் கிரியா பாபாஜியால் உபதேசிக்கப்பட்டது. இது உலகம் முழுவதற்கும் பொதுவான சிறப்பான செயல் முறையாகும். இலகுவான யோகாசனப் பயிற்சிகள், மூச்சுப் பயிற்சிகள், தியானம், மனதை ஒரு நிலைப்படுத்த மந்திர ஜபம், ஜபமாலை என பல்வேறு நிலைகளைக் கொண்டது.

கிரியா பாபாஜியின் கூற்றுப்படி, 'வாழ்க்கை சுருக்கமானது, காலம் ஓடுகிறது, எழு, விழி, ஆத்மாவை உணர். துயரத்திலும் இன்பத்திலும் சமபுத்தி வேண்டும்' என்கிறார்.

யோகாசனப் பயிற்சிகள், பிரார்த்தனைகளைக் காட்டிலும் விஞ்ஞான பூர்வமானவை. பரமஹன்ச யோகானந்தர் கூறுகிறார், 'நான் பிரார்த்தனையில் ஈடுபட்டதை விட விரைவாக கிரியா யோகப்பயிற்சி மூலமாக பயன் அடைந்தேன்.'

கிரியா யோகத்தில் கிரியா பாபாஜி நான்கு விடயங்களை வலியுறுத்துகின்றார். அன்பு, தொண்டு, பக்தி மற்றும் சரணாகதி. இவற்றைச் செயற்படுத்துவதற்கு உடல் ஆரோக்கியம் சிறப்பாக இருக்க வேண்டும். படிப்படியாக உடலின் ஐந்து உறைகளுக்குமான பயிற்சிகள் கிரியா யோகத்தில் கூறப்பட்டுள்ளது. ஆரம்ப நிலை சாதகர்கள் உடலையும் மனதையும் ஒருங்கிணைத்து பயிற்சி செய்து படிப்படியாக முன்னேறலாம். பல உடல் நோய்களுக்குத் தீர்வாக 18 ஆசனங்களும், மனஅழுத்தம் நீங்கி மனம் ஒருமைப்பட பிராணாயாம பயிற்சிகளும், தியானங்களும் என நமக்காக மகா அவதார் சித்தர் பாபாஜி நாகராஜ் அவர்களால் நமக்கு வழங்கப்பட்டுள்ளது. நிகழ்காலத்தில் சந்தோசமாக வாழ கிரியா யோகப் பயிற்சிகள் உதவுகின்றன. ■

**தயாநிதி கனகேஷ்**
பிரானிக்கீலர்
கொழும்பு பாபாஜி யோகா சங்கம்

# மாதவம்

கருணைரவி

அவர்களைக்கண்டதும் எழும்புவதா? அல்லது இருப்பதா? எனும் வினாக்கள் என்னில் எழுந்தன. இருவினாக்களும் என்னில் முட்களாகின. அவ்வினாக்கள் நினைவுகளைக் காயப்படுத்திக் குருதியை வடியவைத்துக் கொண்டிருந்தது. எழும்பினால் கைகள் உயர்த்த வேண்டும். எல்லோரும் அவர்களைக் கண்டதும் கைகளை உயர்த்தியபடியும் உயர்த்தாமலும் போகின்றனர். சனங்களின் கைகளில் எதுவுமே இல்லை. இறுதியாக வந்து இருக்கும் போது ஒரு தறப்பாளும் ஒரு பானையும் ஒரு சட்டியும் கொண்டு வந்தார்கள். இப்போது அவைகளை விட்டு வெறுங்கைகளுடன் போகின்றனர். சிலர் தோள்களில் சிறு பைகளையும் சிறு முடிச்சுகளையும் கொண்டு போகின்றனர். அவர்களின் இறுதிப் பயணம் அது. இனி எந்த அலைச்சலும் வராது என்ற எண்ணம் மேலெழ சிலர் போகின்றனர். சிலர் இனித்தான் பெருந்துயர் எனும் கவலையுடன் போகின்றனர்.

அவர்களிடம் போகின்றவர்களில் சிலரின் முகங்களில் மகிழ்ச்சி, சிலரது முகங்களில் பயம். அவர்கள் எல்லோரையும் விகாரமற்ற முகங்களால் வரவழைத்தனர். நான் மட்டும் அவர்களிடம் போகவில்லை. அவர்களிடம் போகத்தான் வேணும். வேறு வழியில்லை. கொட்டிலுக்குள் இருந்து அவர்களைப் பார்த்தேன். தோள்களில் துப்பாக்கிகள் தொங்கியபடி இருந்தன. துப்பாக்கிகளை எவரும் சனங்களுக்கு நீட்டவில்லை. குழந்தைகள் துப்பாக்கிகளைப் பார்த்து அஞ்சியபடி தாயின் சேலைகளை இறுக்கிப் பிடித்துக் கொண்டு போனார்கள். அவர்கள் குழந்தைகளை சிரிப்பால் தடவினர். குழந்தைகள் வெருண்டனர்.

நான் தறப்பாள் கொட்டிலுக்குள் இருந்தேன். சூரிய ஒளி உள்ளே கொட்டியபடி இருந்தது. சன்னங்களின் துளைகள் நட்சத்திரங்கள் மாதிரி தறப்பாளில் இருந்தன. அவர்கள் இன்னும் என்னைப் பார்க்கவில்லை. பார்த்தால் கூப்பிடுவார்கள். புயலில் சிக்குண்ட மாதிரி இருந்தது ஊர். பனைகள் முறிந்து, வீடுகள் இடிந்து, குடில்கள் சிதைந்திருந்தன. சிறு செடிகள் பிய்த்தெறியப்பட்டிருந்தன. அங்காங்கு ஆட்களற்ற பிணங்களைக் காகங்கள் கொத்திக் கொண்டிருந்தன.

அவர்களில் ஒருவன் வந்தான். அவன் என்னைக் கண்டு வருகின்றானா? அல்லது பிணங்ளைக் கொத்தும் காகங்களைத் துரத்த வருகின்றானா? அவன் என்னைக் கண்டிருக்க வேண்டும். எல்லாச்சனங்களும் அவர்களைக் கண்டு அஞ்சி, ஒடுங்கி போய்க் கொண்டு இருக்கும்போது நான் மட்டும் அவர்களின் சொற்களை செவிக்குள் விழுத்தாது இருக்கின்றேன் என்னும் கோபம் அவனில் கொதித்தெழ அவனிடம் இருக்கும் துப்பாக்கி, ஒரு சன்னத்தை என்மேல் துப்புவதற்குத் தயாராகிறதா?

அவன் தோளில் துப்பாக்கி உறங்கியது. அவன் அதை கையில் தூக்காது வந்தான். பிய்ந்த தறப்பாளுக்குள் சக்கப்பணிய இருப்பதை சிறிய எருக்கலை மறைத்துக்கொண்டிருந்தது. எருக்கலை தெய்வாதீனமாகக் குண்டுகளுக்குள் எந்த சேதங்களுமற்று காற்றில் தலையாட்டியது. அவன் எருக்கலைக்குக் கிட்ட வந்து நின்றான். ஜீன்சின் சிப்பை இழுத்துச் சவண்டிருந்த ஆண்குறியை வெளியில் இழுத்து எருக்கலைக்கு நீர்பாய்ச்சி முடித்தபோது என்னைக் கண்டான்.

“அடோவ்...”

ஜீன்சுக்குள் ஆண்குறியை விட எடுத்த கையை விடாமல் தூங்கிய துப்பாக்கிக் குழந்தையை கையில் தூக்கி சேம்பரைத் தட்டி லிவரில் ஆள்காட்டிவிரலை வைத்துக் கேட்டான்.

“ஏன் இருக்கிறது? ஆக்கள் போறது தெரியல...” அதட்டலாகக் கனிவற்று வந்தது அவனின் சொற்கள். அந்தச் சொற்களுக்குப் பின்பும் எனக்கு எழும்புவதா? அல்லது இருப்பதா? என எந்த முடிவும் வரவில்லை. அவனின் சொற்களுக்கு செவிமடுக்காதவனாக நான் இருப்பதைப் பார்த்த அவன் என்னை ஒரு குருடனாகவோ அல்லது செவிடனாகவோ அல்லது ஊன முற்றவனாகவோ நினைத்திருக்க வேண்டும். கைகளில் ஏந்திய துப்பாக்கிக் குழந்தையை தோளில் தொங்கவிட்டு, அவன் என்னை எழும்பி வரும்படி கைகளுக்கு மொழியை ஏவினான். நான் எழும்பவில்லை. அவன் என்னைக் கண்பார்வையற்றவனாய் கருதியிருக்க வேண்டும். அவன் என்னை அணைத்துத் தூக்க கிட்ட வர எத்தணிக்கும்போது நான் எழும்பி கைகளை உயர்த்தும்போதுதான் அவன் என் உடம்பில் ஆடைகள் அற்றதைக் கண்டான்.

என் நிர்வாணத்தைக் கண்டு அவன் திகைத்தான். சற்று நேரம் என்னையே பார்த்தான். உயர்த்திய கைகளைக் கீழே விடும்படி சொன்னான். நான் கைகளால் எனது ஆணுறுப்பை பொத்தினேன். விரல்களுக்குள்ளால் பிதுங்கி விதை வெளியில் தள்ளியது. நான் ஒரு துணிக்காய்த் தேடியலைந்த இடங்களை அவன் கண்களால் துளாவினான். எதுவும் கண்களில் படவில்லை.

அவன் என்னையே பார்த்தான். கையில் இருந்து கால் வரைக்கும் கறுத்தும் நரைவிழுந்த உரோமங்களும் அடர்காடாய் இருந்ததைப் பார்க்கின்றான் என உணர்ந்தேன். மூன்றுமாதம் மழிக்கப்படாமல் தாடியிருந்தது. முடியும் நீண்டிருந்தது. என் நெஞ்சில் ஒரு சென்றிமீற்றரளவிலான உரோமங்கள் இருந்தன. என்னைப் பார்க்கும்போது அவன் மனிதனாக நினைத்திருப்பானா? என்னைப் பார்க்கும்போது ஆசிய, ஆபிரிக்கக் காடுகளில் வசிக்கும் ஹொமினிடே குடும்பத்தைச் சேர்ந்த கிப்பன் இன மனிதக் குரங்குபோல நினைத்திருப்பானா? அவன் என்னை நட என்றான். அவனுக்கு முன்னே நடந்தேன்.

***

எனக்கு இமையவனைப் பிடிக்காது. எனக்கு மட்டுமல்ல எங்களைச்சுற்றி இருப்பவர்கள் எவருக்கும் அவனைப்பிடிக்காது. அவன் வருகின்றான் என்றால் அந்தச் செய்தி ஒரு காற்றைப்போல் எல்லா ஊரும் பரவும். உடனே எல்லோரும் பதுங்கு குழிக்குள்



**சில தாய்மார்கள் இயக்கத்தில் இருக்கும் தங்கள் பிள்ளைகளை வீட்டுக்கு வர வசியம் பெறத்தான் வருவார்கள். அப்படியானவர்களைத் தனிய அழைப்பான். அவர்களிடம் விபூதி ஓதிக் கொடுப்பான். அவர்கள் வீட்டுக்கு வரும்போது விபூயை உடம்பில் பூசியோ தேநீரில் கலந்தோ கொடுத்தால் ஒருமாதத்தில் போராளிகள் இயக்கத்தை விட்டு விலத்தி வீட்டுக்கு வருவார்கள் என தாய்மார்கள் நம்பினார்கள்.**

போய்விடுவார்கள். அவன் வந்ததும் புதுக்குடியிருப்பில் இருந்து ஷெல் அடிக்கத்தொடங்குவார்கள். அவன் வந்ததும் எப்படி ஆமிக்குத் தெரிகிறது என எங்கள் எல்லோருக்கும் புதிராகவே இருந்தது. அவர்கள் ஏவும் ஒவ்வொரு ஷெல்லுக்கும் ஐந்தாறுபேர் செத்துக்கொண்டிருந்தார்கள்.

இராணுவம் பாதுகாப்பு வலயம் என மாத்தளன், பொக்கணை, வலைஞர்மடம், முள்ளிவாய்க்கால் கிராமங்களை அறிவித்தவுடன் மாத்தளனிலும் பொக்கணையிலும் சனங்கள் நிறைய இருந்தனர். மாத்தளனில் இருக்கும் ஆஸ்பத்திரியும் பொக்கணைப் பள்ளிக்கூடமும் தங்களுக்குப் பாதுகாப்பு என நினைத்தார்கள். பள்ளிக்கூடத்துக்கு அருகிலும் ஆஸ்பத்திரிக்கு அருகிலும் குண்டுகள் விழ இமையவன் உலாவுவதாக நினைத்தார்கள். வேவு விமானங்கள் வட்டமிட்டால் எந்தப் போராளிகளும் வெளியில் நிற்கப் மாட்டார்கள். சீருடைகள் அணிந்தவர்கள் மரங்களுக்குக் கீழே மறைந்திடுவார்கள்

ஒருநாள் இமையவன் மாத்தளனில் நின்று இரணைப் பாலையில் நிற்கும் போராளிளுடன் வோக்கியில் கதைத்துக் கொண்டு நிற்க ஷெல் வந்து இமையவனுக்கு அருகில் விழுந்தது. நானும் இமையவனும் இன்னும் சிலரும் தப்பினோம். நெஞ்சில் சளிபிடித்துப் பரமேஸ்வரி அவதிப்பட மாத்தளன் ஆஸ்பத்திரிக்குப் பரமேஸ்வரியை கூட்டிச்செல்லும்போதுதான் அந்தச் ஷெல்லும் இயமனாகியது பரமேஸ்வரிக்கு.

இமையவன் வோக்கியில் கதைக்கத்தான் ஷெல்கள் ஏவினார்கள் என்று சனங்கள் கதைத்தார்கள். ஆனால் அவன் வோக்கியில் கதைக்கவில்லை. இமயவனைக் கண்டால்யாரோ றெக்கி கொடுக்கிறார்கள் என்று இமையவனுக்கு அருகில் நின்றவன் சொன்னான். அவர்கள் அப்படிக் கதைப்பதொன்றையும் காது கொடுக்காது பரமேஸ்வரியை வாரியணைத்துத் தூக்கினேன். இரத்தம் அவளின் தலையில் இருந்து எனது மடிக்கு இறைத்தது.

“வித்தகியைக் கொண்டுவா...”

இமையவனுக்கு கத்திச் சொன்னேன். வித்தகி பரமேஸ்வரியைப் பார்க்கவேண்டும். பரமேஸ்வரியால்தான் வித்தகியைப் பார்க்கமுடியவில்லை. வித்தகியாவது பரமேஸ்வரியைப் பார்க்க வேண்டும். கோணாவிலுக்குச் ஷெல் அடித்து அடுத்தநாள் பாரதிபுரத்துக்கு ஆமிவர, வித்தகி இயக்கத்துக்குப் போனாள். “ஆமியை கிளிநொச்சியில் இறங்க விடக்குடாது” என்று கடிதம் எழுதி வைத்துச்சென்றாள். அவளுக்கு அந்த ஆவேசம் கோணாவிலில் விழுந்த ஷெல்லில் அவளுடன் ஒன்றாகப்படித்த துஷானி இறந்ததுதான். தனக்கும் அப்படி ஒரு நிலமை வரக்கூடாது என கடித்ததை முடித்து வைத்தாள்.

அவள் இயக்கத்துக்குப் போனபிறகு பரமேஸ்வரி இன்னும் வித்தகியைக் காணவில்லை. வித்தகி போட்டிருந்த சங்கிலி, தோடு எல்லாவற்றையும் இமையவன் கொண்டு வந்து பரமேஸ்வரியிடம் கொடுத்தான். வாங்கும் போது பரமேஸ்வரி கண்ணீர் சிந்தினாள். சீலையில் முடிந்து வைத்திருந்த வித்தகியின் தோடையும் சங்கிலியையும் அவிழ்க்கும்போதுதான் அதை நினைத்தேன். அவள் எழுதி வைத்த அந்த கடிதத்தில் சங்கிலியையும் தோடையும் சுற்றிப் பரமேஸ்வரி வைத்திருந்தாள். அதில் பன்னிரண்டு தடவைகள் “அப்பா” என எழுதியிருந்தாள். என் கண்களில் வடிந்த கண்ணீர் அந்தக் காகிதத்தின் “அப்பா” என்ற எழுத்தின் மேல் விழுந்தது.

அடுத்த சீலைத்தலப்பில் இருந்த முடிச்சை அவிழ்த்தேன். முடிச்சில் இரத்தம் ஊறியிருந்தது. கைகள் பிசுபிசுக்க முடிச்சில் இருந்த நூலையும் சிறிய அச்சரக் கூட்டையும் எடுத்தேன். அட்சரக்கூட்டுக்குள் மந்திரம் ஓதி எழுதி வைத்த தகடும் இருந்தது. அதை நேற்றுத்தான் நானும் பரமேஸ்வரியும் பொக்கணையில் இருக்கும் மாதவத்திடம் வாங்கினோம்.

மாதவத்தைப் புதுக்குடியிருப்பில் தெரியாதவர்களே இல்லை. மாதவம் ஒரு மந்திரவாதி. பேய் சூனியத்துக்குப் பெயர் போனவன் என்று எல்லோரும் கதைப்பார்கள். புதன் கிழமையும் வெள்ளிக்கிழமையும் சனங்கள் அவன் வீட்டில் நிறைந்திடுவார்கள். வீடு சிறிய குடிசை. வீட்டுக்கு நூறுயார் தள்ளி சிறிய கொட்டில் அம்மன். அந்தக் கொட்டில் அம்மன்தான் மாதவத்தின் வாலாயம். அம்மனில் எப்போதும் சாப்பிராணி வாசம் கமகமக்கும். விபூதியும் சந்தனமும் எப்போதும் மாதவத்தின் நெற்றியில் இருக்கும். பச்சைக் கரை வேட்டி அணிந்திருப்பான். சேட்டுப் போடமாட்டான்.

வெள்ளி, புதன் கிழமைகளில் அம்மன் வாசலில் சனங்களை இருத்திக் குறி சொல்லுவான். அவன் சொல்வது உண்மை என எல்லோரும் சொல்வார்கள். மாடு களவு போனால், மண் வெட்டி துலைந்தால், சரியாக எடுத்த ஆளைச் சொல்வான் எனக் கதைப்பார்கள். பொடியள் பொம்பிளையளைக் கிளப்பிக்கொண்டு போனால் ஒளித்திருக்கும் இடத்தை மை போட்டுச் சொல்வதில் கெட்டிக்காரன் என்றும் கதைத்தார்கள்.

சில தாய்மார்கள் இயக்கத்தில் இருக்கும் தங்கள் பிள்ளைகளை வீட்டுக்கு வர வசியம் பெறத்தான் வருவார்கள். அப்படியானவர்களை தனிய அழைப்பான். அவர்களிடம் விபூதி ஓதிக் கொடுப்பான். அவர்கள் வீட்டுக்கு வரும்போது விபூயை உடம்பில் பூசியோ தேநீரில் கலந்தோ கொடுத்தால் ஒருமாதத்தில் போராளிகள் இயக்கத்தை விட்டு விலத்தி வீட்டுக்கு வருவார்கள் என தாய்மார்கள் நம்பினார்கள்.

கல்யாணம் செய்த போராளிகள் ரகஸியமாக இரவில் வருவார்கள். தங்களைச் சண்டைக்களங்களுக்கு அழைக்கக் கூடாது என்றும் தங்களுக்கு ஆயுள் நீளவேண்டும் என்றும் சொல்வார்கள். அப்படியானவர்களுக்கு அட்சரக் கூடுகளுக்குள் மந்திரம் ஓதிய தகடுகளை வைத்துக் கொடுக்க அவர்கள் இடுப்பில் கட்டுவார்கள்.

இயக்கத்தை விட்டு விலத்திப்போகும் போராளிகளுக்கு மாதவம் மந்திரம் ஏவுவதாகவும் திருமணமான போராளிகள் மாதவம் வீட்டுக்கு இரவில் செல்வதாகவும் இயக்கம் அறிந்தவுடன் ஒருநாள் இரவு மாதவத்திடம் போராளிகள் போனார்கள்.

“சனங்களுக்கு மூடநம்பிக்கையள வளக்கவேண்டாம் மூடநம்பிக்கையற்ற சமூகமாக வருங்காலம் இருக்கோணும்”

என்று சொல்லியவர்கள் பேய், பிசாசு, மந்திரம் எல்லாவற்றையும் விடும்படி கூறிவிட்டுச் சென்றார்கள். அதற்குப்பிறகு மாதவம் ரகஸியமாகத் தன்னை நாடிவருபவர்களை

(15 ஆம் பக்கம் பார்க்க...)


# அறிந்தேன்... பகிர்ந்தேன்...



வியாக்ரன்

உலகில் நீளமான மீசையுள்ள நபர் என்ற பெருமையினை இந்தியாவைச் சேர்ந்த ராம்சிங் காவுகான் பெற்றுள்ளார். 14 அடி நீளமுள்ள மீசையினை வளர்த்து கின்னஸ் நூலில் இடம் பிடித்துள்ளார். இதே போல அமெரிக்காவைச் சேர்ந்த சமந்தா ராம் ஸ்டெல் என்ற பெண்மணியின் வாய் 10 cm ஆகும். வாயின் இடைவெளியின் அகலம் 6.56 cm ஆகும். இவரே உலகின் பெரிய வாயுள்ள பெண் என கின்னஸ் நூலில் இடம் பிடித்துள்ளார்.





கர்ணம் என்றால் காது என்று பொருள். காது வழியாகப் பிறந்ததால்தான் குந்தியின் மூத்த மகனான கர்ணன் அப்பெயரைப் பெற்றான். காதும் கர்ணனைக் கௌரவப் படுத்தும் வகையிலே குண்டலங்களை வழங்கியதாகப் புராணங்கள் கூறுகின்றன. காது வழியாகப் பரவுகின்ற கதைகளை கர்ண பரம்பரைக் கதைகள் என்கிறோம். தமிழிலே தனிக்குறிலை அடுத்து ரகர மெய் இடம்பெறுவதில்லை. எனவே கர்ணன் என்பதைக் கன்னன் என எழுதுகிறோம். அதே போல வர்ணம், சொர்ணம் என்பன வன்னம், சொன்னம் என எழுதப்படுகின்றன. தர்மம், சர்வம், கர்வம், பர்வதம், நிர்வாகம் என அமைவன வடமொழி என்பதை எளிதாக இனங்காணலாம்.

a-x X b-x X c-x என்று நகர்ந்து z-x வரை சென்றால் விடை என்னவாக அமையும்? எளிதாகவே விடையினைக் கண்டறிந்தால் நீங்கள் கணிதப் புலிதான்! சூழியம் (பூஜ்யம்) தான் விடை. ஓரிடத்தில் x – x எனவும் அமையும் அல்லவா? எனவே சூழியத்தினை எப்பெறுமானத்தால் பெருக்கும் போதும் சூழியம் என்றே வரும்.

சினிமாவில் ஒரே வகையான கதையினை மைய நீரோட்டமாகக் கொண்டு பல திரைப்படங்கள் வெளிவருவது உண்டு. “எங்க வீட்டுப் பிள்ளை” திரைக்கதையில் இத்தனை படங்களா? என வியக்கும் அளவில் நகலாக்கம் நிகழ்ந்துள்ளது. Ram aur shyan, Seeta aur Geeta, Ganga manga, வாணி ராணி, தராசு, தங்கமடி தங்கம், சத்யம் சிவம் சுந்தரம், அதிசயப் பிறவி, ராஜாதிராஜா, தூங்காதே தம்பி தூங்காதே, மங்கம்மா சபதம், இம்சையரசன் 23 ஆம் புலிகேசி எனப் பட்டியல் நீண்டு செல்கின்றது.

பூமிக்கு மொத்தமாக மூன்று நிலா உண்டு என ஹங்கேரி நாட்டு வானியல் ஆராய்ச்சியாளர்கள் நிறுவியுள்ளனர். நாம் பார்க்கும் நிலா தவிர்ந்த ஏனைய இரு நிலாவும் ஒளியைப் பிரதி பலிப்பதில்லை. அவை பேய் நிலாக்கள் (Ghost moons) எனப்படுகின்றன.

Inception, Lion King, Gladiator, Interstellar, Rain man போன்ற பிரபலமான திரைப்படங்களுக்கு இசை அமைத்தவர் ஜேர்மனிய இசை மேதை Hans zimer என்பது பலரும் அறிந்த செய்திதான். உலக இசையமைப்பாளர்களின் தர வரிசைப் பட்டியலில் Hans zimer 13 ஆவது இடத்திலே அமைந்துள்ளார். 9 ஆவது இடத்திலே இந்திய இசையமைப்பாளர் ஒருவர் இடம் பிடித்துள்ளார். அப் பெருமைக்குரிய மேதை இசைஞானி இளையராஜாதான்.

புலவர் ஒருவரது பாதத்தில் நெருஞ்சி முள் குத்திவிட்டது. அவரோ மற்றொருவரிடம் “முக்காலை கையிலெடுத்து மூவிரண்டு போகையிலே இக்காலை ஐந்து தலை நாகமொன்று அழுந்தக் கடித்தது காண்” என்றார். அதாவது கைத்தடியை (முக்கால்) ஊன்றியபடி ஆறு நோக்கிப் (மூவிரண்டு) போகும் போது நெருஞ்சி (ஐந்து தலை நாகம்) குத்தியது என்றார். மற்றைய புலவர் அதற்குக் கூறிய மருந்துதான் வியப் பானது. “பத்துரதன் புத்திரனின் மித்திரனின் சத்துருவின் பத்தினியின் காலை வாங்கித் தேய்” என்றார். அதாவது தசரதனின் (பத்துரதன்) மகனான இராமனின் நண்பனான (மித்திரனின்) சுக்ரீவனின் எதிரியான (சத்துருவின்) வாலியின் மனைவி தாரை அச்சொல்லில் கால் நீக்கினால் தரை என அமையும் பாதத்தைத் தரையிலே தேய்க்குமாறு கூறினார்.

அவுஸ்ரேலியாவில் மெல்போர்ன் நகரில் Melton பகுதியில் ஒரு வீதிக்கு, கவிக்கோ தெரு (Kavikko STREET) எனப் பெயர் சூட்டப்பட்டுள்ளது. கவிக்கோ அப்துல் ரகுமானின் நண்பரான M.A. முஸ்தபா என்பவர் அரசிடம் விண்ணப்பித்து அனுமதி பெற்று இப் பெயரைச் சூட்டியுள்ளார். அவுஸ்ரேலியாவில் வெள்ளை இனச் செல்வந்தர்கள் அதிகமாக வாழும் பகுதியொன்றிலுள்ள தெருவிற்கே தமிழ்க் கவிஞரின் பெயர் சூட்டப்பட்டுள்ளது.



ஈழத்துச் சிறுகதை உலகில் வீச்சுக் குறையாத தொடர் செயற்படுநர்களில் குறிப்பிடத்தக்கவராக உடுவில் அரவிந்தன் காணப்படுகின்றார். ஆழமான தேடல், தற்புதுமையான விடயங்களை இனங்கண்டு பாராட்டுதல், அற்புதமான அதிர்வுகளோடு கதை சொல்லல், எளிமையாகப் பழகுதல் போன்ற பண்புகளோடு அமைந்துள்ளார். உணர்வுகள் (1999) பாழ் வெளி (2017) ஆகிய இவரது இரு சிறுகதைத் தொகுதிகளும் கனதியான முயற்சிகளாகும். கவிஞர் கவிப்பிரியா சிவபாலனின் கவிதையோடு இவ்வாரப் பதிவினை நிறைவு செய்கிறேன்.

பாலைவனப் பெருவெளி
பின்னிரவில் பேரமைதியாய் தூங்கிவிடுகிறது
போராட்டங்களின் பின்
பெருங்குளிர்த்தி நடந்திருக்க வேண்டும்
இல்லையேல் ஆற்றாமையில்
வலுவிழந்து போயிருக்க வேண்டும்
அந்தக் கொடுஞ் சூரியனின் கூர்வெம் கதிர்
உருவின்றி உறங்கிக் கிடந்த
காற்றைத் தட்டி எழுப்பி
உருவேற்றி விடுகிறது
காற்றும் கோரதாண்டவமாடிப்
புழுவாரி இறைத்து
பாலைவனம் புதுக் கோலம் கொண்டு
பால் நிலாவையும்
பாதிநேரம் மறைத்து விடுகிறது...

உறங்கிக் கிடந்த வெம் நினைவு
மனதைக் கிண்டி விட்டுப் போக
சூறாவளி
பகல்களை மட்டுமா
முன்னிரவுகளையும்
கடன் வாங்கிக் கொள்கிறது.

■

# நிலைக்கண்ணாடி

தரிசனன்




## எமது மன வலிமையைப் பலவீனப்படுத்தும் எதிர்மாற்றப் பண்புகள்

மனிதர்களாகிய எம்மிடத்தில் இருக்கின்ற ஒரு அரிய உடைமை, எமது மனம் என்னும் வஸ்து. இந்த மனதின் நினைவுகள், கற்பனைகள் விபரிக்க இயலாத வல்லமைகளின் வழியேதான் எமது தொழிற்பாடுகள் இடம் பெறுகின்றன. இதன் காரணத்தினால் தான் எமக்கு மனிதர்கள் என்னும் நாமம் வழங்கப்பட்டு வருகின்றது.

மனித மனத்தில் எவ்விதமான உணர்வுகள், நினைவுகள் உருவாகி நிலவுகின்றனவோ அதன் வழியேதான் எமது செயற்பாடுகள் தீர்மானிக்கப்படுகின்றன. அத்தகைய உணர்வுகளும் எண்ணங்களும் நேர்மறை இயல்புகளுக்கு அதாவது துணிச்சல், ஆர்வம், திறமை, ஓயா உழைப்பு, நம்பிக்கை, உதவும் இயல்பு, இரக்கம் போன்ற உணர்வுகளை ஒட்டி அமையுமெனின் நாம் நமக்கும் பிறருக்கும் பயன்படத்தக்க இயல்புகளை உடையோராய் உயர்ந்துவர முடியும்.

அவ்விதமாய் இல்லாமல் பயன் கொள்ளும் தன்மை, எதிலும் ஈடுபாடு காட்டாத அடிப்படைத் திறன்கள் அற்ற தன்மை, சோம்பேறித் தன்மை, எதிலும் அவ நம்பிக்கை, அடுத்தவரில் இரங்காத இயல்பு, எதிலும் நம்பிக்கை கொள்ளாத போக்கு என்பன எம்மிடம் காணப்படுமானால் நாம் நமக்கோ பிறருக்கோ உதவாத பயனற்ற மனிதர்களாகவே உருவாகி விடுவோம்.

நாம் எப்போதும் தொழிற்பட்டு வல்லவர்களாக மேம்பட உதவுவன மேற் சொன்ன நேர் நிலைப் பண்புகளே ஆகும். இத்தகைய நேர்நிலைப் பண்புகளை உடையவர்கள் சமூகத்தின் பயன்மிகு பிரஜைகளாக உருவாக வல்லோராகத் திகழ்வது இயல்பு. நமது சமூக நோக்கில் நல்லோர் என்றும் வல்லோர் என்றும் சிறந்த மனிதர்கள் என்றும் கொண்டாடப்படுபவர்கள் இத்தகைய பண்புகளை உடைய மனிதர்கள் தான்.

மனிதர்களை எப்போதுமே மற்றவர்கள் மத்தியில் தனிப்படுத்தி காட்டவும் சிறப்பித்துப் பேசவும் உதவும் பண்புகள் இந்த நேர் நிலைப் பண்புகளே. இவ்வாறு எல்லாம் மேலே குறிப்பிட்ட எதிர் மறைப்பண்புகள் கொண்டோராக விளங்குபவர்கள் தமக்குத் தாமே தீங்கு இழைத்துக் கொள்ளுகின்ற பயனற்ற பேர்வழிகளாகவே வாழ்வதைக் காணலாம். நமது பொதுவாழ்வு அரங்கில் மற்றவர்களால் கொண்டாடப்படும் மனிதர்கள் பயன் தரத்தக்க நேர்நிலைப் பண்புகளையே மிகுதியும் கொண்டிருப்பர்.

அத்தகைய பண்புகள் கொண்ட மனிதர்கள் தான் சமூகத்தில் சேவைகள் உதவிகள் போன்றவற்றை மனதாரச் செய்கின்ற பயன்மிகு மானிடராக வாழ்பவர்கள். அவ்விதமாக அன்றி எதிர்மறைக் குணங்கள் பழக்கவழக்கங்களை உடையவர்கள் சுயநலம்மிக்கத் தமது தனித்த நலனுக்காகவே பாடுபாடுகின்ற சின்ன மனிதர்களாகவே திகழ முடியும்.

காலங் காலமாய் நாம் அறிந்து வருகின்ற அறநூல்கள், வழிகாட்டும் நல்லறிஞர் சிந்தனைகள் போன்றவற்றைப் பின்பற்றுவோரே அடையாளப்படுத்தத்தக்க தனித்துவங்களோடு என்றும் மிளிர வல்லோராக விளங்கக் காணுகிறோம். பொதுவாகவே எமது சமூகத்தில் பெற்றோர்கள் தமது பிள்ளைகள் திறமைமிக்கோராகவும் புகழ் மிகுந்தோராகவும் திகழ வேண்டும் என்று விரும்புவதனைக் காணுகிறோம். அவ்வாறு விரும்பும் பெற்றோரும் பெரியோரும் மனிதனை மேன்மைபடுத்தத்தக்க நல்ல நேர்மறைக் குணங்களையும் இயல்புகளையும் பிள்ளைகளுக்கு ஊட்டி வளர்ப்பது அவசியம்.

தன்னிடத்தில் யாசகம் கேட்டு வரும் ஒரு ஏழையை இரக்கமற்று விரட்டுகின்ற பெற்றோரது பிள்ளைகள் தாமும் அவ்வாறே உருவாவார்கள். சிறுவயதிலே அடுத்தவர்க்கு நாம் உதவுவதையும் இல்லாதோர்க்குத் தர்மம் செய்வதையும் பார்த்து வளரும் பிள்ளைகள் தான் பிற்காலத்தில் சமூகத்திற்குப் பயன்படத்தக்க மனிதர்களாக உயர்ந்து வர முடியும்.

எனவே நமது பிள்ளைகளிடத்தில் நல்ல பண்புகளாகிய நேர்நிலை இயல்புகளை ஊக்குவித்து வளர்த்தெடுக்கும் பெற்றோரது பிள்ளைகளே தமது அடையாளங்களையும் பொறித்துக் கொள்ளும் விதமான நல்லோராய் தலையெடுக்க முடியும்.

■

# எழுத்தின் இயங்கியல்

ந.மயூரரூபன்

ஏற்கனவே எம்மிடம் இருந்த இலக்கிய விமர்சனம் என்பது ஒரு வகை தெரிந்தெடுக்கின்ற வகைமை சார்ந்தது. அதாவது ஒரு தனிமனிதன் அல்லது ஒரு சிந்தனைக் குழுமம் சார்ந்தவர்கள் இந்த இலக்கியம்தான் எமக்கு பொருத்தமானது, இதுதான் தேவையானது என அவற்றை வெளிச்சப்படுத்தி இலக்கியம் இதுதான் என பொதுவெளிக்குள் தள்ளுவது. வாசிப்பவர்கள் இந்த எழுத்தை இந்தப் பிரதியைக் கவனியுங்கள் இதுதான் உங்களுக்கான இலக்கியம் எனச் சொல்வது ஒரு வகையில் இலக்கியத்தை நுகர்வுப் பண்டமாக்கும் மனோபாவ எண்ணங்களால் ஆனது. முதலிலேயே குறிப்பிட்டது போல இவ்வகை விமர்சனங்கள் குறித்த வகை இலக்கிய உற்பத்தியை தூண்டுவதாகவே அமையும். இவ்வாறான இலக்கிய அந்தஸ்து வழங்குகின்ற செயற்பாடானது எழுத்தாளர்களிடம் பின்வரும் விடயங்களை நிர்பந்தித்தன.

-இதை எழுது
-இதை எழுதக் கூடாது
-இதைப் போல் எழுது

இவ்வாறான இலக்கியத்துக்கான இலக்கண உருவாக்கம் என்பது எழுத்தின் இயங்கியலைத் தடம் மாற்றுவதற்கான முயற்சியையே செய்தது. ஏனெனில் ஒரு அங்கீகாரம் என்கிற முறையில் விமர்சனம் அமைந்தமை பிரதியின் உருவாக்கத்தைத் தீர்மானிப்பதாகவே அமைந்தது.

ஆரம்ப நிலையில் நாம் எழுத்து, சொல், பொருள், யாப்பு, அணி, இலக்கணம் என்பவற்றுடன் மரபுக்கு ஒத்துப்போதல் என்பதை வாய்ப்புப் பார்க்கக் கூடிய இலக்கிய வகைகளை முன்மொழிகின்ற விமர்சனப் பண்புகளை கொண்டிருந்தோம், இப்போதும் அதன் உடை மாற்றப்பட்ட உருவத்தை இங்கு காணக் கூடியதாகவும் உள்ளது.

“இறுதியாக ஒன்று கூற வேண்டும். 1956 இற்குப் பின் இலங்கையில் உருவாகிய தேசிய - ஜனநாயக - முற்போக்கு இலக்கிய இயக்கச் சூழலில் வாழ்ந்து எழுதத் தொடங்கிய மு. தளையசிங்கம், அக்காலகட்டத்தின் விளை பொருளாகவே அமைந்தார். ஆனால், சரித்திர பூர்வமாக அமைந்த தனது சூழலைச் சரியாக விளங்கிக் கொள்ளாமல் முற்றிலும் அகநிலைப்பட்ட கற்பனைகளுக்குப் பலியாகினார் (கலையம்சமும் கருத்தாழமும் போதியளவு வாய்க்கப் பெறாத தனது இலக்கிய ஆக்கங்களுக்கு முற்போக்கு விமர்சகர்களின் அங்கீகாரம் கிடைக்காமையும், கண்மூடித்தனமான எதிர்ப்புணர்ச்சியை அவரிடத்துத் தோற்றுவித்திருக்கலாம் எனக் கருதவும் இடமுண்டு) எவ்வாறாயினும் அவர் முற்போக்கு இலக்கிய அணியிலிருந்து விலகிச் சென்றது வருந்தத்தக்கதே. ஏனெனில், துவக்க நிலையில் ஏற்படக் கூடிய துச்சாதன தீவிரம் தணிந்த பின் அறிவாற்றல் நிரம்பிய ஆக்க இலக்கிய கர்த்தாவாகப் பரிணமித்திருக்ககூடிய உள்ளார்ந்த சிறப்பியல்புகள் சில அவரிடத்தே காணப்பட்டன. அவை தக்கபடி வெளிப்பட்டு நிறைவடையாமற் போனமை பொதுவாக நவீன தமிழிலக்கியத்திற்கும் சிறப்பாக இலங்கை தமிழ் இலக்கியத்திற்கும் பேரிழப்பேயாகும். அந்த வகையில் தளையசிங்கத்தின் இலக்கிய வாழ்க்கை பலருக்கு எச்சரிக்கையாக அமையும் எனக் கூறலாம்.

(க. கைலாசபதி, நவீன இலக்கியத்தின் அடிப்படைகள் / 101)

கைலாசபதியின் கூற்றிலிருந்து மூன்று விடயங்கள் இங்கு உற்று நோக்கத்தக்கவை.

*01.* இலங்கைத் தமிழ் இலக்கியச் சூழலில் இலக்கிய அணிகளும், அவற்றினூடான விமர்சகர்களின் அங்கீகாரங்களும் இருந்து வந்திருக்கின்றன.

*02.* இந்த நூலின் இலக்கியத்தில் மார்க்சிய எதிர்ப்பு; ஒரு புத்திசீவியில் இரண்டக நிலை என்கிற கட்டுரையிலே மு.தளையசிங்கம் மார்க்சிய எதிர்ப்பு நிலையில் எழுதியவர் எனவும், ஆயினும் அவரது எழுத்துகளில் மார்க்சியக் கருத்துகள் அவரறியாமலேயே இருந்திருக்கின்றன என்றும் கூறுகிறார்.

*03.* அவ்வாறான உள்ளார்ந்த சிறப்பியல்புகள் தக்கபடி வெளிப்படாதமை இலங்கைத் தமிழ் இலக்கியத்திற்கு பேரிழப்பு. அதே நேரத்தில் மு.த.வின் வாழ்க்கை தொடர்ந்து உருவாகும் பலருக்கு எச்சரிக்கை.



“

**எப்படி வாசிக்கிறோம்? எதற்காக வாசிக்கிறோம்? என்கிற கேள்விகள் கொண்டிருக்கக் கூடிய பதில் முக்கியமானது. நாம் தேர்ந்தெடுத்து ஒரு பிரதியை வாசிக்கிறோம். அல்லது தேர்ந்தெடுக்கத் தூண்டப்படுகிறோம். இந்தத் தேர்ந்தெடுப்பின் அரசியலே விமர்சனத்தின் ஆரம்ப எழுத்தாய் அமைந்துவிடுகிறது. அந்த வகையில் எமது தேர்ந்தெடுத்தலின் தன்மையில் கைகொண்டுள்ள கருத்தியல் இடம், நாம் செய்யக் கூடிய விமர்சனத்தின் பாதையை விமர்சனத்திற்கு முன்பாகவே அது துலக்கமற்று வரைந்து விடுகிறது.**

”

## விமர்சன இயக்கம்

இங்கு நாம், விமர்சனம் எதைக் கோருகிறது என்பதையும் எழுத்தாளர்களை எதை நோக்கி நகர்த்த விளைகிறது என்பதையும் புரிந்து கொள்வதற்கான ஒரு எடுத்துக் காட்டாய் உணர்ந்து கொள்கிறோம்.

விளிம்பு நிலை எழுத்துகள் அல்லது சிற்றிலக்கியங்கள் என அறியப்படுபவை ஏன் வெளிச்சத்துக்கு வரவில்லை என்பதற்கான காரணங்களை நாம் இதன்படியாகப் புரிந்து கொள்ள முடியும்.

உண்மையில் இது மரபார்ந்த முறையில் ஒரு தனிமனிதன் தனக்கான கருத்துநிலையை, புரிதலை, சிந்தனையை எவ்வாறு உருவாக்கிக் கொள்கிறான், அதனை எப்படி மற்றவர்க்குள்ளும் கொண்டு வருகிறான் என்பதில் தங்கியுள்ளது. ஒருவகையில் இதுவும் ஒரு சமூகமயமாக்கம்தான். தனது சிந்தனையில் படிந்து சமூக அடுக்கமைவு (Social Stratificating) சார் படிவுகளையே அனைத்துத் தளங்களிலும் பொருத்திப் பார்க்கிறான்.

நாம் எமது சமூக வாழ்க்கையில்
ஆன்மீகத்தில்
இலக்கியத்தில்
என அனைத்திலும் இதையே கைக் கொள்கிறோம்.

என்பவற்றிலும் மையமொன்றையும் விளிம்பு நிலைகளையும் உருவாக்கிக் கொள்கிறோம். மையம் நோக்கிய, ஒளித் திரட்சியை உற்சாகப்படுத்துகிறோம்.

வாசிப்புக்கும் விமர்சனத்திற்கும் மிக நெருங்கிய ஊடாட்டம் ஒன்று உண்டு. அது எவ்வாறான ஊடாட்டம் என விளங்கிக் கொள்ள வேண்டும். விமர்சனத்தின் கருத்துநிலையை அல்லது விமர்சன உருவாக்கத்தை வாசிப்புத் தீர்மானிக்கிறது என்பது அடிப்படையான உண்மை. இங்கு எதை வாசிக்கிறோம்.?

எப்படி வாசிக்கிறோம்? எதற்காக வாசிக்கிறோம்? என்கிற கேள்விகள் கொண்டிருக்கக் கூடிய பதில் முக்கியமானது. நாம் தேர்ந்தெடுத்து ஒரு பிரதியை வாசிக்கிறோம். அல்லது தேர்ந்தெடுக்கத் தூண்டப்படுகிறோம். இந்தத் தேர்ந்தெடுப்பின் அரசியலே விமர்சனத்தின் ஆரம்ப எழுத்தாய் அமைந்துவிடுகிறது. அந்த வகையில் எமது தேர்ந்தெடுத்தலின் தன்மையில் கைகொண்டுள்ள கருத்தியல் இடம், நாம் செய்யக் கூடிய விமர்சனத்தின் பாதையை விமர்சனத்திற்கு முன்பாகவே அது துலக்கமற்று வரைந்து விடுகிறது.

ஒரு எழுத்து எப்போது இலக்கியமாகிறது என்கிற கேள்வி இன்னொரு தளத்தில் அணுகப்படவேண்டியது. வெறுமனே அந்த எழுத்து கொண்டிருக்கக் கூடிய இலக்கியக் கூறுகளால் மட்டும் இலக்கியமாகிவிடுமா? என்றால் ஆம் என்று சொல்வதில் சற்று தயக்கம் ஏற்படுகிறது. ஏனெனில் எழுத்தின் இயங்கியலின் வாசிப்பும் விமர்சனமும் கொண்டிருக்கக் கூடிய பிரதான பாத்திரங்களே அதற்குக் காரணமாகும்.

ஒரு விமர்சனம் பின்வரும் விடயங்களை கண்டடைந்து வெளிப்படுத்த வேண்டிய தேவை முன்னிற்கிறது.

*01.* குறித்த பிரதியின் மைய நோக்கும் சமூக பெறுமதியும்

ஒட்டுமொத்தமாக ஒரு பிரதி ; அது நாவல், சிறுகதை அல்லது கவிதை என அமைந்தாலும் அது இயங்கக்கூடிய மைய நகர்ச்சி மிக முக்கியமானது (இங்கு மையம், விளிப்பு என்கிற கருத்துருவ வடிவத்தில் கூறப்படவில்லை; அந்த மையம் பெருங்கதையாடல் பண்பு சார்ந்தது). அதே நேரத்தில் சமகாலத்தில் அது கொண்டிருக்கக் கூடிய சமூகப் பெறுமதியும் கவனத்திற் கொள்ளப்பட வேண்டியதாக அமையும். குறிப்பாக தப்பித்தல் வகையான பிரதிகளை அடையாளங்காண வேண்டிய தேவையுண்டு.

“ ஆயிரக்கணக்கில் யூதர்கள் ஆஷ்விட்சில்-ஜேர்மனியில்-கொலை செய்யப்பட்டுக் கொண்டிருந்த நேரத்தில் அந்த நாட்டின் நல்ல எழுத்தாளன் ஒருவன் காமக்களியாட்டக் கதையையோ, தான் மட்டும் யோகப் பயிற்சி செய்து வெற்றி பெறும் சுயமுன்னேற்றக் கதையையோ எழுதிக்கொண்டிருப்பானா? அப்படி எழுதினால் அதைநாம் நல்ல இலக்கியம் என மதிப்போமா”

(க.பூரணச்சந்திரன், கதையியல் / 139)

இது எமது சூழலுக்கும் பொருந்தக் கூடியது. எனினும் இதுவும் ஒருவகை நிர்ப்பந்தித்தல் வகைக்குள் வருமானால் அபாயமானதுதான். அவ்வாறான சமூக இயல்பு கடந்த ஒரு எழுத்தாளனோ அல்லது விமர்சகனோ இருக்கமாட்டான்.

*02.* அந்தப் பிரதியின் கருத்துருவத்தின் இடத்தினை தீர்மானித்தல்.

*03.* மேற்சொன்ன வகைமைக்குள் வைத்தும் நோக்கத்தக்கது. மிக முக்கியமாக அது உருவாக்குகின்ற சமூக விவாதம் அல்லது சிந்தனைக் கிளர்ச்சி மிக முக்கியமானது.

மேற்குறித்த இரண்டிலும்
செய்யக்கூடியது எது
செய்யக்கூடாதது எது என்கிற புரிதலையும் இயக்கத்தையும் அந்தப் பிரதி கொண்டிருத்தல்.

இது விமர்சகனின் கருத்துருவ அடிப்படைகளில் சார்புநிலை அரசியலைப் பெற வாய்ப்புக்கள் நிறைய உண்டு. எனினும் சமூக, பொருளாதார, பண்பாடு, அரசியல் தளங்களில் அவற்றின் இயக்கத்தையும், கோட்பாட்டுப் பயிற்சியின் விளைவையும் கண்டடைவதாக அமைதல்.

*04.* மைய விவாதத்தை நோக்கிய கூறுகளின் இயக்கம்

முன்னர் கூறப்பட்டதற்கு மேலதிகமாக, ஒரு எழுத்தின் கூறுகள் அனைத்தும்; நாவலெனின் அதன் பாத்திரங்கள், சூழமைவுகள், சிக்கல்கள், அரசியல், உறவு, பகை, எழுத்து, அழகியல் என அனைத்தும் அகமன இயக்கத்திற்கேற்ற வகையில் புறக் கூறுகளை ஒருங்கிணைத்து அந்த மைய விவாதத்தைச் செய்தல்.

இங்கு அந்த ஒரு கூறு தனித்து அந்தப் பிரதியின் இயக்கமாக அமையமுடியாது, அமையக் கூடாது என்பது கவனத்திற்குரியது. ஆயினும் எமது கூறாக்கப்பட்ட மனம்; பிரதியின் தனித்துக் கூறுகளின் தனி இயக்கத்தை அனுமதித்துக் கொள்கிறது. அது ஒரு பலவீனமாக அமைந்து விடக்கூடியது. திரைப்படத்தில்; பாடல்கள், சண்டைக் காட்சிகள், நகைச்சுவைக் காட்சிகள் என்பவற்றால் குறித்த திரைப்படம் அறியப்படுவது இதற்கு எடுத்துக்காட்டு.

*05.* ஒரு பிரதியின் “கதைத் திட்டம்” மிக முக்கியமானது. கதைத் திட்டத்தை அந்த எழுத்து வெளிப்படுத்த வேண்டும். வெற்றுக்கூடாக அமையக்கூடாது.

இவ்வாறு பட்டியல்படுத்துவதற்கு விமர்சகனுக்கு நிறையக் காரணங்கள் உண்டு. ஆயினும் விமர்சகனின் உள்ளிருந்து இயக்கும் உளவியலின் இயல்பே எல்லாவற்றிற்கும் அடிப்படையானது. ஒரு விமர்சகனின் உளவியல் உருவாக்கம் தான் அவனின் தெரிவையும் விமர்சனத்தையும் தீர்மானிப்பதாக அமையும். இங்கு ஒரு பிரதி தனக்கான உளவியலைக் கண்டடைகிற போது விமர்சகன் அதற்கான உளவியலை தன்னியக்கத்தால் மறுவுருக்கம் செய்கிறான். இந்தப் புரிதலே எழுத்தின் இயக்கியலைத் தொடச் செய்வதாய் அமைகிறது.

■



சி.அ.யோதிலிங்கம்

# புலம்பெயர் மக்கள் தவிர்க்க முடியாத சக்திகள்

நல்லிணக்கச் செயற்பாடுகளை உள்ளகப் பொறிமுறையின் அடிப்படையில் செயற்படுத்துவதற்கு வருமாறு ஜனாதிபதி கோத்தபாய புலம்பெயர் மக்களுக்கு அழைப்பு விடுத்திருக்கின்றார். இது தாயக மக்கள் மத்தியிலும், புலம்பெயர் மக்கள் மத்தியிலும் பலத்த வாதப் பிரதிவாதங்களை உருவாக்கியுள்ளது. இந்த அழைப்புத் தொடர்பாக, நாடு கடந்த தழிழீழ அரசாங்கம் ஒரு அறிக்கையை வெளியிட்டுள்ளது. இதை விட எட்டு புலம்பெயர் அமைப்புக்கள் இணைந்தும் கூட்டாக ஒரு அறிக்கையை வெளியிட்டுள்ளன.

நாடு கடந்த தமிழீழ அரசாங்கத்தின் அறிக்கையில் ஜனாதிபதி கோத்தபாயவிற்கு இலங்கைத்தீவில் அமைதியைக் கொண்டு வருவதில் உண்மையான அக்கறை இருந்தால் ஐ.நா.மனித உரிமைகள் பேரவையின் முன்னாள் ஆணையாளர் ஹுசைன் 2015 இல் பரிந்துரைத்தபடி ரோம் உடன்படிக்கையில் கைச்சாத்திட வேண்டும், அரசியல் கைதிகளை எவ்வித நிபந்தனையில்லாமல் விடுதலை செய்ய வேண்டும், அரசியல் தீர்வு தொடர்பாகத் தமிழ் மக்கள் மத்தியில் பொது வாக்கெடுப்பை ஏற்றுக் கொள்ள வேண்டும் அதன் பின்னர் பேச்சுவார்த்தைக்கு வரத் தாயர் எனக் கூறியிருக்கிறது.

எட்டு புலம்பெயர் அமைப்புக்கள் இணைந்து வெளியிட்ட கூட்டறிக்கையில் கனடியத் தமிழ்த் தேசியப் பேரவை, பிரிட்டன் தமிழர் பேரவை, அவுஸ்ரேலிய தமிழ்க் காங்கிரஸ், நோர்வே ஈழத் தமிழர் அவை, அயர்லாந்து தமிழர் பேரவை, தென்னாபிரிக்க அமைதி மற்றும் நீதிக்கான ஒற்றுமைக்குழு, பிரான்ஸ் தமிழீழ மக்கள் பேரவை, அமெரிக்க தமிழர் செயற்பாட்டுக்குழு என்பன கைச்சாத்திட்டுள்ளன.

சர்வதேச மத்தியஸ்தத்துடன் பேசத் தயார் என்றும் இம் மத்தியஸ்தத்தை அமெரிக்கா, பிரிட்டன், இந்தியா ஆகிய நாடுகளில் ஏதாவது ஒன்று வழங்கலாம் அல்லது மூன்றும் கூட்டாக வழங்கலாம் என்றும் அவ் அறிக்கை கூறியிருக்கிறது. பேச்சுவார்த்தை, தொடங்குவதற்கு முன்னர் அரசியல் கைதிகள் நிபந்தனை இன்றி விடுதலை செய்யப்படல் வேண்டும் என்றும், ஆக்கிரமிக்கப்பட்ட நிலங்கள் விடுவிக்கப்பட வேண்டும் என்றும், பயங்கரவாதத் தடைச் சட்டத்தை நீக்குதல் வேண்டும் என்றும் கூறியிருக்கின்றது. இவற்றினூடாக அரசாங்கம் நல்லெண்ணத்தைக் காட்ட வேண்டும் என்றும் கூறியிருக்கின்றது. இங்கு புலம்பெயர் தமிழ் மக்களின் அமைப்புக்களையும், அங்குள்ள செயற்பாட்டு முக்கியஸ்தர்களையும் தடை செய்து விட்டுத்தான் ஜனாதிபதி அழைப்பு விடுத்திருக்கிறார் என்பது கவனிக்கத்தக்கது இதன் மூலம் புலம்பெயர் மக்கள் தவிர்க்க முடியாத சக்திகள் என்பதை அவர் மறை முகமாக ஏற்றுக் கொண்டிருக்கிறார்

புலம்பெயர் மக்கள் தமிழ்த் தேசிய அரசியலைப் பொறுத்தவரை பல வழிகளிலும் முக்கியத்துவம் வாய்ந்தவர்களாவர். யூதப் புலம்பெயர் சமூகத்தின் முக்கியத்துவம் போல் இல்லாவிடினும் அதனை நோக்கி வளர்ந்து கொண்டிருக்கின்றனர் எனக் கூறக் கூடிய நிலையில் உள்ளனர். இம் முக்கியத்துவங்களுள் முதலாவது 2009 க்குப் பின்னர் அதாவது ஆயுதப் போராட்டம் மௌனிக்கப்பட்டதற்குப் பின்னர் தமிழ்த் தேசிய அரசியலை தக்கவைத்ததிலும் பாதுகாத்ததிலும் புலம் பெயர் மக்களுக்குரிய பங்காகும். அதுவும் நல்லாட்சி எனக் கூறப்படுகின்ற ரணில்-மைத்திரி ஆட்சிக் காலத்தில்



> **“தமிழ்த்தேசிய அரசியலில் தவிர்க்க முடியாத வலுவான சக்திகள் புலம்பெயர் மக்கள். இந்த முக்கியத்துவத்தைப் புலம்பெயர் மக்கள் தெளிவாகப் புரிந்து கொள்ள வேண்டும். இதற்கு ஏற்ற வகையில் மூலோபாயங்களையும் தந்திரோபாயங்களையும் வகுத்துக் கொண்டு செயற்படுவதற்கு அவர்கள் தயாராக வேண்டும். ஒருங்கிணைந்த அரசியல் என்பது இதில் மிகவும் முக்கியமானது.”**

இவர்களது பங்கு அளப்பரியதாக இருந்தது. இக் காலத்தில் தமிழ்த் தலைமைகளை தமது பொக்கற்றுக்குள் வைத்துக் கொண்டு தமிழ்த் தேசிய அரசியலை நீர்த்துப்போகச் செய்வதற்கான நிகழ்ச்சி நிரலை சர்வதேச சக்திகள் என அழைக்கப்படுகின்ற அமெரிக்க-மேற்குலக இந்தியக் கூட்டு நகர்த்தியிருந்தது. அந்த நிகழ்ச்சி நிரலை பலவீனப்படுத்தி தமிழ்த்தேசிய அரசியலின் இருப்பை பாதுகாத்ததில் புலம்பெயர் மக்களுக்கு அளப்பரிய பங்கு உண்டு.



தாயகத்தில் அதனைப் பாதுகாக்கும் செயற்பாட்டை ஆரம்பத்தில் முன்னெடுத்தவர்கள் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியினர் தான். பல்வேறு அச்சுறுத்தல்களுக்கு மத்தியில் அதற்கான கோட்பாட்டுத் தளத்தையும், செயற்பாட்டுத் தளத்தையும் கஜேந்திரகுமார் உருவாக்கியிருந்தார். இதன் தொடர்ச்சியாக இதனை மக்கள் மயப்படுத்தும் பணியை தமிழ் மக்கள் பேரவை மேற்கொண்டது. நீதியரசர் விக்கினேஸ்வரனின் பங்களிப்பு இதில் வலுவானதாக இருந்தது. தாயகத்தில் செயற்பட்ட இச் சக்திகளுக்கும் புலம்பெயர் சக்திகளுக்கும் இடையேயான கூட்டுத்தான் இதனைப் பாதுகாத்தலில் முக்கிய பங்கு வகித்தது எனலாம். இச் சக்திகளின் வலுவான கூட்டுச் செயற்பாடுதான் கடந்த தேர்தலில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தனித்த ஓட்டத்தையும் பலவீனப்படுத்தியிருந்தது. கூட்டமைப்பின் மொத்த வியாபாரத்தையும் தடுத்திருந்தது.

இரண்டாவது முக்கியத்துவம் தமிழ் மக்களது உலகளாவிய அரசியல் போராட்டமாகும். யாழ் பல்கலைக் கழகத்தில் முள்ளிவாய்க்கால் நினைவுத் தூபி தகர்க்கப்பட்டமைக்கான போராட்டம் பொத்துவில் முதல் பொலிகண்டிவரையிலான போராட்டம் என்பன வளர்ச்சியடைந்தமைக்குப் புலம்பெயர் மக்களே பாரிய பங்களிப்பினை வழங்கியிருந்தனர். இன்று கோத்தபாய அரசாங்கம் மிகவும் அச்சப்படுகின்ற விடயம் இந்த உலகளாவிய அரசியல் போராட்டம் தான். மூன்றாவது முக்கியத்துவம் இன அழிப்புக்கு சர்வதேச நீதிகோரும் செயற்பாட்டில் புலம்பெயர் மக்களின் பங்களிப்பாகும். இந்த விவகாரத்தில் தாயக மக்களின் பங்களிப்பு பெரிதாக இருந்தது எனக் கூறிவிட முடியாது. அதில் அதிகம் பங்களிப்பை மேற்கொண்டவர்கள் புலம்பெயர் மக்களே. ஜெனிவாவில் அவர்களுடைய பங்களிப்பு அளப்பரியதாக இருந்தது. சர்வதேச வல்லுனர்களைக் கொண்டு பிரட்மன் விசாரணையை நடத்தியதிலும் இவர்கள் முன்னிலை வகித்தனர்.

நான்காவது முக்கியத்துவம் புலம்பெயர் நாடுகளில் ஒரு அரசியல் சமூகமாக புலம்பெயர் மக்கள் மாறி வருவதாகும். யூத சமூகம் போல இல்லாவிடினும் தாம் வாழும் நாடுகளின் ஆட்சி அதிகாரக் கட்டமைப்பில் கணிசமான செல்வாக்கினை இவர்கள் செலுத்துகின்றனர். கனடாவில் இது அதிகமாக உள்ளது எனலாம். புலம்பெயர் நாடுகளிலேயே அதிகளவு புலம்பெயர் தமிழர்கள் வாழ்வது கனடாவில்தான். அங்கு தமிழ் அரசியல் பிரதிநிதித்துவம் என்பது நிரந்தரமாகி விட்டது. மத்திய பாராளுமன்றத்திற்கு ஹரி ஆனந்தசங்கரி மூன்றாவது தடவையாகவும் தெரிவு செய்யப்பட்டிருக்கின்றார். ஒன்ராரியோ மாகாண பாராளுமன்றத்தில் லோகன் கணபதியும், விஜய் தணிகாசலமும் உறுப்பினர்களாக உள்ளனர். இந்தமாதம் இடம் பெற்ற பாராளுமன்றத் தேர்தலில் மேலும் இரு தமிழர்கள் இரண்டாம் நிலைக்கு வந்துள்ளனர். இங்கு ஒரு கட்சியில் மட்டுமல்ல பிரதான கட்சிகள் அனைத்திலும் தமிழர்கள் செல்வாக்குச் செலுத்தும் நிலை காணப்படுகின்றது. ஹரி ஆனந்தசங்கரி லிபரல் கட்சி சார்பில் தெரிவுசெய்யப்பட்டிருந்தார். லோகன் கணபதியும், விஜய் தணிகாசலமும் கன்சர்வேடிவ் கட்சியின் சார்பில் தெரிவுசெய்யப்பட்டிருந்தனர்.

கனடாவுக்கு வெளியே நோர்வேயில் கம்ஷாயினி குணரட்னம் பாராளுமன்ற உறுப்பினராகத் தெரிவு செய்யப்பட்டிருக்கின்றார். பல இனங்கள் செறிந்து வாழும் தொகுதியில் இருந்து அனைத்து இன மக்களின் ஆதரவுடன் அவர் தெரிவுசெய்யப்பட்டுள்ளார் என கூறப்படுகின்றது. தமிழ்த்தேசிய சக்திகளுக்கு இவர் தொடர்பாகப் பல விமர்சனங்கள் இருந்தாலும் இலங்கைத் தமிழ் மக்களைப் பொறுத்தவரை இவரது வெற்றி மகிழ்ச்சியளிக்கக் கூடியதே.

பிரித்தானியாவிலும் தமிழ் மக்கள் வலிமையான நிலையான நிலையில் உள்ளனர் எனக் கூறலாம். அங்குள்ள பிரதான கட்சிகளான தொழிற்கட்சியிலும், கன்சர்வேடிவ் கட்சியிலும் தமிழ் மக்களுக்குச் செல்வாக்கு உண்டு. பல தொகுதிகளில் அங்கு வெற்றி தோல்வியைத் தீர்மானிப்பவர்களாக தமிழ் மக்களே உள்ளனர். இவை புலம்பெயர் தமிழ் மக்களுக்கு வெளியேயான அந்நாட்டின் அரசியல் செயற்பாட்டில் புலம்பெயர் தமிழ் மக்கள் வளர்ச்சியடைந்து வருகின்றனர் என்பதையே காட்டுகின்றது.

ஐந்தாவது முக்கியத்துவம், புலம்பெயர் மக்கள் தாயக மக்களுக்கும் உலகத் தமிழர்களுக்குமிடையே ஒரு இணைப்புப் பாலமாக இருக்கின்றமையாகும். இந் தியா, மலேசியா, தென்னாபிரிக்கா, சிங்கப்பூர், மொறீசியஸ் போன்ற நாடுகளில் வாழும் தமிழக வம்சாவழித் தமிழர்களுக்கும் புலம்பெயர் தமிழர்களுக்குமிடையே நெருக்கமான தொடர்பு உண்டு. தஞ்சாவூரில் முள்ளிவாய்க்கால் முற்றம் கட்டப்பட்டமைக்கும் மொறீசியஸ்சில் முள்ளிவாய்க்கால் நினைவுத் தூபி கட்டப்பட்டமைக்கும் புலம்பெயர் மக்களே காரணமாவார். இந்தியாவில் தமிழ் நாட்டிற்கு வெளியே பல்வேறு மாநிலங்களில் வாழும் தமிழ் மக்களுடனும் நெருக்கமான தொடர்பு புலம்பெயர் மக்களுக்கு உண்டு.

ஆறாவது முக்கியத்துவம் புலம்பெயர் மக்களின் பொருளாதார வலிமையாகும். இலங்கை அரசாங்கத்தின் வருடாந்த வரவு செலவுத்திட்ட நிதியை விடப் புலம்பெயர் மக்களின் நிதிப்பலம் உயர்வானது. போர்க் காலத்தில் தமிழ் மக்களை பட்டினியிலிருந்து பாதுகாத்தது புலம்பெயர் மக்களின் உதவிகள்தான். தற்போதும் கூட போரினால் பாதிக்கப்பட்டவர்களின் நலன்களைப் பாதுகாப்பதில் அவர்களின் பங்களிப்பு உன்னதமாக உள்ளது. பலர் சிறந்த தொழிலதிபர்களாகவும் சிறந்த வர்த்தகர்களாகவும் உள்ளனர். வர்த்தகத்தில் சிறப்புப் தேர்ச்சியினைக்கூட பெற்றிருக்கின்றனர் எனக்கூறலாம். கனடா ஸ்காபுறோவில் உள்ள சிறந்த தமிழ் சாப்பாட்டுக் கடைகள் போல கொழும்பிலும் யாழ்ப்பாணத்திலும் கூடக் கிடையாது.

புலம்பெயர் மக்களின் இந்த முக்கியத்துவங்கள்தான் இலங்கை அரசாங்கத்தைப் பொறுத்தவரை அவர்களைத் தவிர்க்க முடியாத சக்தி ஆக்கியிருக்கின்றது. 2009 க்குப் பின்னர் 11 வருட கால அனுபவத்தில் இலங்கை அரசாங்கம் இதனை நன்றாகவே புரிந்து கொண்டிருக்கின்றது. யானையின் காதுக்குள் சென்றிருக்கும் எறும்புக் கூட்டங்கள் போல வலிமையான குடைச்சல்களை இலங்கை அரசாங்கத்திற்கு அவர்கள் கொடுக்கத் தொடங்கியிருக்கின்றனர். முள்ளிவாய்க்காலுடன் அனைத்தும் முடிந்து விட்டது என நினைத்துக்கொண்டிருந்த ஆட்சியாளர்களுக்குப் போர்க்காலத்தை விட கடினமான நிலை உருவாகி வருகிறது என்ற கலக்கம் உருவாகியுள்ளமைக்கும் இவர்களின் முக்கியத்துவம்தான் காரணம்.

தமிழ்த்தேசிய அரசியலில் தவிர்க்க முடியாத வலுவான சக்திகள் புலம்பெயர் மக்கள். இந்த முக்கியத்துவத்தைப் புலம்பெயர் மக்கள் தெளிவாகப் புரிந்து கொள்ள வேண்டும். இதற்கு ஏற்ற வகையில் மூலோபாயங்களையும் தந்திரோபாயங்களையும் வகுத்துக் கொண்டு செயற்படுவதற்கு அவர்கள் தயாராக வேண்டும்.
ஒருங்கிணைந்த அரசியல் என்பது இதில் மிகவும் முக்கியமானது. புலம்பெயர் அமைப்புக்கள் தமக்குள் என்னதான் முரண்பாடுகளைக் கொண்டிருந்தாலும் அந்த முரண்பாடுகளுக்குள் பொதுப்புள்ளியைக் கண்டு பிடித்து அதனைப்பலப்படுத்தி ஒருங்கிணைந்த அரசியலைச் செய்ய முன்வர வேண்டும். இந்த ஒருங்கிணைவு அரசியல், தாயகத்தில் செயற்படும் அரசியல் சக்திகளுக்கும் ஒரு முன்மாதிரியாக இருக்கும்.

புலம்பெயர் மக்கள் தமிழ்த்தேசிய அரசியலுக்குக் கிடைத்த மிகப்பெரும் பொக்கிஷம் ஆகும். இதனைப் பேணிப்பாதுகாப்பது தமிழ்த்தேசிய அரசியலில் அக்கறை கொண்ட அனைவரினதும் மிகப்பெரும் கடமையாகும். ■

கருணாகரன்

இனவன்முறையினால் வடக்கு நோக்கி வந்த மலையக மக்களுக்கான நீதி இன்னும் கிடைக்கவில்லை. அவர்கள் நம்பி வந்த தமிழ்ப் பிரதேசங்களிலேயே (வடக்கிலேயே) புறக்கணிக்கப்படுகிறார்கள். பல வழிகளிலும் ஒடுக்கப்படுகிறார்கள். அரச நிர்வாகம் தொடக்கம் வளப்பகிர்வு, சமூக நிலை எனப் பல வகையிலும் இந்த அநீதி தொடர்கிறது. இந்த மக்களுடைய பிரச்சினைகளைக் குறித்து இதுவரையிலும் கவனத்திற்குரிய மைய உரையாடல்களோ ஆய்வுகளோ நடக்கவில்லை. இந்தக் கட்டுரைத் தொடர் அதனைப் பொதுவெளியில் திறக்க முற்படுகிறது.

- ஆசிரியர்



# தொடரும் அநீதி

# நீதி மறுப்பும் கோரலும்

யாருக்கும் பகிரத் தயாரில்லாத நீதி குப்பையில் வீசப்பட்டுள்ளது.

13

ஒரு சமூகமாகத் திரள்வதற்கான பிரக்ஞை உருவாகுவதற்கு அடிப்படையானது நிரந்தரத் தன்மையும் பொருளாதார நிலையுமாகும். அது இல்லையென்றால் அந்தப் பிரக்ஞை எழாது. எழுந்தாலும் அது சமூகப் பிரக்ஞையாக உருவாகாது. வடக்கு நோக்கி வந்த மலையக மக்களிடத்திலும் இந்தியாவிலிருந்து வெவ்வேறு நிலைகளில் வந்து வன்னியிலிருந்தோரிடத்திலும் (இவர்களில் ஒரு சிறிய எண்ணிக்கையானோர் உதிரிகளாக யாழ்ப்பாணத்திலும் இருந்தனர். குறிப்பாக கேரளத் தொடர்புடையோர். இதைப்பற்றி இன்னொரு பகுதியில் தனியாகப் பார்க்க வேண்டும்) சமூகமாகத் திரள்வதற்கான அடிப்படைகள் நீண்டகாலமாக உருவாகவில்லை. ஏறக்குறைய ஐம்பது ஆண்டுகளாக அப்படியானதொரு சிந்தனையோ எண்ணமோ உருவாகவில்லை.

இதனால் இவர்கள் பெருவாரியாக வாழ்ந்தாலும் உதிரிகளைப்போலவே இருந்தனர். உதிரிகளை அல்லது உதிரி நிலையை எவரும் இலகுவாகக் கையாள முடியும். எத்தகைய பாதிப்புகளோ அநீதியோ இழப்புகளோ நேர்ந்தாலும் அதை எதிர்க்கவும் அதற்காகக் குரல் கொடுக்கவும் உதிரித்தன்மை இடமளிக்காது.

இந்தத் தன்மை இவர்களை மிகப் பாதிப்புக்குள்ளாக்கியது. பொருளாதாரச் சுரண்டல் தொடக்கம் பாலியற் சுரண்டல் வரையில் இந்தப் பாதிப்பு நீண்டது. இது இவ்வாறான நிலைமையில் உள்ள அத்தனை சமூகத்தினருக்கும் நேரும் பொது விதியாகும்.

சமூகமாகத் திரளக் கூடிய நிலையோ அதற்கான கூட்டுணர்வோ இருந்தால்தான் எதையும் எதிர்கொள்ளக் கூடிய பலம் கிடைக்கும். மட்டுமல்ல அந்தக் கூட்டுணர்வு தமது அடையாளத்தைக் குறித்துச் சிந்திக்கவும் வைக்கும். இதற்கு இரண்டு அடிப்படைகள் அவசியமானவை. ஒன்று நிரந்தரக் குடியிருப்பும் அதனூடான பொருளாதார வளர்ச்சியும் வேண்டும். மேலும் இது உண்டாக்கும் சமூக வளர்ச்சியாகும். அதாவது ஒரு மத்தியதர வர்க்க வளர்ச்சி இதற்குத் தேவை. ஆனால் இதை அடிநிலையில் உள்ள மக்கள் எட்டுவது எளிதானதல்ல. இரண்டாவது, இவர்களை ஒருங்கிணைக்கக் கூடிய அரசியற் சக்திகள் அல்லது தொழிற்சங்கங்கள். இது இவர்களுக்குக் கிட்டவில்லை.

ஆக இந்த இரண்டு அடிப்படை வலுக்களும் இல்லாத நிலையில் உதிரி மக்களாகவே இவர்கள் வாழ வேண்டியதாயிற்று. ஆனால் இவர்களை ஒரு சமூகமாகவே அடையாளம் கண்டு பிற சமூகத்தினர் நடத்தினர். இது ஒரு சுவாரசியமான - ஆனால் துயரமான முரணாகும்.

தம்மிலிருந்து வேறுபடுத்திக் கொள்வதற்கு இவர்களை ஒரு தனிச் சமூகத்தினராக நோக்கியவர்கள் மறுபக்கத்தில் இவர்களை ஒரு சமூகத்தினர் என்ற வகையில் அவர்களுக்குரிய அடிப்படைத் தகுதிகளான அரசியல் பெறுமானத்தையும் சமூகப் பண்பாட்டு வலுக்களையும் அங்கீகரிக்கத் தயாராக இருக்கவில்லை. அதாவது இவர்களைத் தமக்குப் பயன்படுத்துவதற்கும் தமக்குக் கீழே வைத்துக் கொள்வதற்கும் விரும்பினார்களே தவிர, சக மனிதர்களாக அங்கீகரிக்கத் தயாராக இருக்கவில்லை.

இதனால்தான் சுமார் ஐம்பது ஆண்டுகாலமாக - இரண்டு மூன்று தலைமுறைகளாக - இவர்கள் எந்த அடையாளத்தையும் பெற்றுக் கொள்ள முடியாதவர்களாக இருக்க வேண்டியிருந்தது.

கூலிகளாக இருந்த மக்களை கிறிஸ்தவ அமைப்புகளும் இயக்கங்களுமே மெல்ல மெல்ல அடுத்த கட்ட நிலைக்கு உயர்த்தின எனலாம். ஆனால் இதில் கிறிஸ்தவ அமைப்புகள் இந்த மக்களை மதம் மாற்றிய சம்பவங்களும் நிறைய நடந்துள்ளன. வன்னியில் உள்ள கிறிஸ்தவக் குடியிருப்புகளை நோக்கினால் இந்த உண்மை புரியும். குறிப்பாக புதிய கிறிஸ்தவக் கிராமங்கள் இந்த வகையானவை. ஆரோக்கிய புரம், சமாதான புரம், அமைதி நகர் என்ற பெயர்களே இதற்கு அடையாளம். ஆனாலும் இதைத் தவிர்க்கவும் முடியாத நிலை இருந்தது என்பதை நாம் ஏற்றுக் கொள்ளவே வேண்டும். இது ஒரு அடையாள அழிப்பு. இது ஒரு வன்முறை. இது ஒரு தந்திரோபாயச் செயல் என இன்று யாரும் இதைப் பற்றிக் கூற முற்படலாம். ஆனால் இந்த மக்களுக்கு ஒரு சிறிய வீட்டையும் (உண்மையிலேயே இந்த வீடுகள் மிகச் சிறியவையே) ஒரு சிறு துண்டு நிலத்தையும் (இந்த நிலமும் மிக மிகச் சிறியதே. ஆகக் கூடியது கால் ஏக்கர் நிலம் மட்டுமே) இந்த அமைப்புகள் வழங்கின. இதில் கூடுதலான ஆர்வம் காட்டியவை தென்னிந்தியத் திருச்சபை தொடக்கம் றோமன் கத்தோலிக்கம் அல்லாத பிற கிறிஸ்தவப் பிரிவுகளேயாகும்.

> **1958 இல் வன்னியை நோக்கி வந்த இந்த மக்களிலிருந்து 1990 களில்தான் அங்குமிங்குமாக அடையாளம் தெரியக் கூடிய ஆளுமைகள் மேற்கிளம்பத் தொடங்கினர். இவர்கள் வளர்ச்சியடைய மேலும் ஒரு பத்துப் பதினைந்து ஆண்டுகள் தேவைப்பட்டது. அதற்குள் இவர்கள் பட்ட சிரமங்களும் சந்தித்த அவமானங்களும் சாதாரணமானதல்ல. இன்றும் இவர்களுக்குப் பெரும் சவால் உண்டு. இதைக் கடக்க முடியாமலே உள்ளனர். இதுதான் பேரவலம்.**

இவை இந்த மக்களின் கல்வியில் கூடுதலான அக்கறையைக் காட்டின. இன்று இந்தச் சபைகளின் போதகர்களாக இந்தப் பிரதேசங்களில் இருப்பவர்களில் அநேகர் இந்த மக்களில் இருந்து உருவாகியவர்களே. அதைப்போல ஏனையவர்கள் படித்து பிற துறைகளில் மிளிரத் தொடங்கினர். இது 1990 க்குப் பின்னரே ஓரளவுக்கு நிகழத் தொடங்கியது.

1958 இல் வன்னியை நோக்கி வந்த இந்த மக்களிலிருந்து 1990 களில்தான் அங்குமிங்குமாக அடையாளம் தெரியக் கூடிய ஆளுமைகள் மேற்கிளம்பத் தொடங்கினர். இவர்கள் வளர்ச்சியடைய மேலும் ஒரு பத்துப் பதினைந்து ஆண்டுகள் தேவைப்பட்டன. அதற்குள் இவர்கள் பட்ட சிரமங்களும் சந்தித்த அவமானங்களும் சாதாரணமானதல்ல. இன்றும் இவர்களுக்குப் பெரும் சவால் உண்டு. இதைக் கடக்க முடியாமலே உள்ளனர். இதுதான் பேரவலம்.

ஏறக்குறைய அரை நூற்றாண்டு காலத் துயரத்துக்குப் பிறகு கடுமையான சிரமத்தின் மத்தியில் படித்து முன்னேறினாலும் பிற தொழில்களாலும் உழைப்பினாலும் வளர்ச்சியடைந்தாலும் அதை அங்கீகரிப்பதற்கு தமிழ்ச்சமூகத்தின் மனதில் இடமில்லை. இன்னும் இந்த நீதி மறுப்புத் தொடர்கிறது. இதனால்தான் நீதியைக் குப்பையிலே போட்டு விட்டு வேறு எதையோவெல்லாம் எடுத்து வைத்திருக்கிறோம் என்கிறேன். நீதியைக் குப்பையில் போட்டு விட்டால் மிஞ்சுவது என்ன? அதற்குப் பிறகு எப்படிச் சமத்துவத்தை எதிர்பார்க்க முடியும்? சமூக நீதியையும் ஜனநாயகத்தையும் எவ்வாறு எதிர்பார்ப்பது?

இந்தச் சந்தர்ப்பத்திலும் தவிர்க்க முடியாமல் நாம் இயக்கங்களையே இங்கும் குறிப்பிட வேண்டியிருந்தது. இந்த மக்களை அனைத்துச் சுரண்டல்களில் இருந்தும் மீட்டது இயக்கங்கள்தான். அது முற்று முழுதான மீட்பு நடவடிக்கை என்று சொல்லமுடியாது விட்டாலும் சிறுவர் தொழிலாளர்களாகப் பயன்படுத்துவதையும் பாலியல் ரீதியான சுரண்டல்களையும் இயக்கங்களின் காலத்தில் யாழ்ப்பாணச் சமூகத்தினரால் மேற்கொள்ள முடியவில்லை. இவை இரண்டுக்கும் முற்றுப் புள்ளி வைக்கப்பட்டது.

இந்தக் காலப்பகுதியில் பெரும்பாலானோருக்கு நிரந்தரக் குடியிருப்புக்கான நிலம் கிடைத்த பின்பு விரைவான சமூக முன்னேற்றம் ஏற்பட்டது. விரைவான சமூக முன்னேற்றம் ஏற்படத் தொடங்கும்போது தாம் ஒரு தனிச்சமூகத்தினர் என்ற உணர்வுந்தலுக்குள்ளாகினர். ஆனால் இந்த வளர்ச்சியில் ஏற்படக் கூடிய சிக்கல்களும் உருவாகின. பலவகையான சிந்தனைப் போக்குகளும் நிலைப்பாடுகளும் உருவாகின. தாம் ஒரு சமூகத்தினர் என்றாலும் அதற்குள் எழுந்த அரசியல் உணர்வுகளும் சமூக நிலைப்பாடுகளும் பலவாகின. மத்தியதர வர்க்கத்தை நோக்கி வளர்ச்சியடையும் எந்தச் சமூகத்திலும் நிகழும் தளம்பலும் தடுமாற்றமும் இந்த மக்களிடமிருந்து வளர்ச்சியடைந்தோரிடத்தில் காணப்பட்டது. தம்மைத்தனித்து அடையாளம் காண்பதற்கும் அதை முன்னிறுத்துவதற்கும் பதிலாக வடக்கில் உள்ள பெருந்திரள் அரசியலுக்குள்ளும் அந்தச் சிந்தனைப் போக்கிற்குள்ளும் இவர்கள் சங்கமிக்கத் தொடங்கினர். சரியாகச் சொன்னால் கரையத் தொடங்கினர், ஆனால் எப்படித்தான் சங்கமித்தாலும் கரைந்தாலும் இவர்களைச் சுற்றி ஒரு வட்டத்தைப் போட்டு வெளியே நிறுத்தி வைத்தது வடக்குச் சமூகம்.



(தொடரும்)

# இ.சு.முரளிதரனின் தொகுப்பில் இளையராஜாவும் இசைக்கருவிகளும்

புலோலியூர் வேல்நந்தன்



## புதுப்புனல் 11

தீம்புனலின் புதுப்புனல் பகுதியில் இவ்வாரம் அறிமுகம் காண்பது மிக அண்மையில் ஜீவநதியின் 193 ஆவது வெளியீடாகவும் மீள் வெளியீடு கண்டுள்ள பல்துறை ஆற்றல் மிக்க படைப்பாளர் இலக்கிய நண்பர் இ.சு.முரளிதரனின் இளையராஜாவும் இசைக்கருவிகளும் என்ற தொகுப்பு நூலாகும். இந்நூலைப் பொறுத்தவரை இது பல்வேறுபட்ட சிறப்புக்களை தன்னகத்தே கொண்டுள்ளது. இசைஞானி இளையராஜா குறித்தான முழுமையானதொரு கட்டுரைத் தொகுப்பு நூலாக ஈழத்திலிருந்து வெளிவரும் முதல் நூல் என்ற சிறப்பு இதற்கே உரியது. இளையராஜா இசை மீதான தீவிர ரசிகராகத் தன்னை வெளிப்படுத்திக் கொள்ளும் சினிமாவியல் சார் பத்தி எழுத்தாளராகவும் விளங்கும் நண்பர் இ.சு.முரளிதரன் அவர்கள் தொகுத்து வெளியிடும் நூல் என்ற சிறப்பும் இதற்குண்டு இதற்கு களம் கொடுத்த ஜீவநதி பரணிதரனின் பங்களிப்பும் இந்நூலின் வருகையை சாத்தியமாக்கியிருக்கிறது. இவற்றுக்கப்பால் இந்நூலுக்கான அட்டைப் படத்தைக் கணணி வரை கலை மற்றும் தன் ஓவியப் புலமையின் துணைகொண்டு இளையராஜாவின் முகத்தில் அவரது இசைக்கருவிகளைப் பொருத்தி வரைந்துள்ள தமிழ் நாடு சேலம் மாநகரத்தைச் சேர்ந்த ஓவியர் K.பரந்தாமன் அவர்களது அட்டைப்பட ஓவியம் வழியாகவும் இந்நூல் சிறப்புப் பெறுகிறது. இவற்றோடு இந்நூலில் சங்கீதவாண்மையாளர்கள் உட்பட இளையராஜாவின் இசை ரசிகர்கள் பலர் இணைந்து அவரது இசைக் கருவிகள் வழி அவரின் சிறப்புக்களை எடுத்தியம்பியுள்ள பன்முகத் தகவல்களைத் தரும் கட்டுரைகள் வழியாகவும் இந்நூல் சிறப்புப் பெறுகிறது எனலாம். நூலுக்குள்ளே நுழைந்தால் இளையராஜாவின் இசை என்பது /கடவுளின் வாசனை/ கொண்டாட்டத்தின் அடையாளம் / தொன்மத்தின் நீட்சி/ யுகத்தின் வரைபடம்... எனத் தொடர்ந்து, தேவலோகத்திற்கு மட்டுமே/அனுமதிக்கப்பட்டிருந்த /அமிர்தத்தை/ பூமிக்கு வழங்கிய/ அற்புதக் கலைஞனுக்கு/ இந்நூல் சமர்ப்பணம் எனக் கவிஞரான இ.சு.முரளிதரன் தன் தனித்துவக் கவி மொழி கொண்டு வழங்கியுள்ள சமர்ப்பணமாய் இந்நூலை வாசிப்பதற்கான உந்தலைத் தருகிறதெனலாம். கூடவே அட்டைப்பட ஓவியமும்தான்.



பின்னர் தொகுப்புரையில் இ.சு.முரளிதரன் அவர்கள் தமிழ்மீது முதற்காதலும் இசைஞானி மீது இரண்டாவது காதலும் தோன்றியது. பெண்மீது காதல் முளைக்கும் முன்பே அவரின் இசைப்பண் மீது முளைத்துவிட்டது எனக்கூறி இந்நூல் வெளிவருவதற்கான சாத்தியங்களை ஏற்படுத்திய ஜீவநதிக்கும் படைப்பாளிகளுக்கும் குறிப்பாக இத்தொகுப்பிற்கு இன்னொரு பரிமாணத்தைத் தந்த முகப்போவியர் சேலம் K.பரந்தாமன் அவர்களுக்கும் தன் நன்றியைப் பதிவுசெய்துள்ளார். இந்நூலில் இடம் பெறும் கட்டுரைகள் வரிசையில் இளையராஜாவும் புல்லாங்குழலும் என்ற கட்டுரையை தொகுப்பாசிரியரான இ.சு.முரளிதரன் அவர்களே எழுதியுள்ளார். இக் கட்டுரையில் அவர் இளையராஜா புல்லாங்குழல் இசையை ராக, குரலிசை அனுபவமாக, பாடல் வரிகளின் நுண்ணிடை வெளிகளில் பாடலின் சரணங்களிடையே திரைப்படப் பின்னணி இசையில் என எங்கெங்கு எவ்வாறெல்லாம் பயன்படுத்தியுள்ளார் என்பதைப் பொருத்தமான பாடல் உதாரணங்கள் வழி மிகுந்த தேடலுடன் வெளிப்படுத்தியிருப்பது சிறப்புக்குரியதாய் அமைகிறது. எடுத்துக்காட்டுகளாக சின்னக் கண்ணன் அழைக்கிறான், மாலையில் யாரோ மனதோடுபேச, மௌனமான நேரம், காற்றில் எந்தன் கீதம், ராசாவே உன்னை நம்பி, சின்னத் தாயவள், சந்தன மார்பிலே போன்ற பாடல் வரிகளைக் குறிப்பிடலாம். மிக நுணுக்கமாக எழுதப்பட்டுள்ள இக் கட்டுரையின் முழுமையைப் பக்க வரையறை கருதி இதில் முழுமையாகத் தர முடியவில்லை.

அடுத்து இசைஞானியும் வயலினும் என்ற கட்டுரையை ஈழத்தின் பிரபல பாடகியும் முறைப்படி சங்கீதம் கற்ற சங்கீத ஆசிரியையுமான ஜெயபாரதி கௌசிகன் அவர்கள் எழுதியுள்ளார். இவரது கட்டுரை வாண்மைத்துவத்தோடு எழுதப்பட்ட ஒரு கட்டுரையாக அமைகிறது. இசைக்கருவிகள் இளையராஜாவின் இசை, வயலின் பிரபாகரின் பங்களிப்பு என்பவற்றைக் கூறி விட்டு பின்னர் இசைக் குறிப்புக்கள் வழி பொருத்தமான பாடல் உதாரணங்களையும் கூறி இளையராஜாவின் வயலின் இசைச் சிறப்புக்களைக் கூறியுள்ள முறைமை சிறப்பு மிக்கதாய் அமைகிறது. சுந்தரி கண்ணால் ஒரு சேதி, அந்தி மழை பொழிகிறது, பூங்கதவே தாழ்திறவாய், அன்னக் கிளி உன்னைத் தேடுது, வானுயர்ந்த சோலையிலே எனப் பல பாடல் உதாரணங்கள் இங்கு காட்டப்பட்டுள்ளன.

இளையராஜா இசையில் வீணை என்ற கட்டுரையை ஈழத்தின் கவனிப்புக்குரிய பக்திப் பாடற் கவிஞர் வெற்றி துஷ்யந்தன் அவர்கள் தந்துள்ளார். இளையராஜாவின் பக்தி இசைப்பாடல்கள், கர்நாடக இசைப் பாடல்களில் அவர் வீணை இசையை பயன்படுத்திய சிறப்புக்களை ஜனனி ஜனனி, இன்றைக்கு ஏனிந்த ஆனந்தமோ, சங்கத் தமிழ்க்கவியே சங்கீத ஜாதி முல்லை, மணமாலையும் மஞ்சளும் போன்ற பாடல் உதாரணங்கள் வழி எடுத்துக் காட்டியுள்ளமை சிறப்பு.

அடுத்த கட்டுரையைத் தந்திருப்பவர் இசைஞானி மீதான தீவிர ரசிகரும் கவிஞருமான யாழ்.மாநகர ஆணையாளர் கவிஞர் த.ஜெயசீலன் அவர்கள் "இசையின் லப் - டப்" என்ற தலைப்பில் இசைஞானி, அவரது இசை, பாடல்கள் பற்றிய பல்வேறுபட்ட சிறப்புக்களை தனது ரசிக மன ஆழத்தில் இருந்து இக் கட்டுரையில் விரிவாகத் தந்துள்ளதுடன் குறிப்பாகக் கிற்றார் என்ற இசைக்கருவியை இசைஞானியின் இசையோடு இணைத்துப் பொருத்தமான பாடல்கள் உதாரணங்கள் வழி விரிவாக விளக்கியுள்ளார். 1976 இல் வெளிவந்த அன்னக்கிளி படத்தின் அறிமுகத்தில் தொடங்கி இன்று வரையான அவரது இசைப் பயணம் அதில் நடைபெற்ற சுவையான சம்பவங்கள் என இளையராஜாவை அடுத்த தலைமுறை அறிவதற்கான ஒரு வெட்டுமுக தரிசனத்தைத் தரும் சிறந்த கட்டுரையாக இக் கட்டுரை அமைந்துள்ளமை சிறப்புக்குரியது. இக் கட்டுரையில் இளையராஜாவின் Bass guitar, lead guitar என்பவற்றின் சிறப்புக்களையும் கூறியுள்ளதுடன், அதில் பங்களித்த பல கலைஞர்களைக் குறிப்பிட்டு குறிப்பாக சதானந்தன், சசிதரன் (இளையராஜாவின் உறவினர் அண்மையில் மறைந்துவிட்டார்) அவர்களின் பங்களிப்புக்களை எடுத்து விளக்கியுள்ளதுடன் புதிய பூவிது, வானிலே தேனிலா ஆடுதே, ஆகாய வெண்ணிலாவே, இளையநிலா பொழிகிறதே, அம்மன் புகழைப் பாட எனக்கு (புதுமுயற்சி) பாடல் போன்ற உதாரணங்களை எடுத்துக்காட்டி இளையராஜாவின் இசையின் இதயத்துடிப்புக்களாய் இக் கிற்றார் இசையைக் காட்டியுள்ள தன்மை சிறப்புக்குரியது.

இளையராஜாவின் இசையில் நாதஸ்வரம் என்ற கட்டுரையை அதிபரும் கவிஞருமான யாத்ரிகன் அவர்கள் தந்துள்ளார். இதில் அவர் தமிழர் பாரம்பரிய இசையான நாதஸ்வர இசைச் சிறப்புக்களை எடுத்துக் கூறி இசைஞானி தமது இசையில் இதனை எவ்வாறு சிறப்பான முறையில் கையாண்டுள்ளார் என்பதைப் பொருத்தமான பாடல் உதாரணங்கள் வழி எடுத்துக் காட்டியிருப்பது சிறப்புக்குரியது. எடுத்துக்காட்டுக்களாக மாங்குயிலே பூங்குயிலே, அரிசி குத்தும் அக்கா மகளே, பொத்தி வைச்ச மல்லிகை மொட்டு, மச்சானைப் பாத்திங்களா, பூங்கதவே தாழ்திறவாய் போன்றன குறிப்பிடப்பட்டு அவற்றில் நாதஸ்வரம் கையாளப்பட்ட சந்தர்ப்பங்களையும் விளக்கியுள்ளமை சிறப்புக்குரியது.


இளையராஜாவின் இசையில் மிருதங்கம் என்ற கட்டுரையை மிருதங்க சங்கீத ஆசான் த.பார்த்தீபன் அவர்கள் எழுதியுள்ளார். மிருதங்க சங்கீத ஆசான் அவ் வாத்திய இசை பற்றி எழுதிய வாண்மைத்துவம் மிக்க கட்டுரையாக இக் கட்டுரையும் சிறப்புப் பெறுகிறது. அவ்வகையில் தலையைக் குனியும் தாமரையே பாடலில் இடம்பெற்றுள்ள மிருதங்கச் சிறப்புக்கள், ஆடல் கலையைத் தேவன் தந்தது என்ற பாடலின் மிருதங்க ஜதிக் கோர்வைச் சிறப்பு என மிக நுண்ணிய முறையில் இக் கட்டுரையாளர் விளக்குவது சிறப்பாக அமைந்துள்ளது. அதே போல கலைவாணியே பாடல், அந்தி மழை பொழிகிறது, ஆயிரம் தாமரை மொட்டுக்களே, பூ மலர்ந்திட நடனமிடும் போன்ற பாடல் உதாரணங்கள் வழி இசைஞானி இசையில் மிருதங்கச் சிறப்புக்களைச் சங்கீத நுட்பத்துடன் விளக்கியுள்ளமை சிறப்பு.

ஊடகவியலாளர், படைப்பாளர் கானா பிரபா அவர்கள் அவுஸ்ரேலியாவில் இருந்து இளையராஜாவின் இசையில் மேளதாளம் என்ற கட்டுரையை எழுதியுள்ளார். கிராமியப் பாடல் இசை வழி இவ்வாத்தியச் சிறப்புகள் எடுத்துகாட்டும் கட்டுரையாளர், அதற்கு உதாரணங்களாக மாங்குயிலே பூங்குயிலே, ஊறுமுன்னு உறுமுதடி, கிழக்கால சுவத்துல பக்கம், மயிலாடும் பாறையிலே, கறுத்த மச்சான், சாமிகளே சாமிகளே போன்ற பாடல்களை எடுத்துக் காட்டியிருப்பது சிறப்பு. இளையராஜாவின் இசையில் ட்ரம்ஸ் என்ற கட்டுரையை, ஆசிரியரும் கவிஞருமான மா. செல்வதாஸ் அவர்கள் எழுதியுள்ளார். இக் கட்டுரையில் அவர் இளையராஜா ட்ரம்ஸ் இசையைக் கையாண்டுள்ள பாடல்கள், படங்கள் பற்றி விரிவாக விளக்கியுள்ளார். இளமை இதோ இதோ, நின்னுக்கோரி வர்ணம், சங்கீத மேகம், அடியே மனம் நில்லுன்னா, ராஜா ராஜாதி, குருவாயூரப்பா போன்ற பாடல்கள் உதாரணங்களை பொருத்தமுறக் காட்டியுள்ளமை சிறப்பு.

அடுத்து இளையராஜாவின் இசையில் தபேலா என்ற கட்டுரையை, ஆசிரியரும் படைப்பாளியும் பாடகருமான குகபரன் எழுதியுள்ளார். இக் கட்டுரையில் அவர் தபேலா குறித்த அறிமுகத்தையும் இளையராஜாவின் தபேலாக் கலைஞர்கள் பற்றியும் அறிமுகம் செய்வதுடன் இளையராஜா இசையில் தபேலாவால் புகழ்பெற்ற பாடல்களைப் பொருத்தமான தகவல்களுடன் எடுத்துரைப்பது சிறப்புக்குரியது. எடுத்துக்காட்டுக்களாகத் தாலாட்டும் பூங்காற்று, மங்கை நீ மாங்கனி, வா வெண்ணிலா, பூவே செம்பூவே, ஒரு நாளும் உனை மறவாத, கண்ணே கலைமானே.., முத்துமணிமாலை, ஊரெல்லாம் உன் பாட்டுத்தான் என்பவற்றைக் கூறியுள்ளமையும் சிறப்புக்குரியது.

நிறைவாக இளையராஜாவும் ஹார்மோனியமும் என்ற எனது கட்டுரை இடம்பெற்றுள்ளது. இதில் நாம் வாழும் காலத்தின் இசை வரலாறாக இதயக் கோயிலின் உதயகீதமாய் வாழும் இசைஞானியின் இசை அடையாளங்களில் ஒன்றாக அவரது உருவத்தோடு இணைந்திருக்கும் அடிப்படை இசையாகிய ஹார்மோனிய இசைச் சிறப்புக்களை, அதன் வரலாற்றை அவர் கையாண்ட ஹார்மோனிய இசைப் பாடற் சிறப்புக்களை பொருத்தமான பாடல் உதாரணங்கள் வழி எடுத்துக் காட்டியுள்ளேன்.


எனவே தொகுத்து நோக்கும் போது பக்க அளவில் குறைந்தது ஒரு நூலாக அமைந்தாலும் அது தரும் அனுபவம் என்பது மிகப் பெரிது என்பதை இவ் அறிமுகப் பத்தியே உங்களுக்கு உணர்த்தும் என நம்புகிறேன். இத்தகைய நூல் முயற்சிக்காக நண்பர் இ.சு முரளிதரன் அவர்களையும் ஜீவநதி பரணியையும் தீம்புனலின் புதுப்புனல் வாழ்த்தி மகிழ்கிறது. ■




# நிகழ்நிலையில் கற்பிப்பவன்

சித்தாந்தன்

என்னை வகுப்பறையாக்கிக்
கற்பித்துக்கொண்டிருக்கின்றேன்.
நினைவின் மீது மிதக்கும் எண்ணற்ற
முகங்களில்
படரும் எந்த மாற்றங்களையும்
உணரமுடிவதில்லை.
வெறும் கணனித் திரையில்
எழுத்துக்கள்தான் முகங்கள்.
என் வார்த்தைகளே மீள மீள
எதிரொலிக்கின்றன.
ஒவ்வொரு கணமும் தடுமாறுகின்றன.
தூக்கத்தை உரித்தெடுத்த கண்களில்
கடந்த காலம் மட்டுமே கனவாகிக் கிடக்கின்றது.
சம்பாசனைகளற்ற நாட்களிடம்
நானே சொல்லிக் கொள்கின்றேன்
தயைகூர்ந்து என்னை மன்னியுங்கள்
நானே எனக்குக் கற்பிப்பது போலிருக்கின்றது.
கணனியில் கேட்கும் குரல்கள்
என்னுடையதைப் போலவே இருக்கின்றன.
பல தடவையும் கேட்டுக்கொள்கின்றேன்
எதிரே யாராவது இருக்கின்றீர்களா?
என்னுடைய வார்த்தைகள் கேட்கின்றனவா?
பிள்ளைகளே வேண்டிக்கொள்ளுங்கள்
இது பிரார்த்தனைக் காலம்
என் குரலை கடவுளின் குரலாகச்
செவிமடுக்காதீர்கள்.
கருணை வற்றிய காலத்தில்
கடல் செத்து பூமியின் மீது மிதக்கின்றது.
நச்சுவிதைகளை யாரோ காற்றில் எறிந்து
விட்டிருக்கின்றார்கள்.
பிள்ளைகளே
நீங்கள் என்னை நம்பாதீர்கள்
என் குரல் என்னையே எரிச்சலூட்டுகின்றது.
நாங்கள் வாசித்துக் கொண்டிருக்கும்
இந்தப் புத்தகத்திலும்
பேசிக்கொண்டிருக்கும் இந்த வார்த்தைகளிலும்
என்னதான் இருக்கின்றது.
வெறும் மௌனம்
இது மட்டுமே உங்களையும் என்னையும்
இக்கணம்வரை பிணைத்து வைத்திருக்கின்றது.




# கொரோனாவும் மூலிகை சுகவாழ்வும்

(சென்றவாரத் தொடர்ச்சி)

**டாக்டர், வெற்றிவேல் சக்திவேல்**
B.S.M.S, P.G.Dip Pub Adm, M.Sc



மூலிகைகள் உயிர்ப்பு நிறைந்த பொருட்களாகும். மூலிகைகள் எமக்கு சக்தி அளிக்கும், உயிர் கொடுக்கும், உயிர்ப்பிக்கும் தன்மை வாய்ந்தனவாகக் காணப்படுகின்றன. மனிதர்களின் உடலை மட்டுமல்லாது உள்ளத்தையும் உயிர்ப்பூட்டும் மூலிகைகளாகக் காணப்படுகின்றன. சிறிய மூலிகைகள் பெரிய மாற்றத்தை எற்படுத்தக் கூடியதாக இருக்கின்றன. சவால் மிக்க இக்கால கட்டத்தில் சுக வாழ்விற்கான மருத்துவத் தாவரங்களைப் (Healthy Medicinal plants) பற்றி சிந்திப்பதுடன், சுகவாழ்வு அளிக்கும் உயர் ஊட்டச்சத்து மிக்க மூலிகைகள் (Healthy nutritions herbs or higher nutrient content) பற்றிச் சிந்திப்பதும் அவசியம். உலகம் முழுவதும் மூலிகைகள் மீது ஆர்வம் அதிகரிக்கும் நிலையில், உலகமே எம்மை நோக்கிப் பார்க்கும் அளவுக்கு நனோ தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தி, வைரசுகளுக்கெதிரான நனோ மூலிகை இரசாயன பொருட்களைப் (Herbal Antiviral Nano Particles) பயன்படுத்தி கொரோனா வைரசுக்கு எதிரான போரில் வெற்றிக் கொள்வது போன்ற புதிய சிந்தனைகளை, புதிய பரிசோதனைகளை, புதிய பாதைகளை அமைப்பதுடன் மூலிகை, சிந்தனைகளுக்கு வலுவூட்டுவதுடன், குழந்தைகள், சிறார்களிடத்தில் மூலிகை மருத்துவ விழிப்புணர்வை ஏற்படுத்துவதுடன் சவால்களை எதிர்கொள்ளுதல், சாதிக்க



முடியும் என்ற உறுதிப்பாடு தமிழர் அனைவரது உள்ளங்களிலும் ஊற்றெடுத்துப் பாய வேண்டும்.

பழமை வாய்ந்த குணப்படுத்தும் முறைமைகள் (Oldest disease curing methods), குணமாக்கும் மரபுவழி நிலைகளையும் (Curative traditions), உடலை, உள்ளத்தைச் சுத்தி செய்யும் (Cleanse the System) முறைமைகளையும், எளிமையானதும் சிக்கலானதுமாக வழிமுறைகளையும் (Simple and Complex procedures), பாரம்பரிய மூலிகை மருத்துவ நலன் பேணுகை (Traditional herbal medical Care), நோய் எதிர்ப்புத்திறன் மேம்படுத்தும் (Immunity boosting) மூலிகைள், மூலிகை நீராவி பிடித்தல் முறை (Steaming Using fresh leaves or medicinal plants), மூலிகை இலைக்கஞ்சி, மூலிகை சத்துமா, கலப்படமற்ற பாரம்பரிய உணவு (Unadulterated traditional food), சேதனப் பசளை பயன்படுத்தும் விவசாயத் தோட்டம் (Organic farming), சேதனப் பசளை பயன்படுத்தும் மூலிகைத் தோட்டம் (Organic herbal gardens), சிறுதானிய உணவுகள், சைவ ஆலயங்களில் பயன்படுத்தப்படும் மூலிகைகள், போசணை ஊட்டம் நிறைந்த சமநிலை உணவுகள், பழங்கள், காய்கறிகள் என்ற பல நிலைகளோடு இணைந்த வாழ்வியல் பண்பாட்டு நெறிமுறைகள் நோயில்லா நெறி என்ற பயணத்திற்கு அழைத்துச் செல்வதோடு கொரோனா போன்ற சிக்கல் நிலைகளைக் கூட வெற்றி கொள்வதற்கான நோய் எதிர்ப்புத் திறன் மேம்பாட்டை வலுப்படுத்துவதற்கும் உதவியாகக் காணப்படுகின்றன. இரசாயன வளமாக்கிகள், இரசாயன களை கொல்லிகள், இரசாயன பீடை நாசினிகள் என்று எமது விவசாய உலகத்தை ஆக்கிரமித்த இரசாயன உலகமானது நிலத்தையும், நீரையும் நஞ்சாக மாற்றியதுடன் எமது உணவையும் நஞ்சாக்கி உடலையும் நஞ்சாக்கி நோய் எதிர்ப்புச் சக்தியும் குறைத்துப் பல்வேறு நோய்களையும் பரிசாகத் தருகின்ற நிலைமையைக் காணலாம். சேதன இயற்கை விவசாய விளைப் பொருட்கள் நல்ல ருசி, மணம் கொண்டுள்ளதுடன், உடல் வன்மையைப் பெருக்குவதுடன் உடல் நோய் எதிர்ப்புச்சக்தி மேம்பாடு வழங்குவதுடன் சூழல் மாசுபடாமல் சூழலுக்கு நட்புறவுடனான (Eco Friendly) சூழ்நிலையையும் உருவாக்குகின்றது. பாரம்பரிய நெல்லினங்களும் நோய் எதிர்ப்பு சக்தியை அதிகரிக்கின்றது. சிறு தானியங்களும் உடல் வன்மையை, நோய் எதிர்ப்பு சக்தி அளிப்பதால் சிறு தானிய விவசாயம் ஊக்குவிக்கப்பட வேண்டும். மூலிகைகளை மாடித் தோட்டமாக வளர்ப்பதுடன், மூலிகைத் தோட்டங்களை வீடுகளில், கோயில்களில், நிறுவனங்களில், நூலகங்களில் அமைப்பதன் மூலம் சுக வாழ்வு, உடல் வன்மை, ஊட்டச் சத்துணவு, உடற்பயிற்சி, மூலிகை மருந்துகள், நோய் எதிர்ப்பு சக்தி மிகுந்த பொருட்களை நாம் வாழும் சூழலில் பெற முடியும். மூலிகைத் தோட்டங்களும் சேதனப் பசளையிட்டு இயற்கை பீடை நாசினியுடன் மூலிகைப் பூச்சி விரட்டிகள் (Organic farming) வளர்க்கப்பட வேண்டும்.

மஞ்சள், நொச்சி போன்ற மூலிகைகளை கொதிநீரிலிட்டு ஆவிபிடிக்கும் முறைகள் சித்தமருத்துவச் செவ்வியல் நூல்களில் (Classical texts) கூறப்பட்டுள்ளது. இது சளியை நீர்த் தன்மையாக்குவதுடன் சளியைக் குறைப்பதற்கும் (Steam liquefies and reduces phlegm), சுவாசப் பாதைத் தடைகளை (Obstruction of the nasal passage) குறைப்பதுடன் வைரசு, பற்றீரியா போன்ற நுண்ணங்கிகள் (Micro Organisms) செயற்றிறனைக் குறைக்கச் செய்யும்.

யாழ் பல்கலைக்கழக சித்தமருத்துவ துறையானது பல்கலைக்கழக சித்தமருத்துவ விரிவுரையாளர்களையும் சமூகத்திலுள்ள சித்தமருத்துவ புலமை சார் அறிஞர்களையும் சேர்த்துப் பெருந்தொற்று செயலணிக் குழுவை உருவாக்கி மூலிகை மருத்துவ ஆய்வுகளை விரைவாக முன்னெடுப்பதுடன், ஏனைய பல்கலைக்கழகங்களில் உள்ளது போன்று ஆய்வறிஞர் (Research fellow), இணை ஆய்வறிஞர் (Rasearch Associate), உதவி ஆய்வறிஞர் (Research Assistant) போன்ற பதவி நிலைகளை உருவாக்கி சமூகத்திலுள்ள மூலிகை மருத்துவ புலமையாளர்களை உள்வாங்கி மூலிகை மருத்துவ ஆய்வுகளை முன்னெடுப்பதுடன் சமூகத்திலுள்ள சித்த மருத்துவ புலமை சான்றோர்களை வருகைநிலை விரிவுரையாளர்களாகப் பயன்படுத்தி மாணவர்களுக்குப் பயன்படுவதுடன் மாணவர்களை மலரும் மூலிகை மருத்துவ விஞ்ஞானிகளாக உருவாக்கி செயற்பட வைப்பதுடன், சித்தமருத்துவ நிபுணத்துவ பட்டப் பின் படிப்பு கற்கை நெறி (M.D (Siddha medicine) உருவாக்கப்பட்டு தமிழர் சமூகத்தில் பல சித்த மருத்துவ நிபுணர்களை உருவாக்கும் முயற்சியில் ஈடுபட வேண்டும்.

**மூலிகை சுக வாழ்வு நிறுவனம்**
**கிளவ் வீதி, தெல்லிப்பளை**

# நல்லிசை சூடி நடுகல்லாயினான்

**ந. குகபரன்**

நினைவுகளுக்குப் பேராற்றல் உண்டு. மனித வாழ்வே நினைவுகளின் கோவை தான். மனிதர்களது செயல்களின் ஊடாக அவர்கள் மறைந்த பிறகும் நினைவுகொள்ளப்படுகிறார்கள். தனிமனித நினைவுகள், சமூகமாக பேணப்படும் நினைவுகள் காலங்காலமாகத் தொடர்கின்றன. செயல்புரிவதற்கும், முன்னோக்கிச் செல்வதற்கும் நினைவுகள் வலிய துடுப்புகளாக உதவுகின்றன. இந்த நினைவுகளை உருவப்படுத்திக் குறியீட்டு வழியாக உணர்வதற்கும், கடத்துவதற்கும், உரையாடுவதற்கும் அதனைக் குறித்துப் பொதுவான உணர்வைத் தூண்டுவதற்கும் அதன்வழியே ஒன்றுகூடுவதற்கும் பல்வேறு அடையாளங்கள் உதவுகின்றன. இலக்கியம் அத்தகையவற்றில் பிரதானமானது. அதுபோலவே உருவமான அடையாளங்கள் பலவும் புறஉலகில் உள்ளன. அவற்றில் ஒன்று பண்டைத்தமிழர் கண்டடைந்த நடுகல் ஆகும்.



வாழ்ந்து மறைந்தவர்களின் நினைவுகளாக நிமிர்ந்து நிற்கும் நடுகற்கள் ஒரு காலகட்ட சமூகவரலாற்றை எடுத்துக்காட்டுகின்ற எச்சங்களாகவும் உள்ளன. இறந்தவர்களை இறைவனுக்குச் சமதையாகப் பாவனை செய்து படையல் படைத்து வழிபடும் பண்பு பண்டுதொட்டு நிலவிவந்துள்ளது. புறநானூற்றில் இவ்வாறு ஒரு காட்சி இடம்பெறுகிறது.

கோப்பெருஞ்சோழன் வடக்கிருந்து உயிர்துறந்த பின்னர் அவனது குலச்சிறப்பையும் புகழையும் நினைவுகொள்ள அவனைச் சார்ந்தோர் நடுகல் நிறுவினர். அதில் அவன் புகழைப்பொறித்து மயிற்பீலி சூட்டி விழாவெடுத்தனர். அந்த வேளையில் மன்னனது நண்பரில் ஒருவரான புலவர் பொத்தியார் தனது உணர்வுகளை இப்படி விபரிக்கிறார்.

பாடுநர்க் கீத்த பல்புக ழன்னே
ஆடுநர்க் கீத்த பேரன் பினனே
அறவோர் புகழ்ந்த வாய்கோ லன்னே
திறவோர் புகழ்ந்த திண்ணன் பினனே
மகளிர் சாயன் மைந்தர்க்கு மைந்து
துகளது கேள்வி யுயர்ந்தோர் புக்கில்
அனைய னென்னா தந்தக் கோனை
நினையாக் கூற்ற மின்னுயி ருய்த்தன்று
பைத லொக்கற் றழீஇ யதனை
வைகம் வம்மோ வாய்மொழிப் புலவீர்
நனந்தலை யுலக மரந்தை தூங்கக்
கெடுவி னல்லிசை சூடி
நடுக லாயினன் புரவல னெனவே

அனைவரது தேவைகளை உணர்ந்து அவரவர் நிலையறிந்து அரசாட்சி புரிந்த தலைவராகத் திகழ்ந்துள்ளான் கோப்பெருஞ்சோழன். அவன் கலையே வாழ்வாக வாழ்ந்த கலைத்தொழிலாளரை ஆதரித்துப் பேணி அவர்களுக்கு வேண்டியதை வழங்கியுள்ளான். பாடுநர், ஆடுநர் ஆகியோர்க்கு ஈந்த பேரன்பினன் என்கிறார் புலவர். சங்ககாலத்தில் கலைத்தொழிலாளர் புரவலர்கள் பலரால் ஆதரிக்கப்பட்டனர் ஆயினும் அந்நிலை தொடராமற்போனமையே பிற்காலத்தில் அவர்கள் கலைத்தொழிலைக் கைவிடநேர்ந்தது. கோப்பெருஞ்சோழன் கலையை வளர்ப்பதில் கரிசனையோடு இருந்துள்ளான் என்பதை இப்பாடலடி வெளிப்படுத்துகிறது.


அறத்தின் வழியே அதிகாரத்தை நிலைப்படுத்தி செங்கோலாட்சி செலுத்தியவன் என்று புலவர் மன்னனைப் போற்றுகிறார். அவன் சான்றோரால் புகழப்பட்டவனாகவும் அவர்களோடு திண்ணிய நட்புப் பூண்டவனாகவும் விளங்கியுள்ளான்.

பெண்களிடத்து மென்மையாகவும் வலியரிடத்து மிக்க வலியனாகவும் நடந்த மிடுக்குடையவன் சோழன். குற்றமற்ற கேள்வியுடையவர்களை ஆதரித்து பேணிய மாண்பினன். இத்தகு தகுதியுடைய பெரியனைக் குறித்து நினையாது "கூற்றம் இன்னுயிர்" பறித்தமையால் சினந்து இயமனின் செயலை விமர்சிக்கிறார் புலவர். சுற்றமாகக் கூடி இவ்வாறு நடந்துகொண்ட இயமனை வைவோம் என்கிறார். மக்கள் மனங்களில் வாழ்ந்த தலைவன் மறைந்த பிறகு சூழ்ந்து கொண்ட வெறுமையானது அவர்களிடத்தில் எத்தகைய பாதிப்பை ஏற்படுத்தியுள்ளது என்பதற்கு இக்குரல் எடுத்துக்காட்டாகிறது.

மக்களின் மேய்ப்பர்களாக இல்லாமல் மக்களின் மனமறிந்து செயலாற்றும் மாண்பும் தெளிந்த நோக்கும் செயற்றிறனும் உடைய நேர்மையான தலைவர்களை உலகம் என்றும் நினைவில் இருத்தித் துதிக்கும். அவர்களின் வெற்றிடமானது இட்டுநிரப்பப்பட இயலாததாகிவிடும் என்பதை சோழனின் பிரிவு உணர்த்துகிறது. சோழன் மறைந்த பின்னர் உலகத்தில் துன்பம் சூழ்ந்து கொண்டது எனப் புலவர் பாடுகிறார். தலைவன் கேடில்லாத புகழ்மாலையைச் சூடி நடுகல்லாயினான் என்கிறார்.

நிலையற்ற இந்த வாழ்வில் ஒவ்வொருவரும் தத்தம் பொறுப்புணர்ந்து செயல்புரிவதும் உள்ளத்துக்கு நேர்மையாக நடப்பதும் பேரறமாகும். வாழுங்காலத்தில் மனநிறைவும் மறைந்தபின்னரும் ஏனையோர் மனங்களில் வாழும் பெருந்தகைமையும் சீரிய செயல்களாலே நிலைபெறும் என்பது உண்மை. இதனைத்

"தக்கார் தகவிலர் என்பது அவரவர்
எச்சத்தாற் காணப் படும்" என்றார் வள்ளுவர்.



விமலதாஸ்

# கனிம வள மண்ணகழ்வும் மன்னார் தீவின் எதிர்காலமும்

இலங்கைத் தீவானது பல்லாயிரம் ஆண்டுகளாக வெவ்வேறு வகையான புவியியல் மாறுதல்களுக்கு உட்பட்டு அதன் கரையோரப்பகுதிகளில் ஏராள மான மணல் படிமங்கள் ஏற்பட்டு அவை தொடர்ச்சியான அரிப்புகள் மற்றும் மாற்றங்களிற்கு உட்பட்டு கனிமங்கள் நிறைந்த பகுதிகளாகக் காணப்படுகின்றன. இலங்கையின் கிழக்குக் கடற்கரை ஓரங்களில் கடந்த காலங்களில் கனிம வளங்கள் அகழப் பட்டு வெளிநாடுகளிற்கு ஏற்றுமதி செய்யப்பட்ட வரலாறுகளும் உண்டு. இல்மனைற் உட்பட வெவ்வேறான கனிமங்கள் நிறைந்த மணல் அகழ் வுகளும் ஏற்றுமதியும் இலங்கையின் கரையோரங்களை அண்மித்து மேற் கொள்ளப்பட்டு வருகின்றது. இவற்றை முறைப்படுத்தவும் ஒருங்கிணைத்துச் செயற்படுத்தவும் இலங்கையில் வெவ்வேறான திணைக்களங்களும் நிறுவனங்களும் காணப்படு கின்றன.

இலங்கையின் கிழக்குக் கடற்கரையின் ஓரங்களில் காணப்படுகின்ற கனிம வளங்களுள் பெரும்பாலானவை திருகோணமலை தொடக்கம் மட் டக்களப்பு மாவட்டத்தின் தொடக்கப் பகுதி வரையில் பெருமளவில் காணப் படுகின்றது. புல்மோட்டைக் கடற்கரையினை அண்டிய பகுதியில் சில அகழ்வுகளை மேற்கொண்டு அவற்றை தூய்மைப்படுத்தி அவற்றிலிருந்து கனிமங்களைப் பிரித்து ஏற்றுமதி செய்யும் நிறுவனமாக இலங்கை 'வரையறுக்கப் பட்ட கனிய மணல்' எனும் தனியார் மயப்படுத்தப்பட்ட நிறுவனம் காணப்படுகின்றது. இவ்வாறான அகழ்வுகளின் தொடர்ச்சியான அகழ்வு மற்றும் பிரித்தெடுப்புக் காரணமாக ஏற்படும் சூழல் பாதிப்புக்களை இழிவளவாக்க நடவடிக்கைளை வெவ்வேறு அமைப்புக்கள் மேற் கொண்டு வருகின்றன.

இதைப்போன்றதொரு கனிமவள அகழ்வினை மன்னார் தீவின் கரையோரங்களில் மேற்கொள்ள சில நாட்களுக்கு முன்னர் இலங்கை அரசின் சில திணைக்களங்களினால் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருந்தன. இதன் முன்னெடுப்புகளில் பல்வேறு நாடுகளைச் சேர்ந்த தனியார்நிறுவனங்கள் தமது ஆர்வங்களை வெளிப்ப டுத்தி இருந்தாலும், தற்பொழுது அவுஸ்திரேலியாவைச் சேர்ந்த 'டைட்டானியம் சாண்ட்ஸ்' எனும் நிறுவனம் ஒப்பந்தங்களை மேற்கொள்ள ஆயத்தமாகிக் கொண்டிருப்பதாகத் தகவல்கள் அறியக்கிடைக்கின்றன. டைட்டானியம் சாண்ட்ஸ் நிறுவனத்தின் உத்தியோகபூர்வ இணையத்தளத்தில் மன்னார் கடற்பரப்பில் அவர்களது ஈடுபாடு பற்றிய வெளிப்படுத்தல்கள் காணப்படுகின்றன. இதனை எதிர்த்து வெவ்வேறான தரப்பினரால் வெவ்வேறு எதிர்ப்புகள் முன்வைக்கப்பட்டிருந்தாலும் அதை ஒட்டிய சாத்தியமான தீர்மானங்கள் இன்னமும் வெளிப்படுத்தப்படவில்லை.

மன்னார் தீவானது 2000 சதுர கிலோமீட்டர் பரப்பளவினையும், மொத்த சனத்தொகை ஏறக்குறைய 100,000 இனையும், தற்போதுள்ள நிலவரத்தின் படி ஒரு சதுர கிலோ மீற்றர் பரப்பிற்கு 50 பேர் எனும் சனத்தொகை அடர்த்தியை கொண் டுள்ள இத்தீவின் நிலத்தடி நீரானது ஆழமற்றதாகும். உவர் நீரின் மேற்பரப் பில் நன்னீர் நிலைத்திருக்கும் வகையில் மன்னார் தீவின் நிலத்தடி நீர்வளம் அமையப்பெற்றுள்ளது. இதன் காரணமாக மேலதிகமாக மன்னார் தீவின் நன்னீர் உறிஞ்சப்படும் பொழுது தீவின் கிணறுகள் உவர் நீராக மாற அதிகளவில் வாய்ப்புக்கள் உள்ளது.

> **தற்போது பிரேரிக்கப்பட்டுள்ள கனிம மணல் அகழ்வினை மன்னார் தீவில் மேற்கொள்ள எத்தனிக்கும் பொழுது இத்தீவில் வாழ்கின்ற மக்களின் நிலைத்திருப்பு கேள்விக்குறி யாகும். கடல் நீரினைத் தீவினுள் புக விடாமல் தடுக்கின்ற கட்டமைப்பாகக் கரையோரங்களில் காணப்படுகின்ற கண்டல் தாவரங்கள் காணப்படுகின்றன. மணல் அகழ்வின் காரணமாக கடற்கரையோர, கண்டல் தாவரங்கள் அகற்றப்படும் போது கடல் நீர் தீவின் தரைப்பகுதியை நோக்கி நகரத் தொடங்கும்.**

தற்போது பிரேரிக்கப்பட்டுள்ள கனிம மணல் அகழ்வினை மன்னார் தீவில் மேற்கொள்ள எத்தனிக்கும் பொழுது இத்தீவில் வாழ்கின்ற மக்களின் நிலைத்திருப்பு கேள்விக் குறியாகும். கடல் நீரினைத் தீவினுள் புக விடாமல் தடுக்கின்ற கட்டமைப்பாக கரையோரங்களில் காணப்படுகின்ற கண்டல் தாவரங்கள் காணப்படுகின்றன. மணல் அகழ்வின் காரணமாக கடற்கரையோர கண்டல் தாவரங்கள் அகற்றப்படும் போது கடல் நீர் தீவின் தரைப்பகுதியை நோக்கி நகரத் தொடங்கும். இவ்வாறு உள்வரும் கடல் நீர் மிக வேகமாகக் கிணறுகளில் உள்ள நன்னீரை உவராக மாற்றும்.

இந்த அகழ்வு நடவடிக்கையினை எதிர்த்து சிவில் சமூக அமைப்புக்கள் எதிர்ப்பு நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்ற பொழுதும் இந்த நடவடிக்கையினைக் கைவிடுவதாக இதுவரையில் திறந்த அறிக்கைகள் எதுவுமே அரசினால் வெளியிடப் படாதமை வருத்தத்திற்குரியதே. மணல் அகழ்வு நடவடிக்கைகள் எந்த நேரத்திலும் மீண்டும் ஆரம்பிக்கப் படலாம் என்றே தோன்றுகின்றது. இலங்கையில் தற்போது காணப்படு கின்ற பொருளாதார மந்த நிலையினை கருத்திற் கொண்டு பார்க்கும் பொழுது வெளிநாட்டு முதலீடுகளை ஊக்குவிக்கும் முகமாக ஏராளமான விதிமுறைத் தளர்வுகளை ஏற்படுத்தி வருகின்றமை காரணமாக, மணல் அகழ்வினை மேற்கொள்ளும் பொழுது பின்பற்ற வேண்டிய அடிப்படையான தரங்கள், கட்டுப்பாடுகள் போன்றவை கூட பின்பற்றப்படாமல் போக வாய்ப்புள்ளது. இதன் காரணமாக மக்களின் இருப்பும், இயற்கையின் சமநிலை குலைவும் ஏற்பட வாய்ப்புகள் உள்ளது. ■

# காலம் பதித்துச் சென்ற காலடி
## நந்தினி சேவியர் குறித்த மனப்பதிவு

சி.ரமேஷ்



நாவல் முயற்சியிலும் தன்னை ஈடுபடுத்திக் கொண்டவர் நந்தினிசேவியர். இவருடைய 'மேகங்கள்' என்ற நாவல் ஈழநாடு பத்திரிகையில் 36 வாரங்கள் வெளிவந்தது. நந்தினி சேவியரிடம் இருந்த இதன் பிரதி அழிவடைந்த நிலையில் இலங்கை ஆவணக் காப்பகத்தில் இப்பிரதிகளைக் கண்டெடுக்கும் முயற்சியில் ஈடுபட்டு ஒரு இலக்கிய நண்பரினால் தன் கையை சுட்டுக் கொண்டார்.

1976 இல் எழுதப்பட்ட இவரின் பிறிதொரு நாவலான 'கடற்கரையில் தென்னை மரங்களும் நிற்கின்றன' என்ற நாவல் சிந்தாமணிக் காரியாலயத்தில் பிரசுரத்துக்காக ஒப்படைக்கப்பட்டது. இந்நிலையில் அப்பத்திரிகை நிறுவனம் நிறுத்தப்பட்டமையால் அதனையும் பெறமுடியாமல் போனது துரதிர்ஷ்டமே. 1974 இல் பேராதனைப் பல்கலைக்கழகம் தனது 50ஆவது ஆண்டு நிறைவையொட்டி நடாத்திய சிறுகதைப் போட்டியில் இவர் எழுதிய 'ஒரு வயது போன மனிதரின் வாரிசுகள்' என்ற குறுநாவல் முதற் பரிசினைப் பெற்றுக்கொண்டது. தமது வாழ்வில் நிகழ்ந்த சம்பவங்களைப் பின்னணியாகக் கொண்டு இந்நாவல் எழுதப்பட்டது. இந்நாவல் எங்குமே பிரசுரமாகாமல் தொலைந்து போனது தமிழ் இலக்கியத்திற்குப் பேரிழப்பென்றே கூறலாம்.

1974 இல் பூம்பொழில் சஞ்சிகையில் பிரசுரமான 'தெளிவு பிறக்கிறது' என்ற குறுநாவலும் 1987 இல் ஒப்பிரேஸன் லிபரேஸன் நடவடிக்கையில் அழிந்து போனதும் தமிழரின் சாபக்கேடுகளில் ஒன்றாகும். 1987 இல் நடந்த ஒப்பிரேஸன் லிபரேஸன் நடவடிக்கை மக்கள் மனங்களில் மட்டுமல்ல நந்தினி சேவியரின் மனத்திலும் ஆழப்பதிந்து தீராத வடுவை ஏற்படுத்தியது. இது குறித்த பதிவொன்றை 1987 ஈழமுரசு பத்திரிகையில் எழுதினார். அதுவே 'வல்லையில் இருந்து வல்லிபுரம் வரை' என்ற கள ஆய்விற்கான கட்டுரையாக விரிந்தது.

'தமிழ் இனி' 2000 மாநாட்டில் நந்தினி சேவியரால் வாசிக்கப்பட்ட "இருபதாம் நூற்றாண்டில் ஈழத்து மார்க்சிய இலக்கியம்" என்ற கட்டுரை இன்றளவும் பேசப்படுகின்ற கட்டுரையாக உள்ளது. ஈழத்து இலக்கியங்களை மார்க்சிய வழி நின்று நோக்கும் இக்கட்டுரை ஈழத் திலக்கியங்கள் சிலவற்றை மீள்வாசிப்புக்கும் உட்படுத்துகிறது.

2006 ஆம் ஆண்டில் 'ஈழத்து இலக்கியங்களில் பரிசோதனை முயற்சிகள்' என்ற தலைப்பில் எழுதப்பட்ட கட்டுரையானது இலங்கையில் சிறுகதை, கவிதை முதலானவற்றில் செய்யப்பட்ட வடிவ, உள்ளடக்கரீதியான பரிசோதனை முயற்சிகளைப் பேசுகிறது. இவர் ஜெயகாந்தன் குறித்து எழுதிய 'புதுமைப்பித்தனை மீறிய கதை சொல்லும் இலாவகம்' என்ற கட்டுரை ஜெயகாந்தனின் விளிம்பு நிலை மக்கள் தொடர்பான படைப்புக்களை புதுமைப்பித்தனின் படைப்புக்களுடன் ஒப்பிட்டு ஆராய்கிறது.

சிறுகதை, கவிதை முதலான கட்டுரைகளை எழுதிய நந்தினி சேவியர் 2012 ஆம் ஆண்டு மாலைமுரசு பத்திரிகையில் டானியல் அன்ரனி, சசி கிருஷ்ணமூர்த்தி, வ.அ.இராசரத்தினம், சி.பற்குணம் முதலான இலக்கிய ஆளுமைகள் குறித்தும் விரிவாக எழுதினார். இவர்கள் யாவரும் நந்தினி சேவியருடன் இறக்கும் வரைக்கும் தொடர்பை பேணியவர்கள் ஆவார். இவர்களுள் சி.பற்குணம் இவரோடு திருகோணமலையில் ஒன்றாகப் பணியாற்றியவர் ஆவார்.

நந்தினி சேவியர் 'சுட்டுவிழி' சஞ்சிகையில் எழுதிய 'தெரிந்தும் தெரியாதவையும்' என்ற தொடர் கட்டுரை இலக்கியத்தின சீர்மையற்ற பக்கங்களையும் இலக்கியவாதிகளின் போலி முகங்களையும் வாசகருக்கு அம்பலப்படுத்தின. பொதுவெளியில் இடம்பெற்ற அநாகரிகமான நடத்தைவாத முறைகளை எடுத்துக்காட்டுகின்ற இக்கட்டுரை வ.தேவகாயம் என்ற பெயரில் நந்தினி சேவியரால் எழுதப்பட்டது. முற்போக்கு அணியினரை எதிர்த்தும் மறுத்தும் இவரால் எழுதப்பட்ட 'இலக்கிய சஞ்சிகைகளும் சர்ஜைகளும்' கட்டுரை இலக்கியத்தின் மீது இவர் கொண்ட சமூக அக்கறையை எடுத்துக் காட்டுகிறது. முற்போக்குவாதிகளின் தார்மீகப் பொறுப்பற்ற இலக்கிய வெளிப்பாடுகளைத் தோலுரித்துக்காட்டும் கட்டுரையாக இக்கட்டுரை அமைகிறது.

'சுட்டுவிழி' இறுதி இதழில் தமிழ்கவியின் 'இனி வானம் வெளிச்சிரும்' நாவலுக்கான விமர்சனத்தை தாவீது கிறிஸ்ரோ என்ற பெயரில் எழுதினார். வன்னி மாவட்டத்தில் எழுந்த நாவல்களில் தமிழ்க் கவி எழுதிய நாவல் பெறும் முக்கியத்துவத்தை இக்கட்டுரை சுட்டி நிற்கிறது. வன்னியில் இருந்து வெளிவந்த இந்நாவல் இற்றைவரையும் பலரால் கவனிக்கப்படவில்லை என்பதையும் இத்தருணத்தில் நினைவு கூருகிறேன்.

வடமாகாணம் பண்பாட்டு அலுவல்கள் திணைக்களத்தின் சார்பில் 2007 ஆம் ஆண்டு வவுனியாவில் இலக்கிய விழாவொன்று நடைபெற்றது. அவ்விழாவில் வாசித்தறியப்பட்ட கட்டுரைகளை தொகுத்து நந்தினிசேவியரால் வெளியிடப்பட்ட நூலே "அண்மைக் கால நவீன இலக்கியப் போக்குகள்". இந்நூல் வவுனியா மாவட்டம், வன்னிப் பிராந்தியம், யாழ்ப்பாண மாவட்டம், கிளிநொச்சி மாவட்டம், மன்னார் மாவட்டம் முதலான பகுதிகளில் இடம் பெற்ற அண்மைக்கால நவீன இலக்கியப் போக்குகளை (2007 வரையான இலக்கியப் போக்குகளை)ஆராயும் கட்டுரைகளைத் தாங்கி வெளிவந்த நூலாகக் காணப்படுகிறது.

முகப்புத்தகத்தில் ஈழத்துச்சிறுகதைகள் குறித்து இவரெழுதிய பத்தி எழுத்துக்கள் நந்தினி சேவியர் பிடித்த சிறுகதை என்ற தலைப்பில் நூலாக வெளிவந்தது. இந்நூலில் ஈழத்து சிறுகதை எழுத்தாளர்கள் 200 பேரின் தகவல்கள் உள்ளடங்கப்பட்டுள்ளன. சிறுகதையாசிரியர் 400பேர் குறித்து இவரெழுதிய ஏனைய குறிப்புக்கள் தொகுக்கப்படா நிலையிலேயே உள்ளன. அவை தொகுக்கப்படும் பட்சத்தில் ஈழத்து சிறுகதை உலகில் நாம் அறியாத, பார்க்கத் தவறிய பல விடயங்களை அறிந்து கொள்ளலாம்.

விரிந்த வாசிப்பு அனுபவமும் நிறைந்த மனிதாபிமானமும் கொண்ட நந்தினி சேவியர் கவிதைகளையும் எழுதியவர். வாகை இதழில் வெளிவந்த நினைவு கூர்வோம் கவிதை சாதியத்தால் நிந்திக்கப்படுபவரின் வாழ்வை எடுத்துரைக்கிறது. காலாகாலமாக நியதிகளை வகுத்து மக்களை அடக்கி, ஒடுக்கி வாழும் ஜீவகாருணியமற்ற மனிதர்களின் ஈனச் செயல்களைக் காட்சிப்படுத்தும் இக்கவிதை சாதியத்துக்கு எதிராகப் போர்க்கொடி தூக்கிய மக்களின் வாழ்க்கையையும் அவர்களுடைய அகிம்சாவழிப் போராட்டத்தையும் வெளி உலகுக்கு வெளிச்சம் போட்டுக் காட்டுகிறது.

மனிதனாக வாழ்ந்து இயற்கையை நேசித்த நந்தினி சேவியர் அதுபோல மானிடத்தையும் மனித நேயத்தையும் நேசித்தவர். இருக்கும் வரை செம்மையாக வாழ்ந்து மற்றவர் வாழ்வில் செழிப்பையூட்டிய நந்தினி சேவியர் 17.09.2021 அன்று இவ்வுலக வாழ்வை நீத்தார். மண்ணை விட்டு அவர் பூதவுடல் நீங்கினாலும் அவரது படைப்புக்கள் சாகாவரம் பெற்றவை. ■

# என்ன உலகமடா பரமானந்தா 23

தமிழ்க்கவி

“மூக்காலம் காகம் முழுகிக் குளிச்சாலும் வெள்ளைக் கொக்காகாது” நீ எவளவுதான் உக்கிலிட்டுப் பாத்தாலும் வெள்ளைக்காரனா மாற முடியாது ஏனெண்டா தோல் காட்டிக் குடுத்திருமடா நீ ஆரெண்டு. இப்பத்தயில் பொண்டுகளும் வரவர தங்கள ஒரு சினிமா ஸ்ரார் எண்டுதான் நெச்சுக் கொண்டு திரியினமடா.

நாகரிகம் வளர வளர மனிசன் நெருப்பைக் கண்டு பிடிச்சான். மின்சாரத்தக் கண்டுபிடிச்சான். இன்னும் என்னவோ சொல்லுவினமே சக்கரத்தை கண்டு பிடிச்சான் எண்டு. இதெல்லாம் மனிசனக் கொஞ்சம் வசதியா வாழ வச்சிருக்குத்தான் இல்லையெண்டு சொல்லேல்ல. அதென்ன இயற்கைய மீறின விசயமே கிடையாது. ஆனாப் பொடியா இப்ப எங்கட சனம் செய்யிற மோசமான வேலையளால வாற சந்ததிக்கு நக்கிற அளவில தான் தண்ணி கிடைக்கப் போகுதாம் எண்டு எங்கட வேலுப்பிள்ளைக் கிழவன் சொல்லுதடா.

கிழவனுக்கும் இப்பயிப்ப வாக்கு மாறீட்டுதாம் எண்டு பேரன்காரன் சொல்லுறானடா. அந்த பேரனுக்கே இப்ப எண்பத்தினாலு வயசாகிட்டுதாம். அப்ப வேலுப்பிள்ளையருக்கு என்ன வயசிருக்கும். நீ உதைச் சொல்லுறா எங்கட உருக்குமணியக்கா இன்னும் ஊசாடித்திரியிறாவடா... மனிசிக்கும் இப்ப ஞாய மான வயசாச்சே! அந்த நாளையில. யப்பான்காரன் குண்டு போட வரக்க தாங்களெல்லாம் வெளிக் குளத்துவானுக்க கிடங்கு வெட்டிப் போட்டு அதுக்க ஊரே போய்க் கிடந்ததாம் எண்டு சொல்லுவா. பின்ன நாங்கள் சின்னப் பிள்ளையளா இருக்கயுக்க எங்கட எயாப் போட்டுக்க வந்து தங்கியிருந்த காப்பிலிக் காறங்கள் ஊருக்க ரோந்து வர தங்கள, பேத்திக்கிழவி வீட்டுக்க போட்டு பூட்டினவக்கிறதாம் எண்டு சொல்லுவா.

> **எனக்கு முன்னை யாழ்ப்பாணம் போனா உடன எங்க யாவது ஓடோணும் போல கிடக்குமடா - வளவுக்கயே குசினியச் சுத்தி ஒரு வேலி. கிணத்தடிய சுத்தி ஒரு வேலி. வளவைச் சுத்தி வேலி பிறகு அதுக்கயே தோட்டத்தை சுத்தி ஒரு வேலி.அட கடவுளே யெண்டு வளவை விட்டு வெளிய பாஞ்சா ஒழுங் கையளும் ரெண்டு பக்கம் வேலி உயரமா நிக்கும். எங்கட திண்ணையில் இருந்து பாத்தா கண் ணுக்கு எட்டின தூரம் வரைபச்சைப்பசேலெண்டு தெரியும் இது வன்னியடா.**

அவா காணாத நாகரீகமே இப்பத்தயில் பெட் டையள் பெடியள் காட்டப் போகினம் ஆச்சி சொல்லுவா தாங்கள் குமரிலயே ரவுக்கை போட்டதில்லையாம்.

இப்ப செல்வராசாட பெடிச்சி எங்கயோ கொழும்புப்பக்கம் வேலை செய்யிறாளாம். இடைசுகம் ஊருக்க வரக்க கட்டைக் கழிசானும் மேல ஒரு கையில்லாத சட்டையும் போட்டுக் கொண்டு திரிய அவளுக்குப் பின்னால எங்கட பெடியள் திரிய, பெடியளத் தடுக்க பிறகால தேப்பன் திரிய படு முசுப்பாத் திதானடா. அப்பதான் எங்கட கிழவி சொல்லும் ‘நாங்க ரவுக்கை போடாமத் திரியக்கயும் இப்பிடி பொடித் தரவ ழியள் பிறகை திரியேல்ல. இதென்னடியாத்தை காஞ்ச மாடு கம்பில விழுந்த மாதிரிப் பொடியள் உந்த மாதிரி அலையிறாங்கள்.’ எண்டு. எனக்கு பாலச்சந்திரன்ர ஒரு கதை நெப்புக்கு வருதடா - பெட் டையள் வயசுக்கு வர வேலிக்கு ரெண்டு மட்டை கிடுகு உயரும். வேலி உயர பெடியளின்ர சைக்கிள் சீற் உயரும். சைக்கிள் சீற் உயர பெடியளின்ர தலை உயரும். அது ஒரு காலமெடா பொம்பிளப் பிள்ளையள் வேலிக்க கிடந்த காலம்.

எனக்கு முன்னை யாழ்ப்பாணம் போனா உடன எங்கயாவது ஓடோணும் போல கிடக்குமடா - வளவுக்கயே குசினியச் சுத்தி ஒரு வேலி. கிணத்தடியச் சுத்தி ஒரு வேலி. வளவைச் சுத்தி வேலி. பிறகு அதுக்கயே தோட்டத்தை சுத்தி ஒரு வேலி. அடக் கடவுளேயெண்டு வளவை விட்டு வெளிய பாஞ்சா ஒழுங்கையளும் ரெண்டு பக்கம் வேலி உயரமா நிக்கும். எங்கட திண்ணையில் இருந்து பாத்தாக் கண்ணுக்கு எட்டின தூரம் வரை பச்சைப் பசேலெண்டு தெரியும் இது வன்னியடா. கதையோட நான் சொல்ல வந்ததை விட்டிட்டு எங்கயோ போட்டன் பார்.

பின்ன நாகரீகம் முத்திப் போச்சுக் கண்டியோ. பெட்டையள் முன்பக்கத்தால தூக்கிவிட்டு பின் பக்கத்தால வால் மாதிரி தொங்கவிட்டு, கையில ஒரு துண்டை வெட்டி, முதுகில முக்கால் ஏக்கர் வெளியாக்கி, காத்தாட, பாட்டு வருதடா ஆத்தாடி பாவாடை காத்தாட....அத்தானின் மனசிங்க சேர்ந்தாட....பழைய பாட்டடா சிவாசிகணேசன் பாடினதடா...என்ன சிவாசி பாடேல்லயோ எடேய் நான் என்ர கண்ணால பார்த்ததெல்லாம் பொய்யெண்ணப் போறியோ. எட சவுந்திரராசனை ஆர்கண்ட... சிவாசி பாடினதைத்தான் நான் கண்டன் விடு கதைய கிரந்தம் பேசாதை.

“காவோலை விழக் குருத்தோலை சிரிச்சுதாம்” ஹிஹி... தம்பி உங்கட காதல் கலியாணம் எல்லாம் எங்களுக்கும் விளங்கும். எதையெண்டாலும் மனமாச் செய்யிறியளோ, அண்டண்டைக்கு வாழ்ந்தாப் போதும். உன்ர பூட்டன் நட்ட மாவில் நீ பழந்தின்னிறாய். நீ நட்ட மரமேதும் கிடக்கோ சொல்லு. கேட்டா எங்கணை நிலங்கிடக்கு எண்ணப் போறாய்.

வாழத் தெரியாத மக்கனுகளுக்கு என்ன கதைய்ச் சொல்லுற? ஙா... வன்னி முழுக்க எத்தின குளங் கிடக்கு. எத்தின வாய்க்கால்கரை இருக்கு. எத்தினை புறம்போக்கு நிலங்களிருக்கு ஒரு இடத்தை வளைச்சுப் போடத் துப்பில்ல. பேசவாறாய்.. போய்ப் பாரடா முழிச்சிருக்க முழியத்தோண்டின மாதிரி உந்த இடமெல்லாம் எத்தின மாடிக்கட்டடங்கள் எழும்பியிருக்கெண்டு. உதெல்லாம் ஒரு கதையோடா, முதல் இடத்தைப் பிடியடா. பிறகு வாறவங்கள சமாளிக்க சொல்லியே தெரியோணும். நான் உது எண்பத்து நாலிலேயே குடியிருந்த இடந்தான் எண்டு ஒரு போடு போட்டாப் போதுமடா.

போடா பேயா குளமெண்டிருந்தாத் தண்ணி வருந்தானேடா. பத்து டிப்பர் மண்ணைக் கொட்டினாத் தண்ணி நிமிருது. மணல் ஆருக்கடா தட்டுப்பாடு? அங்கின சின்னச் சின்ன கட்டடங் கட்டறவைக்குத் தான்ரா தட்டுப்பாடு. பேசாம கள்ளமணல் ஏலம் போடக்க போனியெண்டா ஒரு இருவது டிப்பர் மணலையும் ஒண்டாத் தீத்துப் போட்டு அதிலயே வச்சுக் குடுக்கிறவைக்கு ஒரு கமிசன் வச்சு குடுத்திட்டு மிச்சத்தை கொண்டாடா. ஒவொண்டும் சொல்லிக் குடுக்கோணும். அத்திவாரத்தை ‘ஸ்ரோங்கா’ப் போடடா. நீ உன்னை மட்டும் பார் மற்றவனை ஏன் பாக்கிறாய்? என்ன ஒரு அம்பது நூறு விவசாயியளுக்குத் தண்ணி



குறையப் போகுது. அதால உனக்கென்னடா நீ மூடுற இடத்தில நாலு தென்னம்பிள்ளைய வை ரெண்டு மாமரத்தை வை முடிஞ்சுது கதை. சும்மா ஆடைமாத்திறது மட்டும் கலாச்சார வளர்ச்சி எண்டு நெச்சியோ நீ முட்டாள். புதிசு புதுசா திட்டம் போட்டு சொத்துகளை பெருக்கத் தெரிய வேணுமடா வேலுப்பிள்ளைக்கிழவன் நாலு விதமாக் கதைக்கத்தான் செய்யும். அதுக்கு தெரியுமே இப்ப காடுகளே இல்லாமப் போச்செண்டு. எடேய் “மூக்கு மயிரப் பிடுங்கித் தும்மினா... ஆள் பாரம் குறையிறதோடா” தண்ணி இல்லாமப்போனா... அதையும்தான் இப்ப இறக்குமதி செய்யிறாங்கள்தானே. எட அது அரசாங்கத்தின்ர கவலையடா அதை நீ படாதை.

எட புதிசா மரத்தை நடு மரத்தை நடு எண்டா... என்ன விளையாட்டே நாளைக்கு பிள்ளை குட்டியளுக்கு வீடு கட்டேக்க நிலையம் தென்னந்தோப்புக்க வந்திட்டா... பிறகு கூலிகுடுத்துக் காய்க்கிற தென்னையெண்டாலும் வெட்டிப்போட வேணும். பங்க சங்கரப்பிள்ளையரப் பாக்கேல்லயே பன்னெண்டு பனை பைக்கோவ வச்சு தள்ளி வேலிக்க விட்டிருக்கிறார். மூத்தவளுக்கு வீடு கட்டவாம். என்ன மூத்தவளோ ஹஹ... அவள் யூ கே சிட்டிசனாம். வந்தாப்போனா தன்ர வீடெண்டு ஒண்டு இருக்கோணு மெல்லே. கட்டி விட்டா கிடக்கிது. எடேய்க் உது நல்ல கதையாக்கிடக்கு. அதென்னடா சனாதிபதி குடும்பத்துக்கு ஒரு சட்டம் சனத்துக்கு ஒரு சட்டமே? அமெரிக்கா குடிமகன் இலங்கையில வீடு கட்ட ஒரு பினாமிய வச்சிருந்தா தப்பே. இதென்ன கதையெடா குருக்கள் குசுவினா குத்தமில்லையே. “அரசன் எவ்வழி குடிகளும் அவ்வழி” விட்டுத்தள்ளடா. ■

---

# மாதவம்

(07 ஆம் பக்கம் பார்க்க)

அணைப்பதாக அறிந்தவுடன் பரமேஸ்வரியும் நானும் இரணைப்பாலையில் மாதவம் இடம்பெயர்ந்து இருந்த இடத்திற்குப்போய் வாங்கி வந்த அட்சரக்கூட்டைக் கையில் எடுத்துக்கொண்டு

“வித்தகியைக் கூட்டிக்கொண்டு வா” என இமையவனிடம் கூறினேன். அவன் அசையாது நின்றான்.

“வித்தகி இயக்கத்துக்குப் போனபிறகு பரமேஸ்வரி வித்தகியைக் காணேலை. பரமேஸ்வரி மண்ணுக்குள்ள புதையிறதுக்கிடேல வித்தகியைக் கொண்டு வா” என்றேன். அவன் அசையவேயில்லை. பரமேஸ்வரியை மண்ணில் வளர்த்திவிட்டு இமையவனின் சேட்டைப்பிடித்து

“கொண்டுவாடா வித்தகியை. நீதானே அவளின்ர நகையளக் கொண்டு வந்து தந்தனி. என்ர ஒரே பொம்பிளப்பிள்ள கடசியாத் தாயைப் பாக்கோணும்” என்று அவனின் கைகளைப்பிடித்து அழுதேன். கால்களைப் பிடித்துக் கெஞ்சினேன். அவன் அசையாது நிற்க அவனின் கன்னத்தில் ஓங்கி அறைந்தேன். அருகில் நின்றவன் என்னைப்பிடித்துச் சொன்னான்

“இப்ப நிலமை மோசம். பொடிச்சி எங்க நிக்குதெண்டு தெரியாது”

“என்ன பூழலுக்கு வோக்கி வைச்சிருக்கிறான். எல்லாப் போராளிகளுக்கும் அறிவிச்சு பொடிச்சியைக் கூட்டிக்கொண்டு வரலாம் தானே” என சொல்லிக்கொண்டு பரமேஸ்வரியை மொய்த்த இலையான்களைக் கலைத்தேன். கன்ரர் ஒன்று வந்தது இமையவனுக்குக் கிட்ட நின்றது. அதில் இருந்த மண்வெட்டியை ஒருவன் எடுத்துப் பனைமரத்துக்கு அருகில் குழி வெட்டினான். கன்ரரில் இருந்தவர்கள் குழிக்குள் புதைப்பதற்கு பரமேஸ்வரியைத் தூக்க வந்தார்கள். “தொடக்குடாது பொடியை. வித்தகியைக் கொண்டு வரமாட்டியள், பொடியைத் தூக்க வந்திட்டியள்” எனச் சொல்லிக்கொண்டு பரமேஸ்வரியைத் தூக்கினேன். ஒரு பற்றைக்குள் கிடங்கு வெட்டினேன். அதுக்குள் புதைத்து விட்டு தெருவில் வந்து நின்றேன். கண்கள் வித்தகியைத் தேடியது. ஐந்து நாட்களாய்த் தெருவில் நின்றும் வித்தகியைக் காணமுடியவில்லை. சில பெண்போராளிகளிடம் வித்தகியைக் கேட்க எந்தப் படையணி என்று கேட்டார்கள்

“பிரபாகரன்ர படையணி” என்றேன். கேட்பவர்கள் என்னை புத்திசுயாதீனமற்றவன் போலப் பார்த்தார்கள். நான் மறிக்க நின்று கதைக்காது சிலர் சென்றார்கள். சிலர் தீட்டுப்பட்டவன் மாதிரி என்னை விலத்திவிட்டுச் சென்றார்கள். வித்தகியைப் பற்றி சொல்லாது எந்தப்போராளிகளும் போனால் அவர்களுக்கு அடிக்கவேணும் என நினைத்துக்கொண்டு பச்சை மட்டை வெட்டி மாத்தளன் சந்தியில் ஏழுநாட்கள் நின்றேன். வைத்தியசாலைக்கருகில் குண்டுகள் விழுந்து வெடிப்பதால் எவரும் வீதிக்கு வரவில்லை. வித்தகி வந்தால் எப்படியாவது மாதவம் கொடுத்த விபூதியை அவளின் நெற்றியில் பூசவேண்டும் என நினைத்துக் கொண்டு படுத்தேன். நித்திரை வரவில்லை. இமையவனுக்கு அடித்ததை யோசித்தேன். மனைவியின் கவலையில் அடித்ததை நினைத்து வருந்தினேன். விடிந்ததும் பரமேஸ்வரியைப் புதைத்த இடத்தில் ஒரு பூவரசங்கதிகாலை அடையாளமாக ஊன்ற வேண்டும் என நினைத்துக் கொண்டு கண்களை மூடினேன். திடீரெனத் துப்பாக்கி வேட்டுக்கள் கேட்டன. ஷெல்களும் வெடித்தன. தறப்பாளை ரவைகள் புட்டன. கிழம்பும் புளுதியில் கலந்த கந்தக மணம் நாசுக்குள் அடைந்தது. உமிழும் சளியில் கந்தகம் ஒட்டியது.


விடிந்ததும் இராணுவம் சுற்றிவளைத்ததை உணர்ந்தேன். எழும்பி இருந்து தெருவைப் பார்த்தேன். இராணுவத்தினரில் தலைகள் தெரிந்தன. தறப்பாள் கொட்டில்களில் இருந்து சனங்கள் போய்க் கொண்டிருந்தார்கள். கடற்கரைகளிலும் மாத்தளன் வெளிகளிலும் பதுங்குகுழிகள் அமைத்து அதற்குள் இருந்த போராளிகளை நினைத்தேன். இமையவன் எத்தனை இராணுவத்தைச் சுட்டிருப்பான் என நினைத்தேன். வித்தகி நெஞ்சில் வெடிமருந்தைக் கட்டியிருப்பாளா என நினைக்கும் போது கவலை தொண்டையை அடைத்தது.

மாதவம் ஓதிக்கொடுத்த விபூதியையும் அட்சரக்கூட்டையும் இடுப்பில் இருந்து எடுத்தேன். கையில் வைத்துப் பார்த்தேன். புலிச்சீருடையுடன் ஒருவன் என் தறப்பாள் கரைக்கு வந்து கொண்டிருந்தான். அவனின் முதுகில் வெடிமருந்துகள் இருக்கின்றதா? எனப்பார்த்தேன். அவன் கைகளில் துப்பாக்கி இருக்கின்றதா? எனப் பார்த்தேன். எதுவுமே இல்லை. அவனின் வீரமற்ற நடையைப் பார்த்ததும் சீருடையுடன் சரணடையத் தயாராகி வருபவன் போல் தெரிந்தது . அவன் கிட்டவந்ததும் “இமையவன்...” என்றேன்.

திகைத்த என் சொற்களில் பயம் பிசிறியது. பார்த்தான். சிரிப்புத் தொலைந்து அவன் முகம் காய்ந்திருந்தது. சிவந்திருந்த அவனது வலது கன்னத்தைப் பார்த்ததும் அவனுக்கு அடித்த எனது வலக்கையைப்பார்த்தேன். கையில் இருந்த விபூதியும் அட்சரக்கூடும் கீழே விழுந்தது. கட்டியிருந்த சாரத்தைக் கழட்டி இமையவனுக்குக் கொடுக்க நீட்டினேன்.சாரத்தை வாங்க இமையவன் வந்தான். ■

# அவற்றோரன்ன... இவற்றோரன்ன...

# நாடக ஆசிரியரை தேடும் பாத்திரங்கள்



பேராசிரியர் அ.ராமசாமி

தமிழில் கவிதைகளும் கதைகளும் எழுதப்படும் அளவுக்கு நாடகங்கள் எழுதப்படவில்லையே? எழுதப்படும் நாடகங்களும் நிகழ்கால மனிதர்களைப் பாத்திரங்களாக்காமல் கடந்த காலத்திற்குள் நுழைகின்றனவே? தொன்மங்களையும் வரலாற்று நிகழ்வுகளையும் நினைவூட்டும் நாடகப்பனுவல்களே எழுதப்பட்டு மேடையேற்றப்படுகின்றனவே? இதன் பின்னணிகள் என்னவாக இருக்கும் என்ற கேள்வியைப் பல இடங்களில் சந்தித்ததுண்டு. புதுவைப் பல்கலைக்கழக நாடகத் துறையில் பணியாற்றிவிட்டு வெளியேறிய பின்னும் நாடகங்கள் குறித்து எழுதும் நான் இதற்கான பதில்களை உடனடியாகச் சொன்னதில்லை. ஆனால் சொல்ல வேண்டிய கேள்விகள் இவை என்பதை மறக்கவில்லை.

**தேவையும் தேவையின்மையும்**

ஒரு பொருளின் உற்பத்தி என்பது தேவையை நோக்கியே நடக்கும். தமிழர்களின் உணவுப் பழக்கங்கள் அரிசியை மையமிட்டதாக இருப்பதால், நெல்லைப் பயிரிடுகிறார்கள் அரிசியை அப்படியே சோறாக்கியும், உடைத்துப் புட்டாகவும், மாவாக்கித் தோசை, பணியாரம், இட்லியாகவும் சமைத்துக்கொள்கிறார்கள். அரிசியே தமிழ் உணவுப்பண்டங்களின் கச்சாப்பொருள். மக்காச்சோளம் அதிகம் விளையும் அமெரிக்காவில் அதனைக் கச்சாப்பொருளாக்கி உணவுப்பொருட்கள் தயாராகின்றன. ஐரோப்பியர்கள் அப்பிளை அதிகம் பயன்படுத்துவதின் பின்னணியிலும் உற்பத்திப் பெருக்கமே காரணம்.

தமிழ்ச்சொற்கள் தமிழ் இலக்கியத்தின் கச்சாப் பொருள். அதன் வழியாக உணர்வுகளைக் கடத்துவது எளிதெனக் கருதிய தொடக்ககால நம்பிக்கை இன்னும் தொடர்வதால் கவிதைகள் தினம்தினம் எழுதிவிக்கப்படுகின்றன. உணர்வுகள் நிரம்பிய மனிதர்களின் சாயலில் கதாமாந்தர்களை உருவாக்கமுடியும் என்பதால் கதைகளும் எழுதப்படுகின்றன. கடந்தகால, சமகால மனிதர்களின் சாயலோடு கூடிய மனிதர்களை வாசகர்களும் வாசிக்கிறார்கள். நாடகம் முரணை அடிப்படையாகக் கொண்ட வடிவம். தமிழர்களுக்கு அவர்களின் அடிப்படையான முரண் எது என்பதைத் தீர்மானிப்பதில் பெருங்குழப்பங்கள் நீடிக்கின்றன.

அகவாழ்க்கையையும் புறநிலை நடப்பையும் தீர்மானிக்கும் பாலியல், சமய நம்பிக்கை, சாதி ஈடுபாடு, அரசியலில் தெளிவின்மை போன்றவற்றில் தீர்மானமான நிலைப்பாடு கொண்ட தமிழர்கள் குறைவு. உளவியல், சமூகவியல் காரணங்கள் குழப்பங்களோடு நீடிப்பதால் அதனை உள்வாங்கி எழுதுவதும் இல்லை. எழுதினாலும் அவற்றை மேடையேற்றும் முனைப்புக்கொண்ட குழுக்களும் இல்லை. பொதுச்சமூகம் தரும் நெருக்கடிகளைச் சந்திக்கும் நாடகக்குழுக்கள் தங்களின் இருப்பைத் தக்கவைக்கவே பெரும்பாடுபடுகின்றன. ஆகத் தமிழர்கள் - உலகம் முழுவதிலும் தமிழர்களுக்கு நாடகவடிவமும், நாடக அரங்கேற்றங்களும் தேவைப்படவில்லை எனவே நாடகங்கள் எழுதப்படவில்லை.

மரணத்தை நோக்கிநகரும் முடிவு பெரும்பாலும் துன்பியல் (Tragedy) எனக் கருதப்படுவது செவ்வியல் நாடகங்களின் வரையறை. அரசர்களும் பெருந்தனக்காரர்களும் விமரிசனத்திற்கப்பாற்பட்டவர்கள் என்ற நிலைப்பாட்டோடு தொடர்புகொண்ட முடிவு அது. அவ்வரையறையை நமது காலம் ஏற்பதில்லை. தனிமனிதர்களின் மரணங்களும் கூடக் கொண்டாடப்படுவனவாக நினைக்கப்படுகின்றன. வீரம், தியாகம், கர்மா, வினைப்பயன் போன்ற காரணங்களால் மரணம் விவாதிக்கப்பட்டு முடித்து வைக்கப்படுகின்றன.

நமது காலத்தை நவீனத்துவமாகவோ, பின்-நவீனத்துவமாகவோ வரையறை செய்தாலும் ஆட்சியாளர்களின் மரணங்கள் கொண்டாட்டத்திற்குரியனவாகவே அர்த்தமாக்கப்படும் அதனால் இன்பியலாகவே (Comedy) ஆகக்கூடியன. சில நேரங்களில் அதிகாரப் போட்டியில் ஈடுபடுபவர்களின் தோல்விகள் துன்பியலாகக் கணிக்கக் கூடியன. தொடர்ச்சியாகத் தோற்கும் தலைவர்கள் இந்தியாவிலும் இலங்கையிலும் உலக அளவிலும் இருக்கவே செய்கிறார்கள். அவர்களைக் கதாபாத்திரங்களாக்கிக் காவியங்களை எழுதுவது தமிழ் மரபு மனத்திற்கு உரியது. அவர்களை முன்வைத்து விவாதிப்பது - முரண்நிலையைத் தோற்றுவிப்பதைத் தமிழ் எழுத்து மனமும்கூடத் தவிர்க்கவே விரும்புகிறது.

**பிரதியாக்கப்பிரச்சினை- ஓர் எடுத்துக்காட்டு**

சமகாலப் பெரும் நிகழ்வொன்றைப் பிரதியாக்கம் செய்யாமல் தவிர்த்ததை இங்கே நினைவூட்டிக்கொள்ளலாம். தமிழகத்தின் முதல்வராக இருந்த ஜெ.ஜெயலலிதாவின் மரணம் இயல்பானதா? நோயின் தீவிரத்தை அறியாது, உணவுக்கட்டுப்பாட்டை மேற்கொள்ளாமல் கை விட்டதால் ஏற்பட்ட தற்கொலையா? உடனிருந்தவர்களாலோ, வெளியிலிருந்தவர்களாலோ திட்டமிடப்பட்டுத் தீட்டப்பட்ட சதிகளின் முடிச்சுகளால் தடுக்கப்பட்ட குறைவாழ்வா? எனத் தீர்மானகரமாகச் சொல்ல முடியாத நிலையில் அத்துன்பியல் நாடகத்தின் தொடக்கப்புள்ளி எதுவென யாராலும் சொல்ல முடியவில்லை. தொடக்கம் தெரியாததால் திருப்பங்கள் மட்டுமே காட்சிகளை விரிக்கின்றன.

போயஸ் தோட்டம், அப்பல்லோ மருத்துவமனை, மெரினா கடற்கரை என்னும் முப்பெருங்களன்(Space)களில் நிகழ்த்தப்பட்டு மூவங்க (Three Act) நாடகத்தின் கச்சிதத்தோடு முடிந்திருந்தால், நல்திறக்கட்டமைப்புக் கொண்ட நடப்பியல் நாடகமாக ஆகியிருக்கும். ஆனால் சென்னையின் கவர்னர் மாளிகை, கூவத்தூர் பங்களா, பெங்களூரின் பரப்பன அக்கிரஹாரச் சிறை எனச்சுழன்றடிக்கும் நிகழ்வெளிகளால் மூவங்க நாடகத்தின் தன்மையைத் தாண்டி அபத்த அரங்கமாகவும் (Theatre of Absurd), குரூர அரங்காகவும் (Theatre of Cruelty), காவியபாணி அழகியலோடும் (Epic Theatre) புதுப்புது வடிவங்களில் வெளிப்பட்டுக் கொண்டே இருந்தன. அதனால் ஒற்றை நாடகம் என்ற நிலையைத் தாண்டி பலநாடகங்களின் தொகுப்பாக மாறிப்போனது.



ஆட்சித்தலைவராக இருந்த ஜெ.ஜெயலலிதாவின் மரணத்திற்குப் பிந்திய வாழ்க்கையில் சென்னையும் அதனைத் தலைநகராகக் கொண்ட தமிழகமும், நெருக்கடியின் உச்சத்தை எந்த மாநிலமும் உணராத அளவிற்குச் உணர்ந்தது. ஆனால் உணராதது போல் அமைதியாகவும் இருந்தது. தமிழ் நாட்டை மையமிட்ட இந்த எடுத்துக்காட்டின் இடத்தில் ஈழப்போராட்டத்தின் தனிப்பெரும் தலைவரான வேலுப்பிள்ளை பிரபாகரனின் வாழ்க்கையையும் மரணத்தையும் வைத்தும் நினைத்துக் கொள்ளலாம்.

இப்படியான தொகுப்பை ஒருவிதத்தில் இந்திய/ ஆசியக் கிராமங்களின் (Oriental theatre) அரங்காடல்களின் வடிவமாகக் கொள்ளமுடியும். அரங்காடல் வடிவங்கள் நிறைய உள்ளன. அவற்றில் அரங்கேற்றுவதற்கேற்ற பிரதிகளை எழுதித்தரும் ஆசிரியர்களைத்தான் காணவில்லை. ஆறு கதாபாத்திரங்கள் தேடிய ஆசிரியரை எழுதிய பிராண்டெல்லோ (Six Characters in Search of an Author -Luigi Pirandello) உயிரோடு இருந்தால் பெருந்தொகைகொடுத்து அழைத்து வந்து விடுவார்கள். அவருக்குத் தரவேண்டிய பணமெல்லாம் இப்போது பொருட்டல்ல. பிராண்டெல்லோ இல்லையென்றால், அவரின் பிரதிகளை நகலெழுதிய ஒருவர் கிடைத்தால் கூடப் போதும்.

**அலையும் முரண்பாடுகள்**

நாடகம் எழுத நினைக்கும் ஒருவர் அவர் முன்னே அலையும் சமகாலச் சிக்கல்களை - முரண்களைக் கண்டறியவேண்டும் அதனை எழுதும் முறையாக வாசிக்க வேண்டும். பொது வாழ்க்கையில் இயங்கும் பெரிய பெரிய அமைப்புகள் தனது உறுப்பினர்களைத் திசை திருப்புவதற்காகப் புதிய புதிய உத்திகளைக் கையாள்வதும் உண்டு. தனது தலைமையின் மீது அதிருப்திகள் தோன்றும் போது மாநாடுகளை நடத்துவதும், பாதயாத்திரைகளை மேற்கொள்வதும், உண்ணாவிரதம், மறியல், போராட்டம் என இறங்குவதும் அரசியல் தலைவர்கள் மட்டுமே செய்வன அல்ல.தொழிற்சங்கத் தலைவர்களும் சாதிச் சங்கத் தலைவர்களும் கூட இந்த உத்தியைப் பின்பற்றத்தான் செய்கிறார்கள்.

பொது வெளியில் மட்டும் அல்ல குடும்ப வாழ்க்கையிலும் கூடக் கணவனும் மனைவியும் பிள்ளைகளும் அப்படியான உத்திகளைச் செய்து கொண்டு தான் இருக்கிறார்கள். பெற்றோர்களின் கவனத்தைத் திசைதிருப்பிவிடப் பிள்ளைகளும், பிள்ளைகளை ஏமாற்றப் பெற்றோரும் பின்பற்றும் உத்திகள் சுவாரசியமானவை. அவை பல நேரங்களில் நேர்மறை விளைவுகளை உண்டாக்கக் கூடும். சில நேரங்களில் எதிர்மறை விளைவுகளைத் தரவும் கூடும். தனிநபர்களோ, அமைப்புக்களோ சரியான அர்த்தத்தில் முன் வைக்கும் நிகழ்வுகள் கேள்விக்கு உட்படுத்தப்படுவதில்லை.

ஒருவரை இன்னொருவர் ஏமாற்றுவதற்காக ஒரு காரியத்தைச் செய்யும் போது ‘நாடகம் போடுகிறான்’ என்ற சொல்லால் குறிப்பதை நான் பார்த்திருக்கிறேன். ஒரு கூட்டத்தை மொத்தமாகத் திசை திருப்புவது என்ற நோக்கத்திற்காகச் செய்யப்படும் ஒரு நிகழ்வைக் குறிக்கவும் நாடகம் என்று சொல்லையே விமரிசனச் சொல்லாகப் பயன்படுத்துகிறார்கள். மோசமானது, திசை திருப்புவது, ஏமாற்றுவது, அற்பத்தனமானது என்பதான அர்த்தங்களில் நாடகம் என்ற சொல்லைப் பயன்படுத்தும் விமரிசனங்களின் சாரம், மொத்தத்தில் நம்பகத் தன்மை அற்றது என்பதாக இருக்கிறது. ஆனால் நாடகக் கலையின் நம்பகத்தன்மை அப்படிப்பட்டதல்ல என்பதை உறுதியாகச் சொல்ல முடியும்.

வாழ்க்கையின் உண்மையான பகுதிகளை- சிக்கல்களை- மனப்போக்கை - தவிப்பை மேடையின் சிறிய வெளியில், குறைந்த கால கட்டத்தில் நிகழ்த்திக்காட்டும் கலை நாடகக்கலை. அரங்கத்தில் நிகழும் அக்கலை எல்லாக் கலைகளையும் போல புனைவுகளைக் கொண்டது என்றாலும் மோசடியின் வடிவம் அல்ல. புனைவு வெளி, புனைவுக் காலம், புனைவுக் கதாபாத்திரங்கள் என்ற மூவொருமைகளைக் கொண்டு நாடகம் தான் வாழ்க்கையின் கண்ணாடி என்று நாடகக் கலையின் இலக்கணங்கள் கூறுகின்றன.

**அடிப்படை வாசிப்புகள்**

தமிழர்களின் நாடகம் பற்றிய புரிதல் நேர் எதிரானதாக இருக்கிறது. நாடகம் என்ற சொல்லைப் பயன்படுத்துவது அதன் உண்மையான அர்த்தத்திற்கு எதிராகப் பயன்படுத்துவது வருத்தமான ஒன்று. நாடகக் கலையின் உன்னதப் பெயர்களான சேக்ஸ்பியர், இப்சன், செகாவ், பிராண்டெல்லோ, பெர்னாட்சா , பெர்ட்டோல்ட் பிரெக்ட், ஹெரால்ட் பிண்டர், சாமு வேல் பெக்கட் போன்ற உலக நாடக ஆசிரியர்களைக் கூட விட்டு விடுங்கள். சிறந்த நவீன இந்திய நாடகங்களை எழுதிய கிரிஷ் கர்னாட், விஜய் டெண்டுல்கர், சுரேந்திர வர்மா, இந்திரா பார்த்தசாரதி, பாதல் சர்க்கார், மோகன் ராகேஷ் போன்றோரின் நாடகங்களை வாசித்துப் பார்க்கலாம். கிரிஷ் கர்னாடின் துகளக்கும் இந்திரா பார்த்தசாரதியின் ஔரங்கசீப்பும் வரலாற்றுப் பின்புலத்தில் சமகால இந்திய அரசியலைப் பேசும் நாடகங்கள். பாதல் சர்க்காரின் ஏவம் இந்திரஜித் இந்திய நடுத்தர வர்க்கத்தின் மன அலைச்சல் உளைவுகள். மோகன் ராகேஷின் அதா அதுரே அதன் இன்னொரு மாதிரி.

சந்தையில் தக்காளியோ, வெங்காயமோ கிடைக்கவில்லை என்ற முணுமுணுப்பு கோபமாக மாறி எதிர்ப்பு வடிவம் எடுக்கும்போது பற்றாக்குறை என்ற எதிர்நிகழ்வு முன் நிறுத்தப்படும். பற்றாக்குறையின் விளைவாக ஏற்பட்டது பதற்றம். பதற்றம் கோபத்தைக் குறைத்துவிட்டுத் தேடுதலை மேற்கொள்ளும். தேடுதலின் தொடர்ச்சியாகப் பற்றாக்குறை சரி செய்யப்படக் கூடும். பற்றாக்குறை சரியாகும் போது மனம் கோபத்தையும் குறைத்துக் கொள்ளும் முணுமுணுப்பையும் விட்டுவிடும் என்பது உளவியல்.

தக்காளி, வெங்காயம் மட்டுமல்ல அரிசி, பருப்பு போன்ற அத்தியாவசியப்பொருட்கள் தொடங்கி, எரிவாயு, மின்சாரம் என ஒவ்வொன்றின் விலையேற்றத்தின்போதும் முணுமுணுப்புகள் தோன்றும். அதே நேரத்தில் அவற்றைத் திசைதிருப்ப இன்னொரு பதற்றம் உருவாக்கப்படும். விலையேற்றம் ஒரு பொருட்டல்ல என்று மனத்தைத் தகவமைக்கும் உத்தி சரியாக செயல்பட்டுள்ளது. இதுவும் திட்டமிட்ட நாடகம் தானோ?. நாடகம் எழுத நினைக்கும் வல்லோருக்குப் புல் மட்டுமல்ல எல்லாமும் கச்சாப்பொருள்தான். ■

வேதநாயகம் தபேந்திரன்

# பிள்ளையும் தென்னம்பிள்ளையும்

தென்னம்பிள்ளை. இந்தப் பெயரை வைத்த எமது முன்னோர்கள் உண்மையாகவே திறமைசாலிகள்தான். பெற்றோர் தம் பிள்ளைகளை ஒழுங்காக வளர்த்தால் அவர்கள் வளர்ந்து பெரியவர்களானதும் பெற்றோர்களை ஒழுங்காகப் பார்ப்பார்கள். பராமரிப்பார்கள்.

அது போலத் தென்னைகளை வளர்த்தால் அவையும் வளர்ப்பவர்களை ஒழுங்காகப் பார்க்கும் என்பதைத் தெரிந்து கொண்ட எமது முன்னோர்கள் தென்னம்பிள்ளை என்று பெயர் வைத்துள்ளார்கள் போலும்.

எமது பிரதேசத்தில் நன்கு பயன்தரக் கூடிய ஒரு நீண்ட காலப் பயிர்தான் தென்னை. இதனை நன்கு பராமரித்துப் பயன்பெற்று வாழலாம்.

பிள்ளை வளர்க்கத் தென்னம்பிள்ளைகள் உதவுமென 15 வருடங்களுக்கு முன்பாக 50 தென்னம்பிள்ளைகளை நட்டு நன்கு பராமரித்தேன். இப்போது எனது பிள்ளைகள் வளர்ந்து படிக்கும் காலத்தில் செலவுகள் அதிகம். நான் வளர்த்த தென்னம் பிள்ளைகள் வளர்ந்து நன்றாகப் பயன்



தென்னை மரங்களில் இருந்து விழாத தேங்காய்கள் கொப்பறாவாக மரத்திலிருந்து விழும். அவற்றைச் சேகரித்து வெட்டிச் சீவித் தகர வலைப்பின்னலால் பாதுகாப்பாக மூடிக் காய வைத்தல் வேண்டும். நன்கு காய்ந்த பின்பாக அதனைத் தேங்காய் எண்ணை வடிக்கும் மில்லில் கொடுத்துத் தேங்காய் எண்ணையாக வடித்துச் சமையல் உட்படப் பல தேவைகளுக்குப் பயன்படுத்தலாம்.

தருகின்றன. அதன் வருவாயை எடுத்துக் கொண்டு மேலதிகச் செலவுகளைப் பார்க்கிறேன். பிள்ளைகளும் கல்வியில் திறமையான உயர்வைக் காண்கின்றனர். இது எனது நண்பர் ஒருவரின் கூற்று.

எனக்கு 3 பொம்பிள்ளைப் பிள்ளைகள். அவர்களது எதிர்காலச் சீதனத் தேவைகளுக்காக எனது வளவிலுள்ள 100 தென்னம்பிள்ளைகளது வரும்படியை எடுத்துச் சீட்டுப் பிடிக்கிறேன். அதில் கிடைக்கும் சேமிப்பைக் கொண்டு தங்க நகைகள் ஒவ்வொன்றாகச் செய்கிறேன். இது எனது உறவினர் ஒருவரது அனுபவம்.

உண்மைதான். தென்னை, பூமித் தாய் எமக்குத் தந்த நல்வரம். அதனைப் பயன்படுத்தி எமது முன்னோர்கள் வளமாக வாழ்ந்தார்கள். உடல் ஆரோக்கியத்துடன் நீண்டகாலம் வாழ்ந்து உயர்ந்தார்கள்.

தென்னை மரங்களை நட்டு வளர்ப்பதற்கான விழிப்புணர்வு அதிகம் தேவைப்படுகின்றது.

குடியிருக்கும் வீடு உள்ள இடத்தில் வளரும் தென்னைகள், கூடுதல் பயன்தரும். ஏனெனில் குளிக்கும், கழுவும் தண்ணீரைத் தென்னம்பிள்ளைகளுக்கு விடுவோமாயின் அவை கூடுதல் விளைவைத் தரும். நாளாந்தம் தண்ணீர் போகும் தென்னைகள் கூடுதல் விளைச்சலைத் தரும். ஏனெனில் தென்னைகள் தண்ணீரை அதிகம் எதிர்பார்த்து வாழும் ஒரு பயிரினமாகும்.

ஆகவே நாம் தென்னைகளை எமது வளவுகளில் நட்டால் அவற்றுக்கு நீர்ப்பாசனத்தை ஒழுங்காகச் செய்தால் பயனை அதிகம் பெறலாம். மின்சாரத்தைப் பாவித்து அல்லது மண்ணெண்ணை பாவித்து வளவுகளில் உள்ள தென்னைகளுக்கு நீர்ப்பாசனத்தைச் செய்து வந்தால் மாதாந்தம் ஒரு தென்னம்பாளையை மேலதிகமாகத் தள்ளும். அவ்வாறு வரும் போது வருடத்திற்குப் 12 பாளைகள் பூத்து மேலதிகமாகத் தேங்காய்களைப் பெறலாம். அதன் மூலமாகக் கிடைக்கும் மேலதிக வருவாயைக் கொண்டு நீர்ப்பாசனம் செய்து ஏற்படும் மேலதிக செலவை விடக் கூடுதல் வருவாயைப் பெறலாம்.

தேங்காய்களை விற்றுப் பணம் ஈட்டலாம். உரித்த தேங்காய்களின் மட்டைகள் ஒரு தொகையில் சேர்ந்த பின்பாக ஒவ்வொரு மட்டையையும் ரூபா 3 முதல் நான்கு ரூபாவுக்கு விற்று பணம் உழைக்கலாம். தென்னை மட்டைகளைத் தூசாக்கும் தொழிற்சாலைகளுக்கெனக் கொள்வனவு செய்கின்றனர்.

தென்னை மட்டைகளைக் காய்க்கும் தென்னை மரங்களின் அடியிலிருந்து 8 அடி தூரத்தில் ட வடிவில் வெட்டித் தாழ்ப்பதன் மூலமாகத் தென்னைகளுக்குப் பசளையாக்கலாம். தென்னை மட்டைகளின் பொச்சுப் பகுதி மேலே தெரியக் கூடியதாகத் தாழ்ப்பதன் மூலமாக மழை நீர், நீர்ப்பாசன நீர் அதனுள் ஊறி நிற்கும். தென்னை மட்டை ஒன்று தனது எடையைப் போல 3 மடங்கு தண்ணீரை உறிஞ்சி வைத்துக் கொள்ளும். இந்த நீர்ப் பிடிப்பினுள் தென்னை மரம் தனது வேர்களைப் பரப்பி நீரை உறிஞ்சிக் கொள்ளும். மரம் குளிர்மையாக இருப்பதுடன் நிறைந்த தேங்காய்களையும் தரும்.



நிலத்தில் தாழ்க்கப்பட்ட தென்னை மட்டைகள் உக்கும் போது அது பசளையாகித் தென்னை மரத்தை வளப்படுத்தும்.

தென்னை மரத்தின் ஓலைகளை ஊற வைத்து கிடுகு பின்னி விற்கலாம். அல்லது வேலிகளை அடைக்கலாம். தென்னோலைகளின் அடி மட்டையை வெட்டி விறகாக்கலாம். அல்லது மண்ணில் தாட்டுப் பசளையாக்கலாம்.

அது போலக் காய்ந்து விழுந்த தென்னம்பாளைகளை விறகுக்குப் பயன்படுத்தலாம். அல்லது தென்னை மரத்திற்குப் பசளையாக்கலாம்.

தென்னை மரங்களில் இருந்து விழாத தேங்காய்கள் கொப்பறாவாக மரத்திலிருந்து விழும். அவற்றைச் சேகரித்து வெட்டிச் சீவித் தகர வலைப்பின்னலால் பாதுகாப்பாக மூடிக் காய வைத்தல் வேண்டும். நன்கு காய்ந்த பின்பாக அதனைத் தேங்காய் எண்ணை வடிக்கும் மில்லில் கொடுத்துத் தேங்காய் எண்ணையாக வடித்துச் சமையல் உட்படப் பல தேவைகளுக்குப் பயன்படுத்தலாம்.

வைகாசி, ஆனி மாதங்களில் தேங்காய்களது உற்பத்தி மிக அதிகம். அக்காலத்தில் தேங்காய்களை விற்றுக் காசாக்குவது ஒப்பீட்டளவில் இலாபம் குறைவானது.

அதனால் தேங்காய்களை உடைத்துக் காய வைத்து கொப்பறாவாக்கித் தேங்காய் எண்ணையாக்கி விற்பது இலாபகரமானது. கொப்பறாக்களை மிக மெல்லியதாகச் சீவித் தண்ணீரில் கழுவிய பின்பாக ஒரு வாரம் கடுமையான வெய்யிலில் காய வைக்க வேண்டும்.

அதன் பின்பாக தேங்காய் எண்ணையை வடித்தால் மிகவும் தரமான எண்ணை கிடைக்கும். இந்த எண்ணை தனி வெள்ளை நிறத்தில் வரும். மிகவும் தரமான இந்தத் தேங்காய் எண்ணை வழமையான எண்ணையை விட 150 ரூபா முதல் 200 ரூபா வரையில் கூடுதல் விலைக்கு விற்பனையாகிறது.

தூய தேங்காய் எண்ணையை உற்பத்தி செய்து விற்பனை செய்வதைத் தனியே தொழிலாகக் கொண்டுள்ளவர்களும் உள்ளனர்.

தேங்காய் எண்ணை கொலஸ்ட்ரோல் உள்ளது. மரக்கறி எண்ணை கொலஸ்ட்ரோல் இல்லாத பாதுகாப்பானது என்பது வெறும் பொய். இது வியாபார நோக்கிலான ஒரு கட்டுக்கதை மட்டுமே. தேங்காய் எண்ணையை அளவுடன் சமையலுக்குப் பாவிப்பது நன்மையானதே.

ஒரு வளவில் தென்னம்பிள்ளைகளை நடுகை செய்யும் போது இரு மரங்களுக்கு இடையிலான இடைவெளி 21 அடி தூரமுள்ளதாகப் பார்த்துக் கொள்ளல் வேண்டும். வெளிநாட்டு ஹைபிறிற் இனங்களை விட எமது பாரம்பரிய இனங்களை நட்டுப் பயன்பெற்றவர்களே அதிகம். எமது பரம்பரை இனங்களே 50 முதல் 80 வருடங்கள் வரையில் பயன் தருகின்றன.

தென்னோலையை ஒரு நாளும் வெட்டக் கூடாது. ஓலையை வெட்ட வெட்ட மரத்தின் அடி சிறுக்கும் விளைதிறன் குறையும். அதாவது தேங்காய்கள் காய்க்கும் எண்ணிக்கை குறையும். இதனால்தான் பிள்ளையைக் கட்டி வளர் என எமது மூத்தோர்கள் கூறினார்கள்.

இயற்கை தந்த அற்புத வரமான தென்னைகளை வெறுமையான காணிகளில் நட்டு நன்கு பராமரித்து அதன் பயன்களைப் பெற்று வாழ்க்கைத் தரத்தை உயர்த்துவோம். நாட்டின் தேசிய வருமானத்தை உயர்த்துவோம். ■



செல்வழகன்

# அரிசி அரசியல்: அரசாங்கத்துக்குச் சாதகமானதா? பாதகமானதா?



கடந்த பல நாள்களாக - மாதக் கணக்கில் கூட காணாமல் போன மனிதர்கள் பட்டியல் போல பொருள்களின் பட்டியலும் கூடிச் செல்கிறது. பால்மாவை மருந்துக்கும் காண முடியவில்லை. நெட்டிசன்களின் கலக்கல் பகிடிகளில் பால்மா பிரதான பேசுபொருளாகி விட்டது. இப்போது கோதுமை மா, திரவ எரிவாயு, சீமெந்து என பொருள்களின் பட்டியல் நீண்டு செல்கிறது. நடப்பு நிலைமைகளைப் பார்க்கும் போது அரிசியும் அந்தப் பட்டியலுக்குள் நுழைந்து விடுமோ? என்று எண்ண வேண்டியுள்ளது.

அரிசி ஆலைகளுக்குள் புகுந்து நெல்லை மீட்டதாக அரசாங்கம் அறிவித்த ஆரவாரம் இப்போது குறைந்து விட்டது. இலங்கையின் அரிசி உற்பத்தியில் பெருமுதலை முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவின் சகோதரர் டட்லி சிறிசேன உட்பட அரிசி ஆலை உரிமையாளர்கள், அரசாங்கம் நிர்ணயித்த விலைகளில் அரிசியை உற்பத்தி செய்ய முடியாது என்று பகிரங்கமாகவே அறிவித்துள்ளனர். அவ்வாறு அரசாங்கம் அரிசி உற்பத்திக்கு நெருக்குதல் தருமானால் எதிர்காலத்தில் பாரிய தட்டுப்பாடு ஏற்படுவதைத் தவிர்க்க முடியாது என்றும் அவர்கள் எச்சரித்துள்ளனர்.

இலங்கையில் தனியார் நெற் களஞ்சியங்களில் இருந்து நெல்லை அரசாங்கம் கையகப்படுத்தி, நிர்ணய விலையை வழங்கியோ, எதுவும் வழங்காது பறிமுதல் செய்தோ இருக்கலாம். ஆனால் நெல்லை கூடுதல் விலைக்குப் பெற்ற ஆலை உரிமையாளர்கள் தொடர்ந்து நட்டமடைய எதிர்பார்க்க மாட்டார்கள். எனவே, அவர்கள் குறைந்தளவான கொள்வனவுடன் மட்டுப்படுத்தப்பட்ட அளவிலேயே உற்பத்தியைத் தொடர்வார்கள். இது அரிசிக்குத் தட்டுப்பாட்டை ஏற்படுத்தும். அரசாங்கம் குதர்க்கமாகச் சிந்தித்து வெளிநாடுகளில் இருந்து அரிசியை இறக்குமதி செய்தாலன்றி, இந்த நிலை ஏற்படவே செய்யும்.

சிறுபோகத்தில் இரசாயன உரங்கள் மற்றும் கிருமிநாசினிகள் கிடைக்காமல் நெல் உற்பத்தி பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளது. விளைச்சல் அரைவாசியாகக் குறைந்துள்ளது. இந்நிலை நீடித்தால் வரும் காலபோக நெல் உற்பத்தியிலும் பெருவீழ்ச்சி தவிர்க்க முடியாததாகி விடும். இலங்கை மக்களின் பிரதான உணவு நெல்லரிசிச் சோறே.



இலங்கை நெல் உற்பத்தியில் இதுவரை தன்னிறைவு காணவில்லை. மேலதிக தேவைக்கான நெல்லை இறக்குமதி செய்தே பெற்றுக் கொள்கிறது.

அரசாங்கத்தைப் பொறுத்தவரை வருமான மார்க்கங்கள் தடைப்பட்டு அல்லது மட்டுப்பட்டுப் போயுள்ளன. சமூக செலவீனங்கள் அதிகரித்துள்ளன. வங்குரோத்து நிலைமைக்குள் சென்று விடாமல் அதிலிருந்து மீள வேண்டிய கட்டாயத்துக்குள் அரசாங்கம் உள்ளது. சீனாவிடமிருந்து கந்துவட்டிக்கு வாங்கிய கடன்களை மட்டும் வைத்துக் கொண்டு நாட்டின் பொருளாதாரத்தை மீட்டெடுக்க முடியாது என்ற நிலை. அதனால்தான் சர்வதேச நாணய நிதியம், ஐரோப்பிய ஒன்றியம் ஆகியவற்றிடம் சரணடைந்துள்ளது. இந்தச் சரணடைதல் என்பது ஒரு வகையில் நாட்டை அடகு வைப்பதற்கு ஒப்பானதாகும். அந்த அமைப்புக்கள் விதிக்கும் நிபந்தனைகளுக்குக்

> **"சீனாவிடமிருந்து கந்துவட்டிக்கு வாங்கிய கடன்களை மட்டும் வைத்துக் கொண்டு நாட்டின் பொருளாதாரத்தை மீட்டெடுக்க முடியாது என்ற நிலை. அதனால்தான் சர்வதேச நாணய நிதியம், ஐரோப்பிய ஒன்றியம் ஆகியவற்றிடம் சரணடைந்துள்ளது. இந்தச் சரணடைதல் என்பது ஒரு வகையில் நாட்டை அடகு வைப்பதற்கு ஒப்பானதாகும்."**

கட்டுப்பட்டு, அவற்றை நிறைவேற்ற வேண்டிய கடப்பாடு இலங்கைக்கு ஏற்படும்.

மறுபுறத்தில் உள்ளூரில் அரசாங்கத்துக்குக் கிடைக்கும் வருமானத்தை, குறிப்பாக வரி வருமானத்தை அதிகரிக்கவும், சமூக செலவீனங்களைக் குறைக்கவும் வேண்டிய தேவை அரசாங்கத்துக்கு ஏற்பட்டுள்ளது. அரச நிறுவனங்களில் செயற்திட்டங்களுக்கு நிதி ஒதுக்கீடு செய்த நிலையில் இதுவரை ஆரம்பிக்கப்படாத திட்டங்கள் நிறுத்தப்பட்டுள்ளன. சம்பளத்துக்கு மேலதிகமான மேலதிக நேரக் கொடுப்பனவு, விசேட அலவன்சுகள் நிறுத்தப்பட்டுள்ளன. வருமான வரியினை முறையாகத் திரட்டும் வேலைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

அரிசி ஆலைகள், வர்த்தக நிறுவனங்கள் நுகர்வோர் பாதுகாப்பு அதிகாரசபைக்கு மேலதிகமாக சிவில் அதிகாரிகளாலும் கண்காணிக்கப்படுகின்றன. அரிசி ஆலைகளில் காலையில் இருந்த இருப்பு, உற்பத்தி செய்த அளவு, எந்தெந்த வர்த்தக நிலையங்களுக்கு எவ்வளவு அரிசி என்ன விலையில் விநியோகிக்கப்பட்டுள்ளது என்ற விபரம், மாலையில் உள்ள இருப்பு என்பன பிரதேச செயலகம் மற்றும் மாவட்டச் செயலகத்தினால் கேட்கப்படுவதாக அரிசி உரிமையாளர்கள் தெரிவிக்கின்றனர். அதுபோல வர்த்தக நிலையங்களில் பொருள்களின் விலைகள், இருப்பு என்பன கோரப்படுகின்றன. சிவில் அதிகாரிகளுக்கு மேலதிகமாகவும் கண்காணிப்பு இடம் பெறலாம். அத்தியாவசியப் பொருள்களை விநியோகிக்கும் செயற்பாட்டை ஒருங்கிணைக்க ஒரு இராணுவ அதிகாரி பல அதிகாரங்களுடனும் நியமிக்கப்பட்டுள்ளார். நுகர்வோர் பாதுகாப்பு அதிகார சபைத் தலைவரும் இராணுவ அதிகாரியே. இவர்களது கட்டளைகளைச் செயற்படுத்த வேண்டியவர்களாக அரசாங்க



அதிபர் மற்றும் பிரதேச செயலர் உள்ளிட்ட அரச அலுவலர்கள் உள்ளனர். எதிர்காலத்தில் தனியார் துறைக்கான உணவு விநியோகம் இந்தப் பொறி முறைக்குள்ளால் நடைபெறக் கூடிய ஏதுநிலை உள்ளது.

இது ஒரு வகையில் தனியார்துறையை முழு அளவில் கட்டுப்படுத்தும் செயற்பாடாகும். மறுபுறத்தில் தனியார்களின் வருமானத்தை இலகுவாகக் கண்டு பிடித்து, அவர்கள் செலுத்துகின்ற வரியை ஒழுங்குபடுத்த அரசாங்கம் எண்ணியிருக்கலாம். வரி ஏய்ப்பைக் கட்டுப்படுத்தி, கறுப்புப் பணத் திரட்சியைக் கட்டுப்படுத்தும் ஒரு பொறிமுறையாகவும் இது இருக்கலாம்.

இந்த நிலைமையானது சாராம்சத்தில் பாதகமானதே. டொலர் கையிருப்புக் குறைந்துள்ள அரசாங்கம், பெருமளவில் பொருள்களை இறக்குமதி செய்வது சாத்தியமானதல்ல. 1970களின் சிறிமா அம்மையாரின் அரசாங்கம் போல பொருள் தட்டுப்பாடும், நீண்ட வரிசையில் காத்திருந்து பங்கீட்டு அடிப்படையில் பொருள்களைப் பெறுவதுமான இழிந்த நிலையை இந்த அரசாங்கம் தோற்றுவித்து விடுமோ என்ற அச்சம் மக்கள் மத்தியில் உள்ளது.

அரசாங்கம் அரிசியில் கை வைக்கும் போது அரசியல் எப்படியாகுமோ? என்பதே இன்றுள்ள வினாவாகும். அரலிய குழுமம் இலங்கையின் அரிசி உற்பத்தியில் ஏகபோகத்தைக் கொண்டுள்ளது. அது டட்லி சிறிசேனவுக்குரியதாகும். அரசின் பங்காளிக் கட்சிகள் சில ஏற்கனவே முரண்பட்டு நிற்கின்றன. மைத்திரிபால சிறிசேன தலைமையிலான ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியும் முரண்பட நேர்ந்தால் அது கூட அரசாங்கத்துக்குப் பாதகமான நிலைமையை ஏற்படுத்தலாம் என்பதே இன்றுள்ள யதார்த்தமாகும். ■

# கிராமமா? சமூகமா?....

(04 ஆம் பக்கத்தொடர்ச்சி)

அதிகாரத்தின் கருவியாகவே செயற்படுகிறது. உண்மையில் இந்தப் புத்திசாலித்தனத்திற்கு எந்தவிதமான அதிகாரமும் இருப்பதில்லை. இவர்கள் தங்களிடமிருப்பதாகக் கற்பனை செய்யும் அதிகாரங்கள் எந்நேரமும் அவர்களது எசமானர்களால் வலுவிழக்கச் செய்யப்படலாம். இதனை உணராத மரபுசார்ந்த புத்திசாலித்தனங் கொண்டவர்களின் பெரும்பான்மையினாலேயே இன்று எமது சமூகம் ஆக்கிரமிக்கப்பட்டுள்ளது. இவர்கள் அந்நியர்கள் அல்ல. எம்மவர்களே.

சமூகங்களை மீள் எழுச்சி கொள்ளவைப்பதற்கும் சமூகங்களையும் கிராமங்களையும் மீளக்கட்டியமைத்து தேசத்தின் அத்திவாரங்களுக்கு அவற்றை மூலைக்கற்களாக நிலை நிறுத்துவதிலும் நாம் கடுமையாக உழைக்கவேண்டியுள்ளது. எமது மனிதவளமும் சிந்தனையாற்றல்களும் இயங்கு திறன்களும் சந்தையின் உற்பத்தி, பொருளாதாரத்திற்கு வேண்டிய உயிருள்ள உற்பத்தி இயந்திரங்களை உருவாக்குவதற்காக வடிவமைக்கப்பட்ட கல்வி, தொழிற் பயிற்சி மற்றும் வாழ்க்கை வழிகாட்டல் பொறிகளுக்குள் சிக்கவைக்கப்பட்டுள்ளது. இது இன்றைய தவிர்க்க முடியாத நிர்ப்பந்தமாக மாற்றமடைந்துள்ளது. ஆனால் அவை மாற்றப்படமுடியாதவை என்றோ மாற்றுத் தெரிவுகள் அற்றவை என்றோ வாழாவிருந்துவிடமுடியாது.

எம்முள் நிறைந்துள்ள மரபுரீதியான புத்திசாலித்தனத்தை எவ்வாறு சமூகப்பொறுப்புள்ள புத்திசாலித்தனமாக மாற்றியமைப்பது என்ற உரையாடலும் முயற்சிகளும் இன்று எமக்கு முதன்மையாக உள்ளது. இளைப்பாற்றுச் சம்பளத்துடன் கூடிய நிரந்தரமான உத்தியோகத்திற்காகத் தங்களது சமூகப் பொறுப்புக்களை புறந்தள்ளி கொத்தடிமைகளாக மாற்றப்பட்டுள்ள எமது பாரம்பரிய புத்திசாலித்தனப் பெருந்தொகுதியான மனிதவளம் -எம்மவர்கள். அவர்களுடன் திறந்த மனதுடன் உரையாட வேண்டியுள்ளது. சமூகத்தின் கூட்டு ஆளுமையினையும் ஆற்றல்களையும் ஒருங்கிணைத்ததாக வேடன் எங்கள் மேல் விரித்த பயம் என்னும் பரந்த வலையினையும் தூக்கிக்கொண்டு ஒருசேர மீள் எழும் அந்த உன்னத கணத்திற்காக எமது மரபுசார்ந்த புத்திசாலித்தனமும் உயிரியல்த் தன்மைகொண்டதும் சமூகத்தின் மூலவேரிலிருந்து முகிழ்த்தெழுந்து கிளை விரித்திருக்கின்ற புத்திசாலித்தனமும் இணையவேண்டும்.

கிராமத்தைக் கட்டமைப்பதும் சமூகத்தை மீள் எழுச்சிக்கு உந்துதல் என்பதும் அரசாங்கச் சுற்றறிக்கைகளினாலும் மேலிருந்து வரும் கட்டளைகளினாலும் சில கைநூல்களையும் வழிகாட்டிக்குறிப்புகளையும் பின்பற்றுவதாலும் வருவதல்ல. மாற்றங்கள் தானாக வருவதில்லை. ■

# புலம்பெயர் அமைப்புக்களை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கோட்டபாய அரசு இருக்கின்றது. பசில் ராஜபக்ஷவின் வருகையைக் கொண்டு பொருளாதார நெருக்கடிகளைச் சமாளித்துவிட முடியும் என்று கருதிய அரசு, அவரின் வருகையின் பின்தான் மேலும் நெருக்கடிகளைச் சந்தித்து வருகின்றது. மக்களுக்கு கொடுத்த வாக்குறுதிகள் எதையும் நிறைவேற்ற முடியாத நிலையே அரசிடம் இருப்பதாக எதிர்க்கட்சியும் தொடர்ச்சியாகக் குற்றச்சாட்டை முன்வைத்து வருகின்றது. இதனை விடத் தமிழ்மக்கள் மீது அரசு பிரயோகிக் கின்ற ஒடுக்குமுறை வடிவங்கள் முன்னெப்போதைய காலத்திலும் இல்லாத அளவுக்கு புதிய பரிமாணங்களைப் பெற்றிருக்கின்றது. தமிழ்த்தேசியக் கட்சிகளும் மறுபுறம் இந்த அரசைக் கையாளத் தெரியாமல் தடுமாறுகின்றன. இந்த நிலையில்தான் ஜனாதிபதியின் ஐ.நா. உரை சர்வதேசமட்டத்திலும் உள்நாட்டிலும் கவனத்தைப் பெற்றிருக்கின்றது.

கடந்த அரசுகளைப் போலவே கோட்டபாய அரசும் தமிழர் பிரச்சினைக்கு நியாயபூர்வமான வழியை கொண்டிருக்கவில்லை என்பதுதான் உண்மை. சர்வதேசத்தில் தனக்கு ஏற்பட்டிருக்கும் நெருக்கடி நிலையைச் சமாளிப்பதற்கு கையாளத்தக்க உபாயங்களைக் கடந்த அரசுகளைப் போலவே செய்திருக்கின்றது. மாறிமாறி அரசுக்கு வரும் கட்சிகள் பொய்யான வாக்குறுதிகளை சர்வதேசத்துக்கு வழங்கி தமிழ்மக்களின் எதிர்பார்ப்புக்களை நிறைவேற்றாது இழுத்தடித்துவருகின்றன. இதன் தொடர்ச்சிதான் புலம்பெயர்ந்த அமைப்புக்களுடன் பேசுவதற்கான ஜனாதிபதியின் அழைப்பு.

ஜனாதிபதியின் இந்த அழைப்புப் பல்வேறு வாதங் களைத் தமிழ்ப்பரப்பில் ஏற்படுத்தியிருக்கின்றது. குறிப்பாக தமிழ்மக்களின் ஏக கட்சியாக தம்மையே கருதிக் கொண்டிருக்கும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பை அரசு பொருட்படுத்தத்தக்க கட்சியாக இன்னும் கருதவில்லை என்பதை காட்டுவதாகக் கொள்ள முடிகின்றது. தமிழ்த் தேசியக் கூட்டமைப்புடன் அரசு பேசுவதாக அறிவித்திருந்தாலும் அது பற்றிய ஆக்கபூர்வமான நடவடிக்கைகள் இன்னும் மேற்கொள்ளப்படவில்லை என்பது இதனையே வெளிப்படுத்துகின்றது. நடைமுறையில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பும் ஒரு உறுதிப்பாடான கட்சியாக இல்லை என்பதும் அதன் அண்மைக்காலச் செயற்பாடுகள் வெளிப்படுத்தி வருகின்றன. ஐ.நாவுக்கு அறிக்கை அனுப்புவதிலேயே ஒருமைப்பாடு கொள்ளாத பங்காளிக் கட்சிகளைக் கொண்ட கூட்டமைப்பு எவ்வாறு தமிழ் மக்களின் பிரச்சினைகளைக் கையாள்வதில் ஒருமித்து நிற்கும் என்பதும் கேள்விக்குரியதே. இது ஒரு புறம் இருக்க ஜனாதிபதிக்குக் கூட்டமைப்பைக் கையாள்வதல்ல பிரச்சினை, சர்வதேச மட்டத்திலிருந்து வருகின்ற நெருக்கடிகளைக் கையாள்வதுதான் பெரும் பிரச்சினை. இதற்காக அவர் தன்னை ஜனநாயகப் பண்பு மிக்க அரச தலைவராக சர்வதேசத்துக்குக் காட்ட முனைந்திருக்கின்றார். இதன் ஒரு முகமே புலம்பெயர்ந்த தமிழர் அமைப்புக்களுடனான பேச்சுக்கான அழைப்பு.

இன்றைய ஜனாதிபதி ஆட்சிக்கு வந்தவுடன் புலம் பெயர் தமிழர் அமைப்புக்கள் பலவற்றை உள்நாட்டில் தடைசெய்திருந்தார். இந்தநிலையில் அவர், புலம் பெயர் தமிழ் அமைப்புக்கள் மீது எதிர் மறையான அபிப்பிராயத்தைக் கொண்டிருக்கிறார் என்பது வெளிப்படை. இவ்வாறான நிலையில் தடை செய்யப்பட்ட அமைப்புகளுடன் பேசுவதாக இருந்தால் அவற்றின் மீது விதிக்கப்பட்டிருக்கும் தடையை நீக்க வேண்டும். இதற்கு அரசு தயாராக இருக்குமா? என்பது முக்கியமான கேள்வியாகும். அவ்வாறு தடைகளை நீக்க விழைவதானது சிங்கள பௌத்த மக்களிடம் அவர் தோற்றுவிக்க முனையும் கதாநாயக விம்பத்தை நொருக்கியுடைப்பதாக அமைந்துவிடும். சிங்கள கடும்போக்கு வாதிகள் நாட்டில் ஆர்ப்பாட்டங்களையும் போராட்டங்களையும் முன்னெடுப்பதாக அமைந்துவிடும். ஏற்கனவே நாடு ஆர்ப்பாட்டங்களாலும் போராட்டங்களாலும் நெருக்கடிநிலையில் இருக்கின்றது. எதற்கு எந்த சட்டத்தைப் பிரயோகிப்பது என்ற தடுமாற்ற நிலையில் தான் அரசு இருக்கின்றது. இந்நிலையில் புதிய போராட்டக் களங்களைத் தானே திறந்துவிடும் என எதிர்பார்க்க முடியாது. சிங்கள கடும்போக்குவாதிகளும் புலம்பெயர் அமைப்புக்கள் மீது கடும் அதிருப்தியையே கொண்டிருக்கின்றனர். எனவே அரசு இந்த அழைப்பு, திறந்த அழைப்பாக அன்றி கபடத்தனம் மிக்க அழைப்பாகவே கருதத்தக்கது.

ஜனாதிபதியின் அழைப்பினைத் தொடர்ந்து நாடு கடந்த தமிழீழ அரசு வெளியிட்டிருந்த அறிக்கை அது. அரசுடன் பேசுவதாயின் பல்வேறு நிபந்தனைகளை விதித்திருக்கின்றது. அவற்றில் இரண்டு விடயங்கள் முக்கியமானவை. ஒன்று போர்க்குற்றங்களில் ஈடுபட்டவர்களுக்கு எதிராக அனைத்துலக நீதி விசாரணையையும் ஏற்படுத்தித் தமிழ் மக்களுக்கு நீதி வழங்குதல். இரண்டாவது பொது வாக்கெடுப்பு ஒன்றின் மூலமாக தமிழீழம் உள்ளடங்கலான அரசியல் தீர்வு. இந்த இரண்டும் அரசால் ஏற்றுக்கொள்ளப்படுமா? என்பது கேள்விக்குரியதே. அரசு, நாட்டில் போர்க்குற்றங்களே இடம்பெறவில்லை என்று முரண்டுபிடிக்கின்றது. அதை விட இனப்பிரச்சினையை உள்நாட்டுப் பிரச்சினையாகக் கொண்டு உள்நாட்டிலேயே விசாரணைகளை மேற்கொள்ள முடியுமே தவிர சர்வதேச நீதிமன்றத்தை நாடமுடியாது எனவும் தன் நிலைப்பாட்டைத் தொடர்ச்சியாக முன்வைத்து வருகின்றது. மற்றையது தமிழீழம் உள்ளடங்கலான அரசியல் தீர்வு என்பதற்கான பொது வாக்கெடுப்பு இதனை அரசு எவ்வகையிலும் ஏற்றுக்கொள்ளப் போவதில்லை. சர்வதேசமும் அதனை ஏற்றுக்கொள்ளப்போவதில்லை என்பதும் வெளிப்படை. குறிப்பாக இந்தியா ஒருபோதும் ஏற்றுக்கொள்ளாது. இந்தியாவின் நிலைப்பாட்டை அண்மித்ததாகவே சர்வதேச நிலைப்பாடுகளும் இருக்கும். எனவே பொருத்தமான கட்டமைப்பை நோக்கிய நகர்வுக்குப் புலம்பெயர் அமைப்புக்கள் தாயகத்தில் இருக்கின்ற தமிழ்த்தேசியக் கட்சிகளுடன் பேச்சுக்களை நடாத்திப் பொருத்தமான வழிமுறைகளைக் கையாள வேண்டும். மாறிவரும் உலகப் போக்கை விளங்கிக் கொண்டு அவை செயற்படுவது அவசியமாகும். குறைந்த பட்சம் தமிழ்த் தேசியக் கட்சிகளுடன் அரசு பேசி, தீர்வைக் காண்பதற்கான முன்னோக்கிய நகர்வுக்குச் சர்வதேச நாடுகளைப் பயன்படுத்தி பொருத்தமான அழுத்தங்களைப் பிரயோகிக்கக்கூடிய அமைப்புக்களாக அவை செயற்பட வேண்டும்.

அரசின் புலம்பெயர் அமைப்புக்களுடனான பேச்சுக்கான அழைப்பைத் தொடர்ந்து தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் பேச்சாளர் எம்.ஏ சுமந்திரன் தம் கட்சியின் நிலைப்பாட்டை அறிவித்திருந்தார். “அரசு எங்களுடன் பேசுவதற்காக இரண்டு மாதத்திற்கு முன்னரே அழைப்பு விடுத்தும் இன்னும் பேசவில்லை. அதற்காக நாங்கள் காத்திருக்கின்றோம். தமிழ் மக்களின் பிரதிநிதிகளான எங்களுடன் பேச மறுக்கும் ஜனாதிபதி நியூயோர்க்கில் இருந்துகொண்டு புலம்பெயர் தமிழர்களைப் பேச அழைப்பது வேடிக்கையானது. ஜனாதிபதி எங்களுடன் கட்டாயம் பேச வேண்டும் தமிழ்மக்களின் பிரதிநிதிகள் இங்கே இருக்கிறார்கள்” என்ற சாரப்பட தெரிவித்திருந்தார். உள்நாட்டில் பிரதிநிதிகள் இருக்கின்றபோது புலம்பெயர் அமைப்புக்களுடன் பேசுவது கூட்டமைப்பைப் பொறுத்தவரையில் தம்மை அரசு அவமதிக்கின்றது என்ற தோற்றப்பாட்டையே ஏற்படுத்துவதாக கருத இடந்தருகின்றது. சுமந்திரனின் கூற்று இதனையே வெளிப்படுத்துகின்றது.

அரசும் புலம்பெயர் அமைப்புக்களும் பேசுவதைவிட தமிழ்த்தேசியக் கட்சிகளும் புலம்பெயர் அமைப்புக்களும் முதலில் பேசுவதுதான் முக்கியமானது. இனப் பிரச்சினை தீர்வு விடயத்தில் புலம்பெயர் தமிழர்களின் பங்களிப்பும் முக்கியமானது. இதனை இங்குள்ள தமிழ்த் தேசியக் கட்சிகள் புரிந்துகொள்ள வேண்டும். இதனை விடப் புலம்பெயர் அமைப்புக்களும் தமிழர் பிரச்சினையை யதார்த்தமான முறையில் கையாள வேண்டும். கடந்த காலங்களைப் போன்ற நிலைப்பாடுகள் நிரந்தரத் தீர்வை நோக்கிய தமிழர்களின் நகர்வுக்குத் தடையாகவே இருக்கும். எனவே புலம்பெயர் அமைப்புக்களும் இங்குள்ள கட்சிகளும் தமக்குள் ஒருமைப்பாட்டை ஏற்படுத்தி பேச்சுக்களை நடாத்தி தமிழ் மக்களின் பிரச்சினையை சர்வதேச மயப்படுத்தித் தீர்வை நோக்கி நகர செயற்படுவது மிகவும் முக்கியமாகும்.

■

# மக்கள் என்ன சொல்கிறார்கள்...

(முதலாம் பக்கத்தொடர்ச்சி)

மூடப்பட்டுள்ளன. குறிப்பாக சுற்றுலாத்துறை, ஆடை உற்பத்தித் துறை, சிறு விவசாய உற்பத்திகள் என ஏற்றுமதிப் பொருளாதாரம் முழுமையாக அடிவாங்கியுள்ளது. ஏற்கனவே சிறிலங்காவின் தேயிலைப் பொருளாதாரம் உலகச் சந்தைக்கு நிகராகத் தன்னை மாற்றியமைத்து முன்னேற முடியாமல் சிக்கி விழி பிதிங்கி நிற்கும் இந்த நேரத்தில் அதிகளவிலான பணம் அச்சிடப்பட்டு சந்தையில் விட வேண்டிய தேவை எதற்கு?

உள்நாட்டுத் தேவைகளுக்காக உற்பத்தி செய்யப்படும் அத்தனை பொருட்களும் வழமையான நுகர்வின்றி தேங்கிக் கிடக்கிறது. ஏற்றுமதிப் பொருளாதாரமும் பெருமளவில் அடிவாங்கிக் கிடக்கிறது. அந்நிய செலாவணியை ஈட்டுவதற்கு வழியின்றி, வெளிநாடுகளில் வேலை செய்யும் இலங்கையர்களை வெளிநாட்டு நாணயத்திலேயே சிறிலங்காவில் சேமிப்பை வைக்கும் படியும் அதனை ஊக்குவிக்கும் முகமாக பல சலுகைகளையும் சிறிலங்கா அரசு அறிவித்திருக்கிறது. இப்படிப்பட்ட நிலையில் அதிகளவிலான பணத்தை அச்சிடுவதன் நோக்கம் என்னவாகவிருக்கும் என்பதை ஆழமாகப் பார்க்க வேண்டிய தேவையிருக்கிறது” என்று கேள்விகளை எழுப்புகிறார் மா.குருபரன்.

துறைமுகக் களஞ்சியத்திலிருந்த பொருட்களை வெளியே எடுத்து அதை மலிவு விலைக்குத் தனியாருக்குக் கொடுத்து விட்டு, பிறகு அந்தப் பொருட்களை அரசாங்கமே அதிக விலை கொடுத்து மக்களுக்கு வழங்குகிறது. நேற்றிரவு வெள்ளைப் பூண்டைத் திருடி இப்படி விற்றிருக்கிறார்கள். இதைப்பற்றி பாராளுமன்ற உறுப்பினர் மனோ கணேசன் தொலைக்காட்சி விவாதமொன்றில் பகிரங்கமாகவே கேள்வி எழுப்பியிருக்கிறார். அந்த நிகழ்ச்சியில் அரசாங்கத் தரப்பு பாராளுன்ற உறுப்பினர்கள் திஸ்ஸ குட்டியாராச்சி, மிலான் ஜெயதிலக மற்றும் எதிர்த்தரப்புப் பாராளுமன்ற உறுப்பினர் மனுச நாணயக்கார ஆகியோரும் கலந்து கொண்டனர்.

மனோ கணேசன் கூறியது இதுதான் - “டொலர் பிரச்சினையால் துறைமுகத்தில் தேங்கி இருக்கும் இறக்குமதி செய்யப்பட்ட, உணவு பொருட்களை அரசாங்கமே பொறுப்பெடுத்து நாட்டுக்குள் கொண்டுவந்து பொது மக்களுக்கு மலிவான விலையில் கொடுங்கள்” என சதோச (CWE) என்ற அரச நிறுவனத்துக்குப் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ பணிப்புரை விடுத்தார். ஆகவே துறைமுகத்தில் இருந்த ஒரு வெள்ளைப்பூண்டு கொள்கலன் “சதோச” வின் களஞ்சியசாலைக்கு வந்தது.

அப்புறம் நடந்ததுதான் சுவாரசியம்.

“சதோச”வின் ராகம களஞ்சியசாலைக்கு வந்த வெள்ளைப்பூண்டு கொள்கலன் அப்படியே நள்ளிரவில் “பில்” கூடப் போடாமல் ஒரு தனியார் நிறுவனத்துக்கு கிலோ 145/ஸ்ரீ கணக்கில் கொடுக்கப்படுகிறது.

அதன் பின் நிகழ்ந்தது, அதைவிட மகா சுவாரஸ்யம்.

அப்படி நடந்தது என்ன?

இப்படி நள்ளிரவில் கொடுக்கபட்ட அதே வெள்ளைப் பூண்டு கொள்கலனை அதே “சதோச” நிறுவனம் கிலோ 445/= கணக்கில் மீண்டும் வாங்குகிறது. அதன் பின் அது கிலோ 500/= மேல் அப்பாவி வாடிக்கையாளர் பொது மக்களுக்கு நாடு முழுக்க உள்ள “சதோச” முகவர் நிலையங்கள் மூலம் விற்கப்படுகிறது.

இதுதான், “வெள்ளைப்பூண்டு நள்ளிரவு கொள்ளை” இப்படியே இதற்கு முன்னும் சீனி, பால்மா, மாவு, உளுந்து ஆகிய கொள்கலன்கள் விற்கப்பட்டதாக இப்போது இந்த பகல் கொள்ளைக்குத் துணை போக முடியாமல் மனம் நொந்து பதவி விலகும் பாவனையாளர் அலுவல்கள் அதிகாரசபை நிர்வாக இயக்குனர் துசான் குணவர்த்தன கூறுகிறார்” என.

இதற்கு என்ன பதிலைச் சொல்லப் போகிறார்கள்? இது என்ன அடிப்படையில் நடக்கிறது? இதற்கு யார் பொறுப்பேற்பது? மக்களை என்னவென்று எண்ணிக் கொண்டிருக்கிறார்கள்? அறுதிப் பெரும்பான்மை தங்களிடம் இருக்கிறது என்பதற்காக இப்படி அநீதியாக நடந்து கொள்ள முடியுமா?

இதைப்போலத்தான், சீனியைப் பதுக்குவதற்கு வாய்ப்பைக் கொடுத்து விட்டு, பின்னர் அதை மீட்டதாகச் சொல்கிறது அரசாங்கம். வத்தளை - கெரவப்பிட்டிய என்ற இடத்தில் உள்ள களஞ்சியத்திருந்து கடந்த ஓகஸ்ட் 31 இல் 4096 மெற்றிக் தொன் சீனி கைப்பற்றப்பட்டு, குறித்த களஞ்சியசாலைக்குச் சீலும் வைக்கப்பட்டது. இந்தப் படங்காட்டுதல் ஒன்றும் மக்களுடைய பிரச்சினைகளைத் தீர்த்து வைக்காது.

இவ்வாறே அரிசிக்கு நிர்ணய விலை என்று சொல்லிவிட்டு அரசித்தட்டுப்பாட்டை செயற்கையாக உருவாக்குகிறது. பிறகு அரிசி ஆலைகளைச் சுற்றி வளைத்துப் பதுக்கல்களைக் கண்டு பிடித்து விட்டோம் என்று காட்டுகிறது. இப்பொழுது 100000 மெற்றிக் தொன் அரசியை இறக்குமதி செய்வதற்கு அரசாங்கம் தீர்மானித்துள்ளது. அப்படிச் செய்தால் பதுக்கப்பட்ட நெல்லும் அரிசியும் சந்தைக்கு வரும் என்று யாரோ அரசாங்கத்துக்கு ஆலோசனை சொல்லியிருக்கிறார்கள். இது ஒரு வகையில் நியாயமான நடவடிக்கைதான். ஆனால் இது சரியான ஒரு தீர்வல்ல. இதற்கிடையில் அரிசியை இறக்குமதி செய்வதற்கான அமைச்சரவை அனுமதி கிடைத்தும் உள்ளது.

மேலும் யுகதனவி மின் உற்பத்தி நிலையத்தில் 40 சதவீத பங்குகளை அமெரிக்காவின் New Fortress Energ நிறுவனத்திற்கு நள்ளிரவில் விற்பனை செய்துள்ளது அரசாங்கம். நாட்டைக் காப்பாற்றப் போகிறோம் என்ற பொது ஜனபெரமுனவும் அதனுடைய பங்காளிகளும் என்ன செய்து கொண்டிருக்கிறார்கள்? என்று கேள்வி எழுப்புகின்றனர் அந்தத் தரப்புக்கு வாக்களித்த மக்கள். இதையெல்லாம் வலுவான எதிர்ப்பு ஆயுதங்களாக எடுத்துக் கொண்டு மக்களிடம் செல்வதற்குப் பொருத்தமான எதிர்த்தரப்பும் இல்லை. அதற்கான காலச் சூழலும் இல்லை. முக்கியமாக கொவிட் 19 உண்டாக்கிய நெருக்கடி அரசாங்கத்துக்கு மிகப் பெரிய வாய்ப்பைக் கொடுத்துள்ளது.

பெரிய பிரச்சினைகள் எல்லாவற்றையும் கொவிட் 19 இனுடைய தலையில் கட்டி விடலாம். எதிர்த்தரப்புகளின் போராட்டங்களையும் மக்களுடைய அதிருப்தியையும் கொவிட் 19 ஐ முன்னிறுத்தித் தடுத்து விடலாம். எப்படியோ எல்லாவற்றிலிருந்தும் தப்பித்துக் கொள்வதற்கு அரசாங்கத்துக்கு ஆயிரம் வாசல்களையும் மறைந்து கொள்வதற்கு ஆயிரமாயிரம் திரைகளையும் கொடுத்துக்கொண்டிருக்கிறது கொவிட் 19.

இதனால்தான் லொக்டவுணைப் போடுவதற்கு முன்பு அது பிடிவாதமாக மறுத்தது. இப்பொழுது லொக்டவுணை எடுப்பதற்குப் பின்னடிக்கிறது. அதாவது இந்தச் சூழலை கனதியாக்குவதே அரசாங்கத்தின் நோக்கமாகும்.

இதையெல்லாம் விளங்கிக் கொண்டு மக்களுக்கான அரசியலை முன்னெடுக்கும் வலுவான எதிர்த்தரப்புகள் இல்லை. இரண்டு எதிர்த்தரப்புகளே இதில் முக்கியமானவை. ஒன்று ஜே.வி.பி. அது குரலே அற்றுக் கிடக்கிறது. அதற்குள்ளே குமைந்து கொண்டிருக்கும் பிரச்சினைகள் அதனுடைய அரசியற் பயணத்தைத் தளர்வாக்குகின்றன. இதனால் ஜே.வி.பியின் பாத்திரம் இன்று பெருமளவுக்கும் இல்லை என்றே சொல்லலாம்.

அடுத்தது ஐக்கிய மக்கள் சக்தி. இதில் முக்கியமானவர் சஜித் பிரேமதாச. பொதுவாகச் சொல்லப்போனால் அனுகூலங்கள் அதிகமாகப் பெற்ற ஒரு தலைவர் எனலாம். தமிழ், முஸ்லிம், மலையக சக்திகளின் ஆதரவோடு பாரம்பரிய ஐ.தே.கவினரின் ஆதரவையும் பெற்றவர் சஜித். கூடவே எதிர்க்கட்சித் தலைவராகவும் இருக்கிறார்.

இப்படியான வாய்ப்புகளோடு இருக்கின்ற சஜித் பிரேமதாச இன்றைய நெருக்கடியில் தனக்கான கதவுகளைத் திறப்பது மட்டுமல்ல மக்களுக்கான வாசல்களையும் திறக்க வேண்டிய வரலாற்றுப் பொறுப்பில் உள்ளார். காலம் அந்த வரலாற்றுப் பாத்திரத்தை அவரிடமே வழங்கியுள்ளது. அதை அவர் சீராகச் செய்யவில்லை என்றால் வரலாறு அவரைக் கழித்தே தீரும்.

ஆனால் சஜித் என்ன செய்கிறார் என்றால் இந்த மாதிரியான குறைபாடுகளையெல்லாம் ஒரு குற்றப்பத்திரமாக்கிக் கொண்டு பௌத்த பீடங்களிடம் போய்க் கொடுத்து மன்றாடுகிறார். பாருங்கள் எவ்வளவு அநீதி நடக்கிறது. இதை நீங்கள்தான் பார்த்துக் கொள்ள வேண்டும். கேட்க வேண்டும் என்பதைப்போல நடந்து கொள்கிறார்...

இதில் இரண்டு அபாயங்களும் தீவினைகளும் உண்டு.

ஒன்று சஜித் இலங்கையின் அரசியலை மேலும் பௌத்தமயமாக்க விளைகிறார். இது மிகப் பெரிய கேடாகும். ஒரு மக்கள் அரசியல் தலைவர் ஒரு போதும் இதைச் செய்ய மாட்டார். ஏற்கனவே அரசியலில் பௌத்த பீடங்களின் தலையீடுகளும் செல்வாக்கும் அதிகம்.
அப்படியிருக்கும்போது இந்த மாதிரியான முறைப்பாடுகளை அவர்களின் காலில் கொண்டுபோய் வைப்பது என்பது எதிர்காலத்தில் ஏராளம் நெருக்கடிகளைக் கொண்டு வரக் கூடியது. ஆகவே அவர் இதற்குப் பதிலாக மேலும் வெளியே உள்ள ஜே.வி.பி உள்ளிட்ட எதிர்த்தரப்புகளையும் அரசினுள்ளே இருக்கும் அதிருப்தியாளர்களையும் சேர்த்துக் கொண்டு இதையெல்லாம் எதிர்க்கக் கூடிய வியூகத்தை வகுக்க வேண்டும். முதலில் இவற்றை வெளியே அம்பலப்படுத்துவதற்கான ஒரு பொறிமுறையை உருவாக்க வேண்டும். மக்கள் முன்னே இவற்றைப் பற்றிய உண்மைகளை முன்வைக்க வேண்டும்.

இரண்டாவது மக்களிடம் தொடர்ந்து உரையாடிக் கொண்டிருப்பது அவசியம். அதுவே இன்று அவசியமானது. அரசாங்கம் என்ன மாதிரிச் சிந்திக்கிறது என்பதையிட்டு மக்களுக்கு இன்று ஏகப்பட்ட குழப்பங்கள். ஆனால் ஒன்றை மட்டும் அவர்கள் தெளிவாகப் புரிந்து கொண்டுள்ளனர். அரசாங்கம் தளர்ந்து போயுள்ளது என்பதை. ஆகவே இந்தச் சூழலில் நாடு எப்படியான நிலையில் உள்ளது? எங்கே கொண்டு செல்லப்படுகிறது? இதை சரியாக்குவதற்கு என்ன செய்ய வேண்டும் என எதிர்த்தரப்புகள் வழிகாட்ட வேண்டும்.


அவற்றுக்கே இன்றைய வரலாற்றுக் கடப்பாடுகள் அதிகம்.

அரசாங்கம், தன்னைக் காப்பாற்ற முற்பட்டு மக்களைக் கை விட முயற்சிக்கிறதா? அல்லது மக்களைக் காப்பாற்ற வேண்டும் என்பதோடு தன்னையும் காப்பாற்றிக்கொள்ளப்போகிறதா? இந்தக் கேள்வியின் முன்னே மக்களாகிய நாம் நிற்கிறோம்.

■




## வர்ணம் தீட்டுங்கள் பரிசை வெல்லுங்கள்



முழுப்பெயர்:- ..........................................................................

தரம்:- ......................................................................................

கற்கும் பாடசாலை:-..........................................................

விலாசம்:- ...............................................................................

..............................................................................


தொலைபேசி இலக்கம்:-...........................................................

பிள்ளைகளே!

உங்கள் எண்ணங்களிலிருந்து வண்ணங்கள் ஆக்கி எமக்கு அனுப்புங்கள். அழகான வண்ணத்துக்குப் பரிசும் கௌரவமும் உண்டு. நீங்கள் படத்துடன் இக்கூப்பனையும் நிரப்பி அனுப்புங்கள். அழகான வண்ணப்படத்திற்குரிய பரிசை உங்களுக்காக வாண்டு மாமா தருகிறார்.


*அனுப்பவேண்டிய இறுதித் திகதி* ***07.10.2021***

# வாத்தின் நட்பு



ஒரு ஊரிலே இரண்டு முயல்கள் நண்பர்களாய் இருந்தன. அவை இரண்டும் ஒன்றாகப் படித்தன. அந்தப் பள்ளிக்கூடத்திற்கு வாத்துப் புதிதாக வந்தது. மான் ஆசிரியர் அந்த வாத்தை எல்லாருக்கும் அறிமுகம் செய்தார். எல்லாப் பிள்ளைகளுக்கும் வாத்தைப் பிடித்துப் போனது. இரண்டு முயல்களுக்கும் ஏனோ பிடிக்கவில்லை. வாத்து, முயல்களோடு பழக ஆசைப்பட்டது. முயல்கள் வாத்தினைக் குறை சொல்லி ஒதுக்கின. ஒரு நாள் முயல்களில் ஒன்று குளத்திலே தவறி விழுந்தது. அந்தக் குளம் ஆழம் கூடியது. வாத்து குளத்திலே குதித்து முயலைக் காப்பாற்றியது. தங்களுடைய தவறினை உணர்ந்த மூவரும் நண்பர்களாயினர்.

**த.அக்ஷிதா**
தரம் 07
யா/இந்து மகளிர் கல்லூரி



## மல்லிகை

வெள்ளை வெள்ளை மல்லிகை
வாசம் தரும் மல்லிகை
பஞ்சு போன்ற மல்லிகை
கொடியில் மலரும் மல்லிகை
வீட்டில் நாம் வளர்த்திடுவோம்
தினமும் பூ பறித்திடுவோம்

**பி.டக்ஷியா**



கடந்த வர்ணம் தீட்டும் போட்டியில்
பரிசை வெல்பவர்
**செல்வன் யூட்ரவிநாத்**
தரம் - 06
யா/இந்துக் கல்லூரி

## பாராட்டு பெறுபவர்கள்

**வே.வர்ஷினி**
தரம் - 04
யா/இமையாணன் அ.த.க.வி

**த.தர்மிகன்**
தரம் - 02
யா/உடுப்பிட்டி அ.மி.க

**வி.சுவர்ணவி**
தரம் - 02
யா/அச்சுவேலி சென்திரேசா மகளிர் கல்லூரி

**க.சபின்**
கலைவாணி முன்பள்ளி
ஆழியவளை

**சி.அப்ஷலா**
தரம் - 05
யா/வதிரி வடக்கு மெ.மி.த.க பாடசாலை

**செ.கிருஜன்**
தரம் - 09
யா/ஹாட்லி கல்லூரி

# வித்தியாசமான பவளப் பாறைகள்



இந்த பிரபஞ்சத்தின் பெரும்பாலான பகுதி, கடல் நீரால் சூழப்பட்டுள்ளது. அதில் மீன்களைத் தவிர, வித்தியாசமான எண்ணற்ற உயிரினங்கள் வாழ்ந்து வருகின்றன.

பவளப்பாறைகள் பாறை என்று சொல்லப்பட்டாலும், இதற்கும் உயிர் உண்டு. இவை நுண்ணுயிரிகளை உண்டு வாழ்கின்றன. பவளப்பாறையானது, கடினத்தன்மை, மிருதுவானவை என்று இருவேறு வகைகளில் காணப்படுகின்றன. கடினமானவை பாறைகள் போன்றும், மிருதுவானவை செடி, கொடிகளைப் போன்றும் இருக்கும். பவளப் பாறைகள், சுண்ணாம்புக் கற்களால் ஆன உயிரினம்.

இவற்றின் உள்ளே பாலிப்ஸ் என்ற பகுதி உள்ளது. இதுதான், பவளப்பாறையின் ஆன்மா போன்றது. இது இறந்து விட்டால், பவளப்பாறையும் இறந்து போய்விடும். பாலிப்ஸ் தான், கடலில் உள்ள சுண்ணாம்பை எடுத்துக்கொண்டு பவளப்பாறைகளுக்கு கடினத் தன்மையையும், பலவிதமான தோற்றத்தையும் தருகின்றன.

கடல் இருக்கும் எல்லா இடங்களிலும் பவளப்பாறைகள் காணப்பட்டாலும், இந்தியாவில் மட்டும் 200 வகையான பவளப் பாறைகள் இருக்கின்றன. இந்தப் பவளப் பாறைகள், பல உயிரினங்களுக்கு புகலிடமாக உள்ளன. பலவிதமான கண்ணைக் கவரும் மீன்கள், பாசி வகைகள், பாலூட்டிகள், ஒட்டு உயிரினங்கள், முள் தோல் விலங்குகள் போன்றவை பவளப்பாறைகளை இருப்பிடமாகக் கொண்டுள்ளன. பவளப்பாறைகள் உறைவிடமாக மட்டுமின்றி, பல கடல் உயிரினங்களின் உணவிடமாகவும் இருக்கிறது.

கடலோரப் பகுதிகளை மண் அரிப்பில் இருந்து பாதுகாக்கும் பணியையும், இந்தப் பவளப்பாறைகள் செய்கின்றன. வளிமண்டலத்தில் கரியமில வாயுவின் அளவைக் குறைத்து, சுற்றுப்புறச்சூழலை மேம்படுத்துவதிலும், இவற்றின் பங்கு அதிகம்.



**சிறுவர் பகுதிக்கான உங்கள் சொந்த ஆக்கங்களை எங்களுக்கு உடனே அனுப்பி வையுங்கள்**

**தீம்புனல்**
கனகசபை கட்டடத் தொகுதி
பருத்தித்துறை வீதி, நெல்லியடி.
தொ.பே.: 021 226 2564

இப் பத்திரிகையானது பருத்தித்துறை வீதி, நெல்லியடியில் அமைந்துள்ள Needa media corporation (PVT) LTD இனால் 02.10.2021 அன்று ஜெயஸ்ரீ அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.